# A MEMOIR OF THE REV. T. G. RAGLAND. B. D.

BY

THE REV. JOS. CORNELIUS. C. M. S.

NORTH TINNEVELLY.

Palamcottah:

PRINTED FOR THE COMPILER AT THE
Church Mission Press,
BY L. DEVANAYAGAM PILLAY.

1871.

கனம் :

# தி. ஜீ. இராக்லாந்தையரின் ஜீவியசரிதை.

இங்கிலீஷிலிருந்து சுருக்கி
தமிழில் திருப்பப்பட்டது.

தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள். எபி. 13. 7.

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள். 1 கொரி. 11. 1.

பாளையங்கோட்டை :

சர்ச்சு மிஷியன் அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.

1871.

# INTRODUCTION.

It is with peculiar pleasure that I present this small work to the notice of the Tamil Christian community. It contains a short account of a great and good man who lived in the midst of them. It was my privilege to be associated with him for more than 5 years. This period and the few months of my connection with the Rev. R. T. Noble in Masulipatam, I consider the happiest portion of my life. It was in them that I saw much of the beauty of holiness which should adorn the character of a Christian. Would that this depth of piety were more common among Christians!

I have long felt a wish to give publicity to the Grace of God exemplified in the character of these good men, and the paucity of such books in the Tamil language renders it highly desirable. With this object I have endeavoured to give an abridged translation of the original memoirs of the Rev. T. G. Ragland. In the translation, it has been my effort to preserve those important facts and letters which I had reason to think would be of service to the Tamil Christians among whom he lived and died. To abridge it further still, would I think mar the usefulness of the book to such an extent as to defeat my object, and in this opinion I feel thankful to say several of the Tinnevelley Missionaries also concurred.

That the Lord may pour down His Spirit upon the Native Christians who may be lead to peruse this work and teach them to follow the example of his godly life is my earnest prayer.

Paneiadipatty,
September 20th 1871.

JOS. CORNELIUS.

சுதேசக் கிறிஸ்தவராகிய பிரிய சகோதரரே! ஞானியோடு சகவாசஞ்செய்கிறவன் ஞானியாவானென்று மகா ஞானியாகிய சாலோமோன் சொல்லியிருக்கிறது எவ்வளவோ அருமையான வாக்கு! நாமதிகமாய்ப் பழகிப்பேசிச் சகவாசஞ்செய்கிறபேர்களுடைய குணமும், பேச்சும், நடத்தையுந்தானே நமக்குப் படிகிறது. இது உலகத்தில் வாஸ்தவமான காரியமே. நாம் பக்திசாலிகளாகிய மகாத்துமாக்களோடு ஊடாடிச் சங்காத்தஞ்செய்துவர நம்மிடத்திலும் பக்தி முயற்சி உண்டாகும். ஆனால் அப்பேர்ப்பட்டவர்கள் அநேகரில்லை. அவர்களை எல்லா இடங்களிலுங்காண்பதும் அருமை. அவர்களோடு ஜீவனாந்தங்கொண்டாட்டஞ்செய்யும் சலாக்கியமும் வெகு சொற்பப்பேருக்குத்தான் கிடைக்கக்கூடியது. இம்முகாந்தரத்தையிட்டே விவேகஸ்தராகிய அங்கிலேயர் அப்பேர்ப்பட்ட தேவதா பக்தர்களுடைய ஜீவியசரிதைகளை எழுதி, சகலத்திராளுக்கும் உபயோகப்படும்படி அவைகளை அச்சிட்டுப் பிரசுரஞ்செய்துவருகிறார்கள். அங்கிலோ பாஷையில் இவ்வித சரித்திரங்கள் அனேகமாயுண்டு. நம்முடைய பாஷையிலோ அத்தி பூத்ததுபோல அபூர்வம். ஆனதன்மையால், சென்னபட்டணத்திலும், வடதிருநெல்வேலியிலும் சிலகாலம் இருந்து மரித்துப்போன ஒரு பக்திமானுடைய ஜீவிய விருத்தாந்தத்தை தமிழ்க் கிறிஸ்தவர்களாகிய உங்களுக்குப் பிரயோசனப்படும்படி, இங்கிலீஷிலிருந்து சுருக்கிப் பிரசுரம் செய்யத் துணிந்தேன். அந்த மான

பாவரோடு நான் ஐந்து வருஷம் கூடிஆடிப் பழகி
இருக்கும்படிக்கான சலாக்கியம் எனக்குக் கிடைத்
ததென்பதை இவ்விடத்திற் சொல்லாமல்விடப்ப
டாது. இதினால் நான் அநேகரைவிட ஒருவகையாய்
அதிகம் பெற்றுக்கொள்ள இடம் இருந்தது. ஆகச்
சே அதிகம் என்னிடத்திற் கேட்கப்படும் என்கிற
தும் நான் மறக்கத்தக்கதல்ல. இந்தப் பெரியவரு
டைய சரித்திரத்தை வாசிக்கிறபேர்கள், தாங்களும்
ஏன் இவரைப்போல இருக்கக்கூடாதென்று பிரச்
சனைபண்ணிப்பார்ப்பது எவ்வளவோ அவசியம்.
இவருக்கும் கிடைத்த தேவானுக்கிரகம் நமக்கும்
கிடைக்கக்கூடியதுதானே. இவர் அந்நிய தேசத்தா
ருக்காக இவ்வளவு செய்திருக்க, நாமோ சுதேசஸ்த
ருடைய நன்மையையும் இனத்தாருடைய ஆத்தும
பலத்தையும்வேண்டி ஒன்றுவதுசெய்யாமல் இருப்
பது தர்மமா? இப்பேர்ப்பட்ட மகாத்துமாக்களு
டைய சரிதைகளை வாசிக்கிறபோது, "நீயும்போய்
அப்படிச்செய்" என்று ஆவியானவர் நமக்குச்சொல்
லுகிறதுபோலில்லையா? இந்தவகையான உணர்ச்சி
யைத் தேவன் சிலருக்குள்ளேயாவது எழுப்பிவிடு
வாரானால் நமக்கு எவ்வளவோ பாக்கியம்! இந்தப்
புருஷோத்தமனைப்போலொத்த பக்திமான்கள் நம
க்குள்ளே தோன்றுவார்களேயானால், நம்முடைய
தேசஸ்தருக்கு அவர்கள் மூலமாய் எவ்வளவோ நன்
மை பலிக்கும். இந்த நம்பிக்கையோடு நீங்கள் கர்த்த
ரைநோக்கித் தினசரி கருத்தாய் செபித்துவரும்படி
பிரார்த்தித்து நிற்கிற உங்கள் பிரிய சிநேகிதன்

Paneiadipatty,
September 20th 1871.

JOSEPH CORNELIUS.

# முகவுரை.

மிஷனெரிகள் என்னப்படுகிற குருக்கள் அநேகர் கிறிஸ்துமார்க்கத்தைப் போதிக்க, இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக பிறதேசங்களிலிருந்து இத்தேசத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் நோக்கம் ஒன்றுபோலிருந்தாலும், கல்வித்திறமையிலும், யுத்திசாமர்த்தியத்திலும் வித்தியாசப்பட்டவர்கள். அவர்கள் அந்த நோக்கத்தைப் பலவகையான பிரயெத்தனங்களைக்கொண்டு நிறைவேற்றப்பார்த்து, பலவிதமான நன்மைகளைச்செய்தார்கள். சிலர் சூரியசந்திரனைப்போல எந்நேரம்பார்த்தாலும் ஓயாமல் ஒளியைவீசி, காந்தியை அளித்து, இருளை அகற்றி, மற்றவர்களுக்குச் சந்தோஷத்தையும் சொல்லிமுடியாத பிரயோசனத்தையும் உண்டுபண்ணினார்கள். வேறு சிலர் இவ்வளவாகப் பிரகாசியாவிட்டாலும், தேவன் தங்களுக்கு அளித்த கிருபையின் அளவுக்குத்தக்கதாய் இரா இருட்டில் மினுங்குகிற நட்சத்திரங்களைப்போல பிரகாசித்தார்கள். முந்திச் சொன்னவர்கள் பெரிய நதியைப்போல சென்றவிடமெல்லாம் சிறப்பையும் செழிப்பையும் கொடுத்தார்கள். பிந்திச் சொன்னவர்கள் சிறு வாய்க்கால்களைப்போல எட்டுமட்டும் பாய்ந்து, தங்களாலானமட்டும் பிரயோசனமுள்ளவர்களாயிருந்தார்கள். மற்ற தேசங்களைவிட இத்தேசத்திற்குவந்த போதகன்மார்களுடைய தொகைஅதிகம். இத்தேசத்தில் மற்றநாடுகளைவிட நாமிருக்கும் தென்இந்தியாவாகிய இந்தநாடுதான் இவ்வகையில் விசேஷித்த சலாக்கியம் பெற்றிருக்கிறது. நமக்குள் வந்து வாசஞ்செய்து, திவ்விய சத்தியங்களைக் கருத்தாய்ப் போதகம்பண்ணி, தங்கள் பரிசுத்த நடக்கையினால் அந்தப் போதகத்தை அலங்கரித்து, கடைசியில் தங்

கள் சேவையும் நமக்காகக் கொடுக்க மனமுள்ளவர்களாய், நம்முடைய தேசத்திலேதானே மரித்து அடக்கம்பண்ணப் பட்டிருக்கிற மகாத்துமாக்களை நாம் லேசில் மறந்துவிடலா காது. போர்க்களத்தில் தங்கள் சேவையும் வெறுத்து, யுத்தம் செய்து, பலத்த இராச்சியங்களை ஸ்தாபித்த ஜெயவீரர்களை விட இவர்கள் நமக்கு அருமையானவர்கள். சாஸ்திரங்களை யும் பலநூல்களையும் கற்பித்து, இருண்டமனதில் அறிவின் ஒளி வீசும்படிசெய்து, பலவித இதிகாசங்களையும் காவியங் களையும் உண்டாக்கின நூலாசிரியர்களைவிட, இவர்கள் நமக்கு உசிதமானவர்கள். தேகத்தை ஒட்டின தீராவியாதிக ளைத்தீர்க்கத்தக்க அவுஷதங்களைக் கண்டுபிடித்து அதுகளைப் பிரயோகிக்கத்தக்க அனுபானங்களைச் சொல்லித்தந்து, பல வித வியாதிகளைச் சொஸ்தப்படுத்தி காயங்களைக்கட்டி, இர ணங்களைஆற்றி ஆரோக்கியத்தையும் சுகத்தையும் அளிக்கிற பேர்போன வைத்தியர்களைவிட, இவர்கள் நமக்குச் சுகிர்த் தானவர்கள். தற்பொழிவை மறந்து, சுயபிரயோசனத்தை வெறுத்து, உலகஆதாயத்தை பெரிதென்று எண்ணாமல், பேர் பிரஸ்தாபத்தையும் நற்கீர்த்தியையும் நாடாமல், நன்மைச் சுரூபியாகிய கடவுளைப்போல இவர்களும் பரோபகாரமே தங்களுடைய முக்கியநோக்கமும் வேலையும் ஆசையுமாய்க் கொண்டு சுதேசத்தை மறந்து, சொந்தமானவர்களைத் துறந் து, தங்கள் இரட்சகரைப்போல கெட்டுப்போனவர்களைத் தேடி இரட்சிக்கவேண்டுமென்கிற மனக்கவலைபூண்டு, அதற் கென்றே தங்கள் காலத்தையும் சுகத்தையும் படிப்பையும் கீர்த்தியையும் தேவனுக்குப் பாதகாணிக்கையாக வைத்தார் கள். இப்படிப்பட்ட தபோதனர்களுடைய சரித்திரவரலா றுகளை ஆராய்ந்தறிந்து, அவர்கள் எவ்விதமாய் காலக்ஷேபம் பண்ணினார்கள், என்னென்ன நன்மைகளைச் செய்தார்கள், தேவனை எந்தெந்த விதமாய் மகிமைப்படுத்தினார்கள், பேரி ன்பமாகிய வாழ்வை எப்படிக் கண்டடைந்தார்கள் என்று விசாரித்தறிவது மிகவும் பிரயோசனமாயிருக்கும். நம்மைப்

போலொத்த ஆத்துமதேகிகள், நம்மைப்போலொத்த பாவச் சுபாவிகள், நம்மைப்போலொத்த பலவீனபாண்டங்கள் தேவகிருபையால் எவ்வளவு பரிசுத்தராய்ப்போகிறார்கள் என்று கவனிப்பதினாலே நாமும் அப்படிப்பட்ட கிருபையை கருத்தான ஜெபத்தினால் தேடி, அவர்களைப்போல பிரயோசனமுள்ளவர்களாயிருந்து, அவர்களுக்கு இப்பொழுதிருக்கிற நற்பதவியை அடைய ஏவப்படலாமே. சுதேசக்கிறிஸ்தவர்களாகிய நாம் இந்தச் சற்குணங்களில் எவ்வளவாய்க் குறைவடைந்திருக்கிறோம். மற்றவர்கள் வைத்த நன்மாதிரியைப் பின்பற்றுவதில் நாம்எவ்வளவு மந்தகதியுடையவர்களாயிருக்கிறோம். அவர்கள் அன்னியருக்காக இவ்வளவு செய்திருப்பார்களானால், நம்முடைய சொந்த தேசத்தாருக்காகவும் சுய சனங்களுக்காகவும், இனபெந்துகளுக்காகவும் நாம் எவ்வளவு செய்யவேண்டும். இந்த விசேஷித்த காரியத்தில் உங்களை எழுப்பிவிடவேண்டுமென்கிற நோக்கத்தோடே, தமிழ்நாட்டில் பதின்மூன்று வருஷம்சஞ்சரித்துப், பரோபகாரத்தில் சிறந்து, உயிர்போகும் கடைசிநேரம்வரையில் பாவிகளுடைய ஆத்தும ஈடேற்றத்துக்காகப் பிரயாசப்பட்டுவந்த ஒரு உத்தம போதகருடைய சரித்திரத்தை இதில் ஆதிதொடுத்து கிரமமாய்ச் சொல்லுகிறோம்.

# ஜி. ஜீ. ராக்லாந்து ஐயரின் ஜீவிய சரிதை.

## I. பாலியகாண்டம்.

*இராக்லாந்து ஐயருடைய ஜெனன விபரமாவது.*

பிராஞ்சு தேசத்திலுண்டான கலாபத்தினால் ஐரோப்பா முழுதும் தத்தளித்து திகிலடைந்திருந்தபோது இவருடைய பாட்டனாராகிய தானியேல் பார்ச்சு துரை இங்கிலாந்தில் மான்ச்செஸ்ற்றர் பட்டணத்து வர்த்தகர்களில் ஒருவராயிருந்தார். இவர் இங்கிலிஷ்க்காரருடைய ஆளுகையைக்குறித்து மனக்குறைவடைந்து, தனக்குண்டானஆஸ்தியைவிற்று, சமுசாரம்பிள்ளைகளோடு சிசிலிதீவிலுள்ள மெசினு என்கிற பட்டணத்திற்குப் போகப்புறப்பட்டார். அத்தருணத்திலே அவர் பெண்சாதி இறந்துபோக, பிள்ளைகளோடு பிரயாணப்பட்டு, தான் போகவேண்டிய இடத்திற்போய்ச் சேருமுன், பிரான்சிய போர்க்கலத்தால் பிடிபட்டு, இவரும் இவரைச்சேர்ந்தவர்களும் சிறையானார்கள். இவர்களைக் கொண்டுபோனவர்கள் ஜெனேவாப் பட்டணத்திற்குச்சமீபமாய் இவர்களை விடுதலைசெய்தபடியால், இத்தாலி வழியாய்ப் பிரயாணம்செய்து, கடைசியாய்க், குறித்த இடத்திற்கே வந்துசேர்ந்து, மெசினு என்னும் பட்

ட்டணத்தில் வாசம்பண்ணிக்கொண்டு வந்தார்கள். இப்படியிருக்கையில் அங்கேயுள்ள ஒரு இங்கிலிஷ் வர்த்தகனோடு அதிகப் பரீகைஷயானார்கள். இந்த வர்த்தகன்பேர் இராக்லாந்து. இவர் ஒரு இத்தாலிய துரைசானியை விவாகம்பண்ணியிருந்தார். இந்த அம்மாளுக்கு லுக்கிரிஷியா தொமேயோ காஜற்றேனே என்றுபேர். இந்த இரண்டு குடும்பங்களுக்கும் சிநேகமுற்றிச் சம்பந்தத்திற்கு ஏதுவாயிற்று. இராக்லாந்து வர்த்தகருடைய குமாரரில் ஒருவன் பர்ச்சு துரை மகளை விவாகம்பண்ணிக்கொண்டான். காலம் திட்டமாய்த்தெரியாது. 1814ம்-வருஷத்தில் ஜிபரால்ற்றர் என்னும் தீவில் அவர் ஜீவித்துப்போனது நிசம். அவர் மரித்து ஆறுமாசத்துக்குப்பின், அவருடைய கடைக்குட்டி மகனாகிய இவர், 1815ம் வருஷம் ஏப்பிரில்மீ 25உ பிறந்தார். புருஷனைச் சாகக்கொடுத்த அந்த அம்மாள் இந்தப் பாலகன் பிறந்து கொஞ்சக்காலத்திற்குப் பிறகு இங்கிலாந்து போய்ச்சேர்ந்தாள். மறுபடியும் ஜிபரால்ற்றருக்குப் போகவேண்டுமென்று வைத்தியர் சொன்னபடியால் அங்கே திரும்பிவந்து, கொஞ்சக்காலத்துக்குள் காலஞ்சென்றுபோனாள். சாகும்போது, தன் சிறு குழந்தைகள் மூன்றையும், அவர்கள் சிறிய தகப்பனாரிடத்தில் ஒப்புவித்தாள். இவர் பேர் ஷார்ல்ஸ் பர்ச் துரை. இவர்தான் அந்தப் பிள்ளைகளைப் படிப்பிக்கும்படி இங்கிலாந்துக்குக் கொண்டுபோனவர். இவர்களில் இளமையான இவர் மிகவும் நோஞ்சலாயிருந்தபடியால், இவர்களுக்கு இனமான ஒருத்தி, இவரை அதிகமாய் நேசித்து,

வளர்த்துவந்தாள். இவரும் அவளைத் தாயைப்போலவும், சகோதரியைப்போலவும் நேசித்துவந்தார். இவர் சாகச் சிலமாசங்களுக்குமுன்னே, அந்த அம்மாளை பூமியில் தனக்குக்கிடைத்த மிகவும் அருமையான பரோபகாரியென்றுசொல்லி தன் பட்சத்தையும் நன்றியறிதலையும் காட்டினார்.

அநேகர் நல்ல தாய்மார்களால் சற்புருஷாளாகிறதுண்டு. இராக்லாந்தையர் சுவாமிக்குப்பிறகு தனக்குத் தாய்போலிருந்த இந்த அம்மாளுடைய நல்ல வளர்ப்பினாலேயே, பிற்காலத்தில் அவ்வளவு பிரயோசனமுள்ளவரானாரென்று நன்றாய்ச் சொல்லலாம். அவரும் இப்படியே அநேகந்தடவை சொல்லியிருக்கிறார். அந்த அம்மாளுடைய பிறந்தநாள் கொண்டாடின ஒரு சமையம், 1850ம்-வருஷம் ஜனுவரிமீ 11உ, சென்னபட்டணத்திலிருந்து இவர் அந்த அம்மாளுக்கு அனுப்பின கடிதத்தில், 'இந்த நாள் எனக்கு மிகவும் விசேஷித்தநாள். இந்த நாளுக்காக நான் தேவனை ஸ்தோத்திரிக்காமல் போகக்கூடாது. அவர்தான் உங்களை எனக்குத் தந்தார். எனக்குக் கிடைத்திருக்கிற கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கெல்லாம் நீங்களே வழி. முதலாவது தேவனுக்கும், பிறகு உங்களுக்கும் நான் எவ்வளவோ நன்றியறிந்தவனாயிருக்கவேண்டும். அவர்தான் உங்களுக்கு நிறைவான பிரதிபலன் கொடுப்பவர். நான் சிறு பையனாயிருந்தபோதும், வாலிபனாயிருந்தபோதும் எவ்வளவோ எனக்காகக் கவலைப்பட்டீர்கள், எவ்வளவோ எனக்காக ஜெபம்பண்ணினீர்கள். எனக்கு எவ்வளவோ நல்ல புத்தி சொன்னீர்கள். இந்த நிமிஷம் வரையிலும் எத்தனையோ காரியங்களை அன்புக்கு அடையாளமாகச் செய்திருக்கிறீர்கள்' என்று எழுதினார்.

சிறு பிள்ளையாயிருக்கிறபோது இவர் மிக்வும் புத்திசாலியும் திறமையுள்ளவரும் வெகு சாதுவானவருமாயிருந்தார். விளையாட்டுப்புத்தி அதிகமிருந்தபோதிலும், கீழ்ப்படிதலும் சுறுசுறுப்பும் இவருக்குள் தோன்றி, பெரியவரானபோது நன்றாய் விளங்கிற்று. சாந்தகுணமும், முகமலர்ச்சியும் இருந்ததோடுகூட புத்தியும், அறிவும் நாளடைவில் வளர்ந்து வந்தது. சிறுவமுதல் புஸ்தகங்களை வாசிக்கிறதில் அதிகப் பிரியம் வைத்தார். கதைகளும், வீரதத்துவ சரித்திரங்களும் இவருக்கு அதிக இன்பமாயிருந்தது. பள்ளிக்கூடத்திலும் வெகு ஜாக்கிரதையாய்ப் படித்துவந்தார். தன் கூட்டாளிகளுடன் விளையாடுவது மகா அபூர்வம். சிலவேளை பந்தடித்துவிளையாடினலும், சீக்கிரம் அதைவிட்டுவிட்டு ஒரு மூலையிற்போய் உட்கார்ந்து, இதிகாசங்களை வாசித்துக்கொண்டிருப்பார். பால்மரையரிடத்தில் இவர் படித்துவந்தபோது மழைகாலத்திலும் விடிய நாலைந்து மணிக்கு எழுந்திருந்து, மற்றவர்களெல்லாரும் தூங்கிக்கொண்டிருக்க,இவர் சமையல்வீட்டில் இராமுழுதும் கணந்துகொண்டிருக்கும் நெருப்பண்டைபோய், ஓமர், வர்ஜில் என்பவர்கள் எழுதின பிரபந்தங்களை வாசிப்பார். இவருடைய ஆசானுகிய ஓம் என்பவர் லத்தின், கிரேக்குப்பாஷையில் இவர் வெகுவாய் தேர்ச்சியடைந்தாரென்றும், தாபரசாஸ்திரத்தில் அதிகப் பிரீதியாயிருந்தாரென்றும், தமக்கு வழக்கமாய்க் கிடைக்கிற கொஞ்சப்பணத்தைக்கொண்டு புஸ்தகங்களை வாங்கி வாசித்தார் என்றும் சொல்லியிருக்கிறார். நீண்ட வம்சவரிசையின் அட்

டவணைகளை ஆராய்ந்து எழுதுவது இவருக்கு மிக வும் பிரியம். இவர் பெரியவராயிருக்கும்போது எப்படி எழுதுவாரோ, அப்படியே சிறு பிள்ளையா யிருந்தபோதும் நீண்ட கடிதங்களை எழுதுகிறதுண் டு. பதினைந்துவயதில் பள்ளிக்கூடம்விட்டார். தாம் பின்னால் மனுஷனாவதற்கு இனத்தார் என்ன ஒழுங் கு செய்வார்கள், பார்ப்போமென்று பொறுமையா யிருந்து, தமது சிறியதகப்பனார் லிவர்ப்பூலில்கூட் டுவர்த்தகமாயிருந்த கடையில் ஐந்துவருஷம் அலு வலாயிருக்கும்போதே படிப்பின்மேல் தமக்கிருந்த ஆசையை யாதொருவிதத்திலும் குறைவின்றி நிறை வேற்றியுங்கொண்டார். எந்தெந்த தேசத்தைப்பற் றிச் சரித்திரமுண்டோ அதுகளை வாசிப்பார். தான் பிரயாசத்தோடு அறிந்துகொண்ட சங்கதிகளைப் படங்களில் தெளிவாய் வரைந்துவைப்பார். உலகக் கல்வியோடு வேதவசனத்திலுள்ள சரித்திரங்களை யும், வம்ச அட்டவணைகளையும்சேர்த்ததினால் வேத அறிவில் வல்லவராகி, அந்த அறிவை மேலானநோக் கத்திற்கென்று பிரயோகித்தார். தேவன் தம்முடை ய ஊழியக்காரருக்குப் பின்னாடிவேண்டிய அறிவை முன்னாடியேகொடுத்து, அவர்களை ஆயத்தப்படுத்து கிறதைப் பார்க்கும்போது எவ்வளவோ ஆச்சரிய மாயிருக்கிறது.

இவர் சிறு பிராயத்திலேயே புத்தியுள்ளவராய் விளங்கினார். ஆகிலும் மற்றவர்கள் இதைப்பற்றி விசாரித்தபோது, அதைவெளிக்குக் காட்டிக்கொள் ளவில்லை. 1857ம்வருஷம் ஏப்பிரல்மீ இத்தேசத் திலிருந்து ஒருவருக்கு எழுதின கடிதத்தில்,

'நீர் என்னிடத்தில் ஒருகேள்வி கேட்டிருந்தீரே அதற்கு என் மனது இல்லை அப்படிச் செய்யக்கூடாது என்றாலும், இன்னும் யோசிப்பேன். நாம் மோட்சம்போய்ச் சேரும் போது என் பாலியத்தில் எண்ணின எண்ணங்களை உமக் குச் சொல்லுவேன். இப்பொழுது அதை எழுதுவதினால் எனக்குக் கெடுதி வரலாம். கர்த்தரே என்னை நடத்தவேண் டும்' என்று எழுதினார்.

இன்னொரு கடிதத்திலும்,

'நீர் விரும்பிக் கேட்கும் காரியத்தைக்குறித்து நான் நன் றாய் யோசிக்குமட்டும் முன்சொன்னதைத்தான் சொல்ல வேண்டும். மோட்சம்போய்ச் சேரும்போது சங்கோஷமி ல்லாமல், மனத்தாங்கலில்லாமல் ஆத்தும கெடுதி நேரிடா மல் பாவங்களையும், கர்த்தர் செய்த நன்மைகளையும் தாராள மாய்ச்சொல்லலாம். இவ்வுலகத்தில் அந்தப்பேச்சே வேண் டாம்' என்கிறார்.

நல்ல பிள்ளைகளிடத்திலுங்கூட இவருக்கிருந்த பதமையையும், கீழ்ப்படிதலையும் காண்பது அரிது பள்ளிக்கூடத்துத் தோழரில் ஒருவர், 'வீண்வார்த் தை ஒன்றும் இவர் பேசினது எனக்கு ஞாபகமில்லை' என்கிறார். பள்ளிக்கூடத்தில் படித்துவந்த காலங் களில் ஓய்வுநாள்பள்ளிக்கூடததில் படித்துக்கொடு த்து வந்தார்.

'அவர் பள்ளிக்கூடத்துக்குச் சரியான நேரத்தில் வரு வார். வெகு கவனத்தோடு நன்றாய் படித்துவந்தார். வேத புஸ்தகம் அடிக்கடி அவர் கையிலிருக்க நான் பார்த்ததுண்டு. மற்றப்பிள்ளைகளைவிட அவர் வேத அறிவில் நன்றாய்த்தேறி வந்தார். தேவாலயத்தில், அவருடைய நடக்கை அநேக ருக்கு நன்மாதிரியாயிருந்தது. மற்றவர்கள் பராக்குப்பார் த்து கவலையீனராயிருக்கும்போது, அவர் வணக்கமுடைய வராயிருப்பார். ஓய்வுநாள் சாயரக்ஷைகளில் போதகருடை

ய வீட்டில் ஞானகீர்த்தனைகளைப் பாடுவது அவருக்கு இன்பமாயிருந்தது. என்னிடம் படித்துவந்த காலங்களில் தப்பித நடத்தைக்காவது அஜாக்கிரதைக்காவது தேவாலயத்தைப்பற்றிய ஒழுங்கீனங்களுக்காவது இவரைக் கண்டிக்க வேண்டியிருந்ததில்லை. வெகு கீழ்ப்படிதலுள்ளவர். மற்றவர்கள் நேசிக்கும்படியாய் நடந்தார். எப்போதும் பணிவைக்காண்பித்தார். பிள்ளைகளோடு சச்சரவுக்குப் போகிறவருமல்ல, வேறே குறும்புசெய்கிறவருமல்ல' என்கிறதாய் ஓம் துரை எழுதியிருக்கிறார்.

சரியான வயதில் திடப்படுத்தலைபெற்று, இராப்போசனப்பந்தியில்சேர்ந்து, அதுமுதல் கிரமமாய் அதை அனுசரித்துவந்தார். வர்த்தகசாலையில் வேலைபார்த்துவந்த காலத்தில் இவரைப் பராமரித்துவந்த சிறிய தகப்பனார் லிவர்ப்பூலுக்கு நாலு மைல் தூரத்தில் வாசம்பண்ணினபடியால், இவர் அவரோடுகூட வண்டியிலேவருவார். அந்த வேளைகளிலுங்கூட அவர் தேவதியானமாயிருப்பாராம். அதாவது வருகிறபோதும், போகிறபோதும் மனதுக்குள்ளே ஜெபம்பண்ணுவார். குறித்த இடத்திற்கு வண்டி வருகிறபோது கர்த்தருடைய ஜெபம் சொல்லுவார். இதைக்கொண்டே எந்த ஜெபத்தையும் முடிக்க வேண்டுமென்பது இவருடைய கருத்து. அந்தக் குடும்ப ஒழுங்குப்படி சரியான நேரத்தில் தீபத்தை அணைத்துப்போட்டு, இருட்டிலும் முழந்தாட்படியிட்டு ஜெபம்பண்ணிக்கொண்டிருப்பார். இது சிறுவந்தொடுத்து இவர் வழக்கம். இதுவே பிற்காலம் இவரிடத்தில் விளங்கின பரிசுத்த நடக்கைக்கு முக்கிய காரணம். இவருடைய பாலிய விருத்தாந்தம் இவ்வளவே.

இருபத்திரண்டாம் வயசிலும் வேறொரு அலுவலைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் இவருக்கு இல்லவேயில்லை. எல்லா மனிதரையும் நடத்துகிற தேவனே இவருக்கு ஒரு மேலான அலுவலை நியமித்திருந்தார். இவர் தம் வேலையில் அடைந்த காரியசித்தியே இவர் வித்தியாசாலைக்குப்போகவும், பிறகு குருப்பட்டம்பெறவும் ஏதுவாயிருந்தது. இவரை அன்பாய் சவரக்ஷணைசெய்துவந்த இவர் சிறிய தகப்பனார் தன் பங்கை இவருக்குக்கொடுத்து, இவரை முதலாளியாக்குகிறதாய் வாக்களித்தாலும், அது இவருக்கு மனமில்லை. வர்த்தகத் தொழிலைப்பார்த்துக்கொண்டே உத்தம கிறிஸ்தவனாய் நடப்பது வெகு வருத்தமென்றும், தன்னாலே அது முடியாதென்றும் மனோ மனசாக்ஷியாய் அறிந்தார். இதை அவருக்கு வெளியிட்டால் எங்கே மனஸ்தாபப்படுகிறாரோவென்று பயந்து, முகாந்தரம் சொல்லாமல் கொஞ்சக்காலம் கமுக்கமாயிருந்தார். இதைப்பற்றி நன்றாய் யோசித்து, கருத்தாய் ஜெபம்பண்ணினதின்பேரில் தாம் பார்த்துவந்த அலுவலைவிட்டுக் கல்விச்சாலைக்குப்போகிறதே உத்தமமென்று கடைசியாய்த் தீர்மானித்தார். இதைத் தன் சிறிய தகப்பனாருக்கு வெளியிட்டபோது அதற்கு அவர் உடனே சம்மதித்து, முன் இவருக்குக் கொடுக்க நினைத்த பணத்தை இவர் படிப்பு விஷயத்தில் செலவிட மனசாயிருந்தார்.

# II. வித்யாப்பியாச காண்டம்.

இவர் 1337 ம்௵ ஜுன்மீ முதன்முதல் கல்விச் சாலைக்குப்போக எண்ணங்கொண்டார். அந்த வருஷம் அக்றோபர்மாசத்தில் தாம் பள்ளிக்கூடத்தில் படித்திருந்த பாடங்களை நன்றாய் ஞாபகப்படுத்திக்கொண்டு, கார்ப்பஸ் கிரிஸ்றறை என்னும் கல்விச்சாலையில் பிரவேசித்தார். மாணுக்கனுயிருந்தபோது வெகு ஜாக்கிரதையாய்ப் படித்துவந்தார். கல்விமானுகவேண்டும், அதினுல் பேரும் கீர்த்தியும் அடையவேண்டும் என்று விரும்பி, படிப்பை விக்கிரகம் போல பாவிக்கவில்லை. ஆகிலும் சோம்பலைத்தவிர்த்து, எந்த வருத்தத்தையும் பாராமல், கல்விகற்பதை நன்றாய் அப்பியாசித்துவந்தார். தேவனுடைய இராச்சியத்தையே முந்தித்தேடுவது அவசியமென்று நினைத்து, அதோடுகூட தன் அலுவலில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்பதையும் உணர்ந்தவர் போல நடந்தார். கல்விச்சாலையிலிருந்த முதல் வருஷத்தில் 'நான் ஜாக்கிரதையாய் உழைத்தால், முந்தி தேவ பத்தியையும் பிறகு தேகசுகத்தையும் என் படிப்பையும் கவலையோடு தேடினேனேயானுல் எனக்கு ஆசீர்வாதம் கிடைக்கும், அதினுல் பெருவாழ்வுமுண்டாகும்' என்று எழுதினுர். இவர் சகலத்தையும் காலம் தப்பாமல் வெகுதிட்டத்துடன் நடத்திவந்தபடியால், இவரைப்பார்த்தே கடிகாரம் திருப்

பலாமென்று சொல்வார்களாம். இவர் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்குப் போனபோது, இலக்கிய நூல்களில் தேறியிருந்தும், கணிதசாஸ்திரத்திலோ அவ்வளவில்லை. க்ஷேத்திரகணிதத்தில் இரண்டு புஸ்தகங்கள் படித்திருந்தார். பீஜகணிதத்தை அப்போதுதான் ஆரம்பித்தார். கல்விக்குரிய உயர்ந்த பட்டம்பெற வேண்டுமென்கிற தாற்பரியம் இவருக்கு இல்லை. சாதாரணமான பி. ஏ. பட்டம்பெற்றால் போதுமென்றிருந்தார். எவ்வளவுதூரம்தேறுவேனென்று இவருக்கே தெரியாதிருந்தபடியால், இதுவும்தமக்குக்கிடைக்குமோவென்று சந்தேகப்பட்டார். பிற்காலம் நாலாவது ராங்கிளர் என்னும் சிறந்த பட்டம்பெற்ற இவர், முதலில் கணிதசாஸ்திரம்படித்த வகையைக் குறித்து விளையாட்டாய் எழுதியிருக்கிறதாவது,

'கணித சாஸ்திரத்தின்மேல் சொல்லப்படும் பிரசங்கங்கள் அத்தனைக்குப் பிரயோசனமுள்ளவைகளல்ல. உபாத்தியாயர் க்ஷேத்திரகணிதத்தில் அதிக அப்பியாசம்செய்யச் சொன்னார். இதுதான் எனக்கு மெத்தப்பிரியம். யூகித்தெடுக்கத்தக்க இப்பேர்ப்பட்ட அப்பியாசங்கள்மேல் எனக்கு அதிக விருப்பம். இதுகளைச்செய்ய அதிகநேரம் செல்லுகிறதென்று எனக்குத் தோன்றினாலும், மற்ற மாணாக்கரைப் போலவே இதைச் செய்தேன். அவர்களைவிட நான் கெட்டியாய்ச் செய்திருக்கலாம். இலக்கியத்தில் மற்றவர்களுக்கு நான் அதிகம் பிந்திப்போகவில்லை. கொஞ்சநாளுக்குள்ளே யூக்கிளிட்டென்பவர் செய்த நூலில் பதினோராம் புஸ்தகம் இருபத்தோராம் சூத்திரம்வரையில் படித்து முடித்தேன். ஐந்தாம் புஸ்தகத்தையும் நான் விடவில்லை. இது அவசரமில்லாவிட்டாலும், ஆறும் புஸ்தகத்திற்கு உதவுமென்று படித்தேன். கிழட்டுச்சாவல் கறிபோல் அது பல்லுக்

ருத் தொலியவில்லை. ஆகிலும் சில சூத்திரங்கள் இலகு வாய்க்கண்டது. பிறகு முக்கோண சாஸ்திரம் தொடங்கினேன். இது ஐந்தாம் புஸ்தகத்திற்குப் பதின்மடங்கு வருத்தமானது. க்ஷேத்திரகணிதம் கடைசிப்புஸ்தகத்திற்கு இது முழுவதும் வித்தியாசமே. இதை இரண்டுமூன்றுதடவை வாசித்தும் எனக்குச் சுத்தமாய் விளங்கவில்லை. கடைசியில் கொஞ்சம் விளங்கினபடியால் வெகு நல்ல சாஸ்திரமாயிருக்குமென்று அறிந்துகொண்டேன்' என்பதே.

1837ம்௵ நவம்பர்மீ 17உ எழுதின கடிதத்தில்,

கண்யப்பட்டங்களைப் பெறுகிறதைக்குறித்து என்ன செய்கிறதென்று தெரியவில்லை. இவைகளைப் பெறத் திறமையிருந்தாலும், படிப்பிக்கிற உபாத்திமார்களுக்கு அதிகமாய்க் கொடுக்கவேண்டியதால் எனக்குப் போதுமான பணமில்லை. இந்த இரண்டுமிருந்தாலும் பின்னும் யோசிக்கத்தான்வேண்டும். நான் செய்யப்போகிற மேலான ஊழியத்துக்குத் தகுந்தபடி ஆயத்தம் செய்யவேண்டியிருப்பதால் காலம் போதாதே. நாம் இருவரும் சந்திக்கும்போது இதைக்குறித்துப் பேசிக்கொள்ளலாம். கேரஸ் என்பவரோ தம்மிடத்தில் பிரசங்கம் கேட்கவருகிறவர்கள் மேலான பட்டத்திற்குப் படிக்கவேண்டுமென்று சொல்லுகிறார். 18, 19 வயதுள்ளவர்களுக்குத்தான் அது. பட்டம்பெற்றாலும், அவர்களுக்கு இன்னும் இரண்டுமூன்று வருஷங்களிருக்குமே' என்று கண்டிருக்கிறது.

இவ்விதமாய் இவர் திறமையுடையவரென்று சீக்கிரம் தெரியவந்தது. மற்ற மாணாக்கரும் இவருக்குப் படிப்பித்துக்கொடுத்த உபாத்தியாயரும் இவரை அதிகமாய் வருந்திக் கேட்டுக்கொண்டபடியினாலே தனியே படித்து கண்யப்பட்டம்பெறச் சம்மதித்தார், லேன், கிரிப்பன் என்னும் இரண்டு ஐயன் மாரிடத்தில் இவர் எவ்வளவு சந்தோஷத்தோடும்

அடக்கவொடுக்கத்தோடும் படித்துவந்தாரென்பதை தம்முடைய சகோதரி முதலானவர்களுக்கு இவர் எழுதின கடிதத்தினுல் அறிந்துகொள்ளலாம்.

'நான் முன்னே வம்ச அட்டவணையின்பேரில் ஆசை கொண்டதெவ்வளவோ அவ்வளவாய்க் கணக்கதிகாரத்தின் மேல் எங்கே ஆசைவந்துவிடுகிறதோவென்று பயப்படுகி றேன். இப்போது படித்துவருகிற சூட்சுமகணிதம் வெகு விநோதமானது. என் சீவநாளெல்லாம் எவ்வளவோ அற்ப மான காரியங்களில் கழிந்துபோகிறது. விக்கிரக ஆராதனை என்று சொல்லப்பட்ட விளையாட்டில் பாதிபோச்சுது. இது இன்னதென்று எழுதமுதலாய் எனக்கு வெட்கமாயி ருக்கிறது. (தன் சகோதரியோடு பொம்மைகளை வைத்து விளையாடினதைக்குறித்து இப்படி எழுதுகிறுர்.) பாதி வீண் கட்டுக்கதையில் போச்சுது. பிறகு ஏழுவருஷம் வம்ச அட்டவணையில் போச்சுது. கணக்கதிகாரத்தைக்குறித் தும் இப்படியே ஆசையிருக்குமாகில் மேலான ஞானவானு கமாட்டேன். இதுகளிலிருக்கிற ஆசையும் ஆவலும் போத கவிஷயத்தில் காணுமானுல் எவ்வளவு பாக்கியம்! எனக் குப் பிரியமானவர்களே! உங்கள் ஜெபங்களில் என்னை நினைத்துக்கொள்ளுங்கள். முக்கியமாய் வருகிறமாசம் நினை த்துக்கொள்ளுங்கள். அதிக முக்கிமாய் மூன்று சோதனை நாட்களில் நினைத்துக்கொள்ளுங்கள். எப்படியிருந்தாலும் என் காரியம் அனுகூலப்படும் என்கிறதை மறைப்பது வஞ் சகமாகும். அப்படியே காரியம் பிரதிகூலமாய்ப்போனுலும் அதுவும் எனக்கு நன்மையே. எனக்கு நன்மையானது இன் னதென்று அறிந்திருக்கிறவர் ஒருவர் இருக்கிறபடியால், அவரே அதைக் கொடுப்பாரென்று நம்பியிருக்கிறேன். இது தான் நம்மெல்லாருக்கும் ஆறுதல்' என்பதே.

மேலே சொல்லிய சோதனையில் அவர் முதல்தர மாயிருந்தபடியால் இவருக்கு கிபாயத்தாக ஒரு வெ

ளிக்கும்பா கிடைத்தது. இதை இவர் என்ன செய்தாரென்று இவர் சாகிறதற்கு ஒரு வருஷத்திற்கு முன்னே இந்தியாவிலிருந்து கனம் பெரோன் ஐயருக்கெழுதின கடிதமூலமாயறியலாம்.

'என் அலுவலோடு அத்தனையாய்ச் சம்பந்தப்படாத ஒரு காரியத்தைக்குறித்து உம்முடைய உதவிவேண்டியதாயிருக்கிறது. இதை இன்னதென்று சொல்லுமுன்னே, சில விசேஷங்கள் சொல்லவேண்டும். பத்தொன்பதுவருஷங்களுக்கு முன்னே, கல்விச்சாலையில் அதிகப் படிப்பாளியில்லாததினால் எனக்கு ஐந்து பவுன் விலையுள்ள ஒரு வெள்ளிக்கும்பா வெகுமானமாகக் கிடைத்தது. பிந்தின மூன்று வருஷங்களிலும் இதுபோலவே கிடைத்தது. இந்த நாலு பாத்திரங்களையும் நான் கண்குளிரப்பார்த்ததுமில்லை. கைதொட்டுப் புழங்கினதுமில்லை. நான் மிஷனரியானபோது, தேவாசீர்வாதத்தைமுன்னிட்டு என் பிரயாசத்தால் நாலு சபை ஸ்தாபிக்கப்படுமேயானால், அந்தச் சபைகளுக்கு இவைகளை இராப்போசன பாத்திரங்களாக தத்தம்செய்ய வேண்டுமென்று, இதற்கு பன்னிரண்டு வருஷத்துக்குமுன்னே தீர்மானம்பண்ணினேன். கல்போதில் ஒரு சபை உண்டாயிருக்கிறது. அது சிறிதாயிருந்தாலும் இன்னும் விருத்தியாகுமென்கிற நம்பிக்கையுண்டு. அதிலே ஞானஸ்நானம் பெற்றவர்கள் முப்பது பேர், ஞானஸ்நானம் பெறாதவர்கள் பத்துப்பேர். ஆறுமாசங்களுக்கு முன்னே நானிருக்கிற இந்தச் சேகரத்தை விசாரித்துவருகிற கனம் எவரி அய்யருக்கு இதை ஒப்புக்கொடுத்துவிட்டோம். அவர் பதினைந்து பேரை இராப்போசனத்தில் சேர்த்தார். இவர்களில் எட்டுப்பேர் இந்தச் சபையைச்சேர்ந்தவர்கள். ஒருவன் ஆஜரில்லை. அவ்விடத்தில் ஒரு தேவாலயம் கட்டும்படி அஸ்திபாரம்போட, கட்டுகிறதற்குவேண்டிய செலவு முழுவதையும் தமிழ்க்கிறிஸ்தவர்களே கொடுத்தார்கள். மிஷன் வேலை

பாராத தமிழ்க்கிறிஸ்தவர்களே இந்தப் பணத்தைக்கொடுத்திருக்கவேண்டும். கல்விச்சாலையில் எனக்குக் கிடைத்த பாத்திரத்தோடு அவ்விடத்தில் கிடையாத ஒரு வெள்ளித் தட்டையும் நான் சம்பாதித்துக்கொடுக்கவேண்டிய காலம் வந்திருக்கிறதென்று எண்ணுகிறேன். இதுகளும் அந்தக் கல்விச்சாலையிலிருந்தே எனக்குக் கிடைக்குமென்று நம்புறேன். ஸ்பென்சர்செஸ்றென்று தர்மப்பணம் சேர்ந்த ஒரு பொக்கிஷமுண்டே, அதிலிருந்து இந்தப் பாத்திரத்திற்குச் சரியான ஒரு வெள்ளித்தாம்பாளக்கிரையம் கொடுக்கக் கூடாதா? தற்காலம் ஒன்றுக்கு கொடுத்தார்களானால் இன்னும் இப்படிக்கொத்த சமையம் நேரிடும்போது மற்ற மூன்றுபாத்திரங்களுக்காகவும் அப்படியே கேட்கலாமென்று எண்ணியிருக்கிறேன். இப்பொழுது ஒன்றுமாத்திரம் கேட்கிறேன். இன்னும் இரண்டு சபைகளைக்குறித்து அதுகளும் இவ்விதமாய்த்தேறிவருமென்று பன்னிரண்டுமாசங்களாகக் காத்திருந்தோம். என் நம்பிக்கை அவமாய்ப்போச்சுது. முகாந்தரம்சொல்ல எங்களால் கூடாது. திருவுளம் இப்படி இருந்ததாக்கும். எங்கள் வைராக்கியமும் பரிசுத்தமுமான நடக்கைக்குறைவும் இதற்குக் காரணமல்லவென்று நிச்சயமாய்ச்சொல்லக்கூடுமானால் எங்களுக்கு எவ்வளவோ பாக்கியம். பிரிய சிநேகிதரே! இதைப்பற்றிக் கல்விசாலை முகாமைக்காரரிடத்தில் எனக்காக நீர் கேட்கவேண்டியது. உமக்கு மனமானால் அந்தக் கல்விசசாலையில் படித்த மேடோஸய்யருடைய பேரைச்சொல்லியும் கேட்கலாம்.

இதில் கேட்டுக்கொண்டபடி ஒரு பாத்திரமும் கல்விச்சாலை முகாமைக்காரர் கொடுத்த ஒரு தட்டும் இவருக்கு அனுப்பப்பட்டது. அதுகளை அந்தக் கல் போது கோவிலுக்குக் கொடுத்தார். மற்ற மூன்று ஜதைகளும் அவ்விதமாகவே கொடுக்கப்பட்டது. இதை அவர் காணவில்லை. இவருடைய பிற்கால

அலுவலுக்குக் கல்விச்சாலை சம்பந்தமான வேறு காரியங்களும் அநுகூலமாயிருந்தது. எப்படியென்றால், இதில் படித்த மாணுக்கன்மார் ஒரு போதகருடைய உதவியைக்கொண்டு சுதாவாய் ஒரு ஓய்வுநாட்பள்ளிக்கூடம் நடத்திவந்தார்கள். இவரும் துவக்கத்தில் ஒவ்வொரு வேளைபோய்ப் படிப்பித்து வருவார். பிற்பாடோ ஒழுங்காய்ப் படிப்பித்துவந்தார். கல்விச்சாலை சோதனை நடக்கும் வாரத்திலும் தவறாமல் அப்படியே செய்தார். பார்ண்டன் துரை முதலானவர்களாலே ஏற்படுத்தப்பட்ட கேம்பிரிட்ஜ் சன்மார்க்கப்புத்தக சங்கத்தைச்சேர்ந்து, பல பேருக்கும் புத்தகங்களைக் கொடுத்துவந்தார். இவர் முன்னாலே தமக்கு உபாத்தியாயராயிருந்த லேனையரோடு நாலைந்து மயில் தூரத்திலுள்ள கிராமங்களுக்குப் போய் வருவார். பிறகு அவர் வேலையை இரண்டாகப்பிரித்து இவர் பாதிபார்த்துவந்தார்.

இவர் சுறுசுறுப்பாய் உழைத்துவந்தபோதிலும், தம்முடைய கல்விவிர்த்திக்கும், பின்னிட்டுஉண்டாகும் பிரயோசனத்திற்கும் மூலகாரணமாகிய ஆத்துமநன்மையைக்குறித்துக் கவலையற்றவராயிருக்கவில்லை. ஓய்வுநாட்களில் இரண்டுநேரமும் கோவிலுக்குப்போனார். ஸ்கோல்பீல்ட் சாஸ்திரியார் வெள்ளிக்கிழமை சாயரக்ஷைதோறும் கிரேக்குப் புதிய ஏற்பாட்டின்பேரில் செய்த பிரசங்கத்தையும் கேட்டுவந்தார். இதோடுகூட, கல்விச்சாலையிலிருந்த சிலரோடு சனிக்கிழமை சாயந்தரந்தோறும் வேதவசனத்தை வாசித்து செபம்செய்துவந்தார். அக்காலம் தமது இனத்தாருக்கு எழுதின கடிதங்களால் இவ

ருக்கிருந்தபத்தி இப்படிப்பட்டதென்று விளங்கும்

'சிலநாட்களாக தேவன் எனக்குச்செய்த நன்மைகளைக் குறித்து யோசித்தேன். சமாதானம், ஆறுதல், பரிபூரணம், என் வேலைக்கு வேண்டிய திறமை, தேவாசீர்வாதமாகிய இவைகள் அநேகம்பேருக்குக் கிடையாமலிருக்கையில், எனக்கு இலவசமாய்க் கிடைப்பதற்கு முகாந்தரமென்ன? இப்போது கிடைத்திருக்கிற சமாதானமான காலத்தை சரியாய் உபயோகப்படுத்தும்படிக்கும், எனக்குக் கிடைத்த சிலாக்கியங்களை அசட்டைசெய்யாமலும் பின்னுக்கு துக்கமடையாமலுமிருக்கும்படிக்கும் எனக்காக கருத்தாய் ஜெபம்பண்ணுங்கள். என் பிரிய சிநேகிதரே!' என்கிறார்.

'மேலும் கடந்துபோன ஐந்துவாரங்களில் சிலநாட்கள் தவிர, மற்ற நாட்களிலெல்லாம் நிமிஷந்தோறும் தேவன் எனக்குக்காட்டின தயவு கொஞ்சமல்ல. மனச்சந்தோஷமும் எனக்கு அதிகமாய்க்கிடைத்தது. இந்தச் சந்தோஷத்திற்குக் காரணம் என் கல்விவிருத்தியல்ல. என் ஆத்துமா திருத்தியடைந்திருப்பதாலும், தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்கிற வாஞ்சை எனக்குள் அதிகமாயிருப்பதாலுந்தான் அந்தச் சந்தோஷம் எனக்குள்ளிருக்கிறது. இப்போது அவ்வளவு சந்தோஷம் காணவில்லை. அது மறுபடியும் காணுமென்று நம்பியிருக்கிறேன். நீங்கள் எனக்காக ஜெபம் செய்வீர்களென்று நம்புகிறேன். எத்தனையோ நல்ல தீர்மானங்கள் செய்தாலும், எவ்வளவோ நேர்த்தியான விஷயங்களைக்குறித்து யோசித்தாலும் ஒறு சிறு காரியம் அதை லேசாய்க்கெடுத்துப்போடுகிறது. நான் சிறு புஸ்தகங்களைக் கொடுத்துவருகிற இடத்தில் நெடுநாளாய் பாயும் படுக்கையுமாய்க் கிடக்கிற ஒரு கிழவியைக்குறித்து உங்களுக்கு எப்போதாவது எழுதினேனு? எழுதவில்லையென்று நினைக்கிறேன். நான் வின்சர் என்னும் நகரத்திற்குப் போகுமுன்னமே அவள் வியாதிப்பட்டாள். நான் திரும்பிவந்தபிறகும்

உயிரோடிருக்கப் பார்த்தேன். நான் அவளைக் கண்டுபேசப் போனபோதெல்லாம் இதுவே கடைசிவிசையாயிருக்குமென்று எண்ணினபோதிலும், போன சனிக்கு முந்தின சனிவரையிலும் உயிரோடிருந்து, எல்லாவிதமான துன்பத்தினின்றும் விடுதலையடைந்தாள். சாகிறதற்கு முந்தின செவ்வாயில் அவளைப் பார்த்தேன். எலும்பு மயமாயிருந்தாள். அவள் காதுக்குள்ளே பேசினபடியால் 'கிறிஸ்துவின் இரக்கத்திற்கு நான் ஞாபகக்குறிப்பு' என்றது சமீபத்திலிருந்த ஒரு பெண்பிள்ளைக்குமாத்திரம் கேட்டது. இவ்வளவு துற்பலமான ஸ்திதியில் அவளுக்கு ஒன்றும் சொல்ல ஏதுவில்லாதபடியால், ஆறுதலான சில வேதவாக்கியங்களைமாத்திரம் மெதுவாய்ச் சொன்னேன். அது அவளுடைய மனதில்பட்டதுபோல தோன்றினது. தேகத்தில் அதிக வருத்தப்பட்டு, ஆத்துமபோராட்டம்முடித்து, இப்பொழுது இளைப்பாறுகிருளென்று நம்புகிறேன். இப்படிப்பட்ட மரணப்படுக்கைகளைச் சந்திப்பது போதகன்மாருக்கு மிகவும் இன்பமான அலுவல். குணப்படாதவர்களுடைய மரணப்படுக்கைக்குப்போய், அவர்கள் ஒதுங்கியிருக்கும் தப்பான ஒதுக்குகளைக் கண்டுபிடித்து, உண்மையோடு சத்தியத்தைச் சொல்லுகிறது எவ்வளவு வருத்தமானகாரியம். அப்படிப்பட்ட சமயங்களில் பின்னுக்கு மனச்சாக்ஷிவாதியாமல் கண்டித்துப்பேசுவது மனதுக்கு வருத்தத்தைக்கொடுக்குமாகையால், சுகமாயிருக்கும்பொழுதே சனங்களுக்கு தைரியத்தோடு உள்ள சத்தியத்தைச்சொல்வது மிகவும் அவசரம். அப்படிச்செய்யாமற்போனல் வியாதிப்படுக்கையாய்ப் படுத்திருக்கிறவனுக்குள்ள கொஞ்ச நம்பிக்கையையும் குலைத்துப்போடுகிறதாயிருக்கும். நான் இந்தக் கடமையை நிறைவேற்றவேண்டிவரும்போது, நான்மாத்திரமல்ல, நாம் எல்லாரும் அவரவரிருக்கும் ஸ்தானங்களில் பொல்லாதவனை எச்சரித்து, அவனை மனந்திருப்புதலுக்கும் மெய் நம்பிக்கைக்கும் கொண்

பாக்கியவான்' என்று எனக்கு முந்தி ருசிகாட்டுவதுபோ விருக்கிறது.

இவர் கல்விச்சாலையிலிருந்தபோது விசேஷித்த பட்சம் இவரிடத்தில் விளங்கிற்று. தனக்கு மிகவும் பிரியமானவர்கள் தன்னைவிட எங்கே மற்றவர்களை நேசிக்கிறார்களோ என்கிற ஒருவித வைராக்கியம் இவரிடத்திலிருந்தது. இதை இவரே நன்றாய் அறிந்திருந்தார். தம்முடைய சொந்தச் சகோதரியையும், பெரியதகப்பனார் மகளையும் அதிகமாய் நேசித்துவந்தார். இவர் பள்ளிக்கூடத்தில் படித்துவந்த நாட்களில் எழுதின நீண்ட காகிதங்களைக் குறித்து முன் சொல்லியிருக்கிறோம். இவர் கல்விச்சாலையிலிருந்தபோது, பதினைந்து நாளுக்கொருவிசை ஒரு பெரிய தாள் முழுதும் எழுதுவதுமல்லாமல், எழுதினதின்மேல் குறுக்குமறுக்காயும் மூலைவாக்காயும் எழுதுவார். ஒருதடவை இவர் விடுதலை நாளைக்குவந்து கேம்பிரிட்ஜுக்குத் திரும்பிப் போன பிறகு, எப்படி எழுதினரென்றால்,

'விடுதலைநாளைக்குறித்து பயமடைய இது போதும்போலிருக்கிறது. ஏனெனில் விடுதலைவிட்டால் மறுபடியும் பிரியவேண்டியதாய் நேரிடும்: போன புதனுக்கு முந்தின புதன்கிழமை நான் அதிகத் துக்கமாயிருந்தேன். எனக்கே அது ஆச்சரியமாயிருந்தது. நான் பள்ளிப்பையனாயிருந்தபோது விடுதலைக்குவந்து போகிறதுபோலிருந்தது' என்பதே.

ஒருவிசை வீட்டிலிருந்து இவருக்குக் காகிதம் வந்தபோது,

'தங்களுடைய பட்சமான காகிதத்தை இன்று காலையில் வர அதிகச் சந்தோஷத்தோடு பெற்றுக்கொண்டேன். அது

எனக்கு ருசியான போசனம்போலிருந்தபடியால் இரண்டுவிசை அதிகத் துரிதமாய் வாசித்தேன்' என்று எழுதினர். கேம்பிரிட்ஜிலும் இவர் இப்படிக்கொத்த பட்சமுள்ளவராகவே காணப்பட்டார். இவருக்கு அநேக சிநேகிதரிராவிட்டாலும், சில நல்ல சிநேகிதரிருந்தார்கள். மற்றவர்களோடு கூடியிருப்பதைவிட தனித்திருப்பதே இவருக்குப் பிரியம். படிக்கிற நேரந்தவிர, மற்றவேளைகளிலும் கதவைச் சாத்திக் கொண்டிருப்பார். தம்முடைய சிநேகிதரோடு அன்பாயும் சிநேகமாயுமிருந்தார்.

இவரை நன்றாய் அறிந்த டெக்கையர் கல்விச்சாலையில் தமக்கும் இவருக்குமிருந்த நேசத்தைக் குறித்துச் சொல்வது,

'ராக்லாந்தைப் பார்க்கிற சிலாக்கியம் எனக்கு முதல் விசை கிடைத்தது நன்றாய் என் ஞாபகத்திலிருக்கிறது. முக்கியமாய் எங்கள் கல்விச்சாலையைச் சேர்ந்தவர்கள் கூடுகிற ஒரு ஜெபகூட்டத்திற்கு ஒரு சிநேகிதன் என்னை வரும்படி அழைத்திருந்தார். சனிக்கிழமை சாயரக்ஷைதோறும் அவர் அறையில் வேதவசனத்தை வாசிக்கிறதற்கும், ஜெபம்பண்ணுகிறதற்கும் கூடிவருகிறது வழக்கம். முதல் கூட்டத்தில் நான் அவரைக் கண்டேன். அவர் காண்பித்த பயபத்தியும், நற்புத்தியும், தாழ்மையும் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. இவர்தான் எனக்குச் சிநேகிதராயிருக்க வேண்டுமென்று என் உள்ளத்தில் பட்டது. என் தாற்பரியப்படியே முடிந்தது. கல்விச்சாலையிலிருந்தகாலமெல்லாம் நாங்கள் ஒருவரோடொருவர் அதிக வங்கணமாயிருந்தோம். நாங்களிருந்த அறைகள் சமீபமாயிருந்தபடியால் ஒருவரையொருவர் கண்டுபேசச் சமையமிருந்தது. அவர் எந்தச் சம்பாஷணையையும் ஆத்தும விஷயங்கள்

பேரில் திருப்பிவிடுவார். சிலவேளை எங்கள் அறைகளில் உளுக்காந்து பேசிக்கொண்டிருப்போம். சிலவேளைகளில் அடுத்த கிராமத்திற்கு நடந்துகொண்டே சம்பாஷித்துக் கொண்டுபோவோம். நடுச்சாமஞ்சென்றபிறகும் உலாவிக் கொண்டே பேசிக்கொண்டிருப்போம். முக்கியமாய் தெய்வகாரியங்களையும், கிறிஸ்துவின் ஊழியக்காரராகும்போது நாங்கள் செய்யவேண்டிய வேலையையும், தேவனுடைய இராச்சியத்தில் இனி எங்களுக்குக் கிடைக்கும் இளைப்பாறுதலையும் குறித்துப் பேசிக்கொள்வோம். இந்த நாட்களை இப்பொழுதும் நினைப்பது எனக்கு அதிக இன்பமாயிருக்கிறது. நன்றாய் யோசிக்கத்தக்க ஏதாவது ஒரு காரியம் நேரிடுமேயானால் அதைக்குறித்து அவரோடு ஆலோசிப்பேன். நல்ல யோசனைக்காகமாத்திரமல்ல, அவருடைய அன்பான புத்திமதிக்காகவும் அப்படிச் செய்வேன். அவரிடத்தில் யோசனைகேட்கப்போனால் 'வாரும் என் பிரிய சிநேகிதனே! அதை கர்த்தருக்குச் சொல்லுவோம்' என்பது அவர் வழக்கம். உடனே முழந்தாட்படியிட்டு ஒரு பிள்ளை தன் தகப்பனிடத்தில் எவ்வளவு நேசத்தோடும் நம்பிக்கையோடும் கேட்குமோ, அப்படி கர்த்தர் இது காரியத்தை நடத்தவேண்டுமென்று கபடற்றபிரகாரமாய் மன்றாடுவார். படிப்புவிஷயங்களில் அவருடைய ஒத்தாசையை விரும்பினபேர்களுக்கு எப்போதும் தன்னால் கூடிய உதவிசெய்வார்' என்பதே.

சிறுவத்திலே இவரிடத்தில் கண்ட ஜெபகுணம் கல்விச்சாலையில் நன்றாய் ஸ்திரப்பட்டுப்போச்சுது. பின் இவருக்கு மைத்துனராகிய டியுர்க்கையரும் இவரோடே படித்துவந்தார். 'ராக்லாந்தையரிடத்தில் வாலிபமுதல் மரிக்கும்வரையில் காணப்பட்ட இலட்சணம் ஜெபத்தோடுகூடிய பிரயாசமென்று இவர் சொல்லியிருக்கிறார். தினசரி பாடங்களை

ஜெபத்தோடு தொடங்குவார். 'உன் வழிகளிலெல்லாம் அவரை அறிக்கையிடு, அவர் உன் பாதைகளை நடத்துவார்' என்கிற வேதவாக்கியப்படி நடப்பார்.

கணிதசாஸ்திர சோதனையில் இவருக்குக் கிடைத்த கண்ணியத்தைப்பற்றிய சமாசாரம் இவருக்கு வந்து எட்டினபோது, இவரிடத்தில் விளங்கின குணம் இதுவரையில் சொல்லிவந்ததோடு ஒத்திருக்கிறது. சோதனை முடிந்த உடன்கையில் தமது பட்டத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடாததினாலே வீட்டிற்குப் போய்விட்டார். செய்திவருகிற அன்று காலையில் தபால் வருகிறதற்குச் சற்றுமுன்னே, தம்முடைய அறையில் பிரவேசித்து, அந்தச் சமையத்திலும் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். அப்போது இவருடைய இனத்தார் ராங்கிலர் வரிசையில் இவர் நான்காவதாயிருந்த சந்தோஷமான செய்தியை அறிவித்தார்கள். இதைக் கேட்டவுடனே 'எவ்வளவு பெரிய இரக்கம், இதற்கு நான் அபாத்திரன், என்றார். ஆனாலும் சமாச்சாரம் உண்மைதானோவென்று நிச்சயமாய் அறிந்துகொள்ள காகிதத்தை வாங்கிப்பார்த்தார். தாம் அவ்வளவு கெட்டிக்காரனல்லவென்று நினைத்தபடியால் இவர் இதை லேசாய் நம்பவில்லை. மறுபடியும் கதவைச் சாத்திக்கொண்டு, தன் அறையிலே தனிமையாயிருந்தார். கிட்டின பந்துக்கள் இவருக்கு சோபனஞ்சொல்லி வாழ்த்தவேண்டுமென்று விரும்பினபோது, தேவனால் தனக்குக் கிடைத்த காரியசித்திக்காக அவர்களையும் முழந்தாள்படியிட்டு ஸ்தோ

த்திரிக்கும்படி கேட்டுக்கொண்டார். இதற்குப் பிற கு கல்விச்சாலையிலிருந்த சிநேகிதன் ஒருவனுக்கு இந்த கனம் தப்பிப்போனதினால், அதிக துக்கப்படுவாரென்று சொல்லி, பின்வரும் காகிதத்தையும் எழுதினார்.

'உமக்கு என்னத்தை எழுதுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. இந்தத் துக்கமான சமையத்தில் உமக்கு ஆறுதலுண்டாக ஏதாவது எழுதாமலிருக்கப்படாது. வந்த செய்தி திட்டமாயிராவிட்டாலும், உண்மையென்றே எண்ண வேண்டியதாயிருக்கிறது. ஒரு தாயானவள் தேற்றுவது போல உன்னைத் தேற்றுவேன். நீ தேற்றப்படுவாய் என்று சொன்னவர்தான் உம்மைத் தேற்றத்தக்கவர். அவரே தேற்றவேண்டும். எனக்கு மிகவும் பிரிய சிநேகிதனே! இதை வைத்துக்கொண்டு தேவனிடத்தில் கெஞ்ச அவரே உமக்குக் கிருபைசெய்யவேண்டும். உமக்கு வந்த இந்தத் துக்கத்துக்கு அவருடைய அன்புதான் காரணமென்று இப்பொழுது அறியாவிட்டாலும் இனிமேலறிவீர். உமக்குத் துன்பமிருந்தபோதிலும், அபாத்திரனுகிய எனக்கு நம்முடைய பரமபிதா, நான் நினையாதிருக்கையில் காட்டின தயவுக்காக அவருக்குத் தோத்திரஞ்செலுத்தியிருப்பீரென்று எண்ணுகிறேன். எனக்குள்ளதையெல்லாம் அவருக்கென்றே நைவேத்தியம்பண்ணும்படியான மனதை எனக்குத் தரவேண்டும். நம்மிருவருக்கும் செய்திருக்கும் காரியங்களை நமக்குப் பிரயோசனமாக ஆசீர்வதிக்கவேண்டும். நமக்காக ஜெபம்பண்ணின பிரிய சிநேகிதர்களை அவர் ஆசீர்வதித்து, அவர்கள் விசுவாசத்தைப் பெருகப்பண்ணவேண்டும்.

தேவாசிர்வாதம் உமக்குக் கிடைக்கவேண்டுமென்று நாங்கள் ஜெபம்பண்ணுகிறோம். எனக்கு நேரிடும்போலிருக்கிற சோதனைகளுக்காக நீரும் ஜெபம்பண்ணவேண்டும். இதை அவசர அவசரமாய் எழுதினேன்.

# III. குருத்துவ காண்டம்.

இவர் பி. ஏ. பட்டம்பெற்றபோது, கலாசாலைத் தோழனென்று அருத்தங்கொள்ளுகிற பெல்லோ என்னும் சிறந்த பேரையும் பெற்றார். இவர் சுதாவில் சிலருக்குப் படித்துக்கொடுத்ததுமல்லாமல், மேலே சொல்லிய பரோபகார முயற்சிகளையும் விடாமல் செய்தார். ஓய்வுநாள் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை அவர்கள் வீட்டிற்போய்க் கண்டுபேசியும் வருவார். இதோடேகூட குருப்பட்டத்திற்குத் தம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டிய தானபடியால் எபிரேய பாஷையும், வேதசாஸ்திரமும் படித்துவந்தார்.

இவர் 1841 ம௵ டிசம்பர்மீ தமக்குமுன் படித்துக்கொடுத்து அப்புறம் அத்தியக்ஷரான போஸ்ற்றெடென்னும் வேதசாஸ்திரியாரால் உதவி குருபட்டம்பெற்று, ஒரு சேகரத்தில் இரண்டு குருமாரோடே தேவ ஊழியம்பார்த்துவந்தார். பிறகு புதுப்பட்டியிலிருக்கிற பவுல் ஆலயத்தில் வெகு ஜாக்கிரதையாய் உழைத்தார். மற்றவர்கள் புகழத்தக்க சாமர்த்தியம் இவருக்கில்லை. இவர் சாதுரியரல்ல, மெதுவாயும் அமர்ந்த சத்தமாயும் பிரசங்கிப்பார். உயர்ந்த கருத்தும் வர்ணிப்பான சொற்களும் அதிலே கிடையாது. பொருளோ நல்லது. பிரசங்கம் ஆயத்தப்படுத்துவது இவருக்கு எப்பொழுதும்

வருத்தம். சனிக்கிழமை சாயந்தரங்களில் இங்கு மங்கும் உலாவிக்கொண்டு வருத்தப்பட்டு யோசிப்பார். ஞாயிற்றுக்கிழமை விடிய, மூனு நாலு மணிக்குப் படுத்து, ஏழு எட்டு மணிக்கு எழுந்திருப்பார். தான் செய்த எல்லாவற்றிலும் பரம எசமான் தன்னோடிருக்கிறதாகப் பாவித்து, அவருடைய ஆவியைப் பெற்றவராக நடந்தார். இதினால்தான் இவர் பேசினதிலும், செய்ததிலும் சாரமிருந்தது. பாத்திரற்குரிய வல்லமை இவரிடத்தில் கண்டது. பட்சத்தினாலும், சாந்தத்தினாலும் சபையாருடைய மனதை தன் வசப்படுத்தினார். அவர்களில் அநேகர் இவரை அதிகமாய் நேசித்து கனப்படுத்தினார்கள். இவரும் அவர்கள்மேல் பிரியம்வைத்து அவர்களுக்காக ஜெபம்பண்ணியும் வந்தார். அவர்களைவிட்டுப் பிரிந்தபிறகும் இப்படியே செய்தார். சாகிறவரையில் இவருக்கு இதுவே பாடமாயிருந்தது. இந்தியாவில் பிரசங்கத் தொழில் பார்த்துவந்தபொழுதும் அவர்களுடைய ஆத்தும க்ஷேமத்திற்காக திராக் கவலையுள்ளவராயிருந்தார். அவர்கள் மூன்று மாதத்துக்கொருவிசை கூடும் சங்கங்களில் வாசிக்கும்படியாய் வருஷத்திற்கு நாலுதரம் மிஷனுக்கடுத்த செய்திகளை அனுப்புவார். அவர்களை விசாரித்து வந்த போதகன்மாருக்கும் காகிதமெழுதிவந்தார். இவர் காகிதங்களைப்பார்த்தால் எவ்வளவு மனத் தாராளமுடையவரென்றும், ஒவ்வொருவனையும் குறித்து எவ்வளவாய்க் கவலைப்பட்டாரென்றும் அறியலாம். 'எந்த மனிதனையும் கிறிஸ்தேசுவிலே தேறினவனாய் நிறுத்தும்படிக்கு பவுலப்போஸ்தல

லைப்போல புத்திசொல்லி உபதேசித்துவந்தார். ஒரு சிநேகிதனுக்கு இவர் காகிதமெழுதினபோ தெல்லாம், தம்முடைய பழைய வேலைக்காரரில் ஒருவரையாவது நினையாதிருந்ததில்லை. இனத்தா ருக்குக் காகிதம் எழுதும்போதும் தமக்கு அரு மையானவர்கள் பேரைச்சொல்லி இப்படியே விசா ரிப்பார். பவுல் அப்போஸ்தலனைப்போல மற்றவர் களுக்காக அதிக விவரமாய் ஜெபம்பண்ணுகிறதில் இவரைப்போலொத்தவர்கள் அதிகப்பேரிருந்திருக் கமாட்டார்கள்.

இவர் உலக ஆதாயத்தை நாடி, தேவ ஊழியத் தில் பிரவேசிக்கவில்லையென்று துவக்கத்திலேயே காட்டினார். படித்துக்கொடுக்கிறதினால் அதிக வரு மானம் வந்தபோதிலும், அதினால் தன் வேலைக்குக் குறைவுண்டாகிறதென்றுகண்டு, அதையும் விட்டு விட்டார். தம் பொருளையும் உதாரமாய்ச் செல வழித்தார். வாங்குகிறதிலும் கொடுக்கிறதே பாக்கி யமென்று இரட்சகர் சொன்ன வார்த்தைகளை நினை த்து, யாவருக்கும் பட்சமாய் நடந்துவந்தார். இதி னால்தான் 'நம்முடைய பணத்தை தேவ மகி மைக்கென்று செலவழிப்பது எவ்வளவு சந்தோ ஷம். இதை அறிந்தார்களானால் பொருளாசைக் காரர் பொருள் சேகரித்துவைக்கவேமாட்டார்கள்' என்று எழுதினார்.

இவர் கல்விச்சாலையிலும், சர்வகலாசாலையிலுங் கூட நன்மைசெய்துவந்தார். கல்விச்சாலையில் உத வி உபாத்தியாயராயிருந்தபடியால், கணிதசாஸ்தி ரப் பிரசங்கம் செய்துவந்தார். நன்றாய்க் கல்விகற்

கவேண்டுமென்று தம்முடைய சிநேகிதரான மா ணாக்கருக்கு அடிக்கடி புத்திசொல்லுவார். ஓய்வு நாள் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொடுக்கிறது, மிஷன் சங்கத்துக்குப் பணஞ் சேர்க்கிறது முதலிய வைகள் அவருக்கு மிகவும் பிரியமாயிருந்தாலும், எதையும் அததற்குத்தக்கதாகச் செய்யவேண்டு மென்பார். செய்கிறதையும் எவர்களும் தீங்காய்ப் பேசாதபடி, விவேகமாய்ச் செய்யவேண்டுமென்று எச்சரிப்பார். மாணாக்கரையும் அடிக்கடி விருந்துக் கழைப்பார். நல்ல பத்திமானும், புத்திசாலியுமா யிருந்தபடியால் ஆத்தும கவலையில்லாதவர்களுங் கூட இவரை கனப்படுத்தினார்கள். இவர் மனசுக் கொத்து நடந்தார்கள். இவரை ஒரு தமையனைப் போலவும் பாவித்துவந்தார்கள். இவர் பத்தியுள்ள வராயிருந்ததினாலே, எப்பொழுதும் குறுவிசாரம் பிடித்திருந்தாரென்று சொல்லப்படாது. மெத்தச் சந்தோஷமாயிருப்பார். சிலவேளைகளில் விளையாட வும் செய்வார். மற்றவர்கள் நடுவில் அதிகம் பேசா மல் மௌனமாயிருப்பார். தம்முடைய வாயை எப் போதும் அடக்கிவந்தவராகக் காணப்பட்டார். அணுவாவது உண்மைக்குப் பங்கம்வாராதபடி தம் மைக் காத்துக்கொண்டார். இவர் இயல்பிலே சபைக் கோழை. மிகவும் சங்கோசப்படுகிறவர். இவருக்கி ருந்த செல்வாக்கு பேச்சினாலல்ல, நடக்கையினால் உண்டானது. இவர் கூடவிருக்கிறது மோட்சத்தி லிருக்கிறதுபோலிருந்தது.

தண்ணீரில் மறைந்திருந்து பிரமாண்டமான புகைக் கப்பலை நடத்துகிற முறுக்காணியைப்போ

ம இவர் இருந்தாரேயொழிய, கண்ணால் பார்க்கவும், காதால் கேட்கவும், தண்ணீரைச் சலாரென்று அடிக்கிற சுழல் சக்கரத்தைப்போலில்லையென்று இவர் சிநேகர் டெக் இவரைக்குறித்து உவமானமாய்ச் சொல்லியிருக்கிறார்.

## IV. மிஷனரிக்காயத்த காண்டம்.

இவர் படித்துவருகிறபோது மிஷனரியாவேனென்று கனவிலும் நினைக்கவில்லை. கூடப் படித்தவர்கள் இதைப்பற்றி இவரிடத்தில் யோசித்தபோது, அதற்கு எதிரிடையாகப் பேசினதுந்தவிர, இருக்கிற இடத்திலேயே இருந்துகொண்டு தேவ ஊழியம்பார்க்கலாமென்றும், கல்வித்திறமைக்குரிய பட்டங்கள் பெற்றபிறகு இதைப்பற்றி யோசித்துக் கொள்ளலாமென்றும்சொல்லி, மற்றவர்களுக்கிருந்த ஆசையையும் தணித்தார். பட்டம்பெற்றபிறகும், இவருக்கு இந்த அலுவலில் பிரவேசிக்கவேண்டுமென்கிற எண்ணம் வரவேயில்லை. ஒரு பெரிய சபையை விசாரித்துக்கொண்டு, கல்விச்சாலையில் வாசம்பண்ணுவதே இவருக்குப் பிரியம். இது தப்பினால் இல்வாழ்க்கைக்குரிய சுகானுபவங்களோடே காலங்கழிக்கலாமென்று நினைத்தார். பிறதேசம் போய்ப்பார்க்கவும் இவர் மனசு நோக்கவில்லை. பிரயாணம்பண்ணுவது இவருக்கு வெறுப்பு. நாலு வருஷக்காலமாய் சபையை விசாரித்துவந்தபடி

யால் இதே இவருக்குப் பிரீதி. சபையாரும் இவரை அதிகக் கணிசமாய் மதித்துவந்தார்கள். போதகன்மாரும் இவரை அதிகமாய் நேசித்துவந்தார்கள்.

இப்பேர்ப்பட்டவர் மிஷனரியாகத் தீர்மானித்ததுமல்லாமல், மிஷன்களுடைய அபிவிர்த்திக்கு அனுகூலமான ஒரு வகையை சுதாவில் கண்டுபிடித்ததும் எப்படியென்று விவரமறிவது அவசியம்.

மிஷனரியாகவேண்டுமென்ற எண்ணம் இவருக்குள் 1844 ம் வருஷம் செப்தெம்பர்மீ முதல் முதலுண்டாயிற்று. அக்காலம் தென் இந்தியாவில் மிஷனரியாயிருந்த பாக்ஸ் அய்யர் எழுதின கடிதத்தை வாசித்ததே இதற்கு மூலகாரணம். இந்த எண்ணம் முற்றுப்பெற்ற வகை எப்படியென்றால், கல்விச்சாலை சேகரத்தை விசாரித்துவந்தபோது, சர்ச்சுமிஷன் உபசங்கத்துக்கு பொக்கிஷக்காரனாயிருந்தார். சர்ச்சுமிஷன் சங்கத்து சிரேஷ்ட லிகிதராகிய என்றி வென்னையர் அங்குள்ள வாலிபரிடத்தில் அஞ்ஞானிகளுக்கு மிஷனரிகளாய்ப் போவதைப்பற்றிப் பேசும்படி 1844 ம் வருஷம் டிசம்பர்மீ வந்து இவரோடும், இன்னும் சிலரோடும் ஆலோசித்தார். அப்பொழுது இந்தச் சங்கத்தைச் சேர்ந்த மிஷனரிகள் சில சில சமயங்களில் கேம்பிரிட்ஜுக்குவந்து, அவ்விடத்து வித்தியார்த்திகளை கூடிவரச்செய்து, அவர்களுக்கு இதுகாரியத்தைப்பற்றி புத்திசொல்லவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதின்பேரில் பல கல்விச்சாலைகளிலும் மிஷன்வகைக்காக பணம் சேகரித்துவந்த வித்தி

யார்த்திகளை இவர் சனிக்கிழமை சாயுங்காலம் தம் முடைய அறையில் கூடிவரச்செய்கிறேனென்று சொன்னார். அப்படியே கூடினார்கள். அடுத்த வருஷம் மேமீ" இரண்டாம் தடவை கூடின கூட்டத்துக்கு பென்னையரும் வந்திருந்தார். அந்த சந்தர்ப்பம் கேம்பிரிட்ஜ் உதவி சங்கத்தின் வருஷோற்சவ தினம். அந்த நாளில் சருவகலாசாலை படகுபந்தயம் வந்து குறுக்கிட்டபடியால், அநேகர் வரத் தடைப்படுவார்களேயென்று இவர் துக்கத்தோடே சொன்னார். பென்னையர் இவர் அறைக்குப் போகிற வழியில் கூட்டம் கூட்டமாய் நிற்கிற வாலிபரைக்கண்டு, எப்போது இவர்கள் தங்கள் பெலனையும், அறிவையும் பெரிதும் பரிசுத்தமுமான வேறொரு பந்தயத்தில் செலவிடுகிறகாலம் வருமென்று உள்ளுக்குள்ளே பெருமூச்சுவிட்டார். இப்படியிருக்க அறையில் கூடிவந்தவர்களிடத்திலும் இவரைப்போலொத்த குணம் காணப்பட்டது. அந்தச் சமையத்தில் அவரவர் பெற்றிருக்கிற வரங்களை தேவமகிமைக்கென்று எப்படி உபயோகப்படுத்தலாம்? ஜெனன தேசத்தில் தேவ ஊழியம் பார்க்கிறதினாலோ, தேவனை அறியாத மற்றவர்களிடத்திற்குப் போவதினாலோ இவைகளைப் பிரயோசனப்படுத்தலாம் என்பதைப்பற்றிப் பிரசங்கம் நடந்தது. கேம்பிரிட்ஜ் உதவிசங்க வருஷோற்சவம் கொண்டாடின பிறகு, இவரும் ஆல்நட்டையரும் வாசற்படியில் நின்று காணிக்கைவாங்கினார்கள். அப்போது கூடிவந்த அநேக வாலிபரை பென்னையர் பார்த்து, இவர்களில் சிலபேராவது மிஷனரிகளாவார்களென்

று எண்ணினர். காணிக்கைவாங்கின இந்த இரண்டுபேரும், அந்த அலுவலுக்குப்போக யோசித்திருந்ததை அவர் அறியவேயில்லை. சுவாமி கிருபையால் சில மாசங்களுக்குள்ளாக இந்த இரண்டு பேரும் தென் இந்தியாவுக்கு மிஷனரிகளாக புறப்பட்டுவிட்டார்கள். மிஷனரியாகிற அபிப்பிராயங்களைப்பற்றி இவர் கனம்: டெக்கையருக்கு எழுதினதாவது.

'உம்முடைய கடிதம் எனக்கு வந்து எட்டின நாள்முதல் விசேஷமான ஒரு காரியத்தை நான் யோசித்துக்கொண்டிருந்தபடியால் இதுவரையில் பதிலெழுதாமலிருந்தேன். உம்முடைய யோசனையையும் கேட்கவேண்டுமென்று விரும்பினேன். அதைக்குறித்து நீரும் எனக்காக ஜெபம் செய்துவரவேண்டும். அது இன்னதென்று சொல்லட்டுமா? சகோரனே! நான் என் சுதேசத்தையும், என் பிரியமான சிநேகிதரையும், இன்னும் மற்றச் சவுக்கியங்களையும் விட்டுப்போட்டு, அஞ்ஞானிகளிடத்தில் மிஷனரியாகப் போவது தேவ சித்தமோ என்பதைப்பற்றி கர்த்தரிடத்திலே விசாரித்துவருகிறேன். இந்த எண்ணம் எனக்கு எப்படிவந்ததென்று கேட்கிறீரா? போன செப்றெம்பர் மாசத்தில் அது எனக்குள் முதலாவது தோன்றிற்று. அப்போது தேவபத்தி எனக்குள் அதிகமாய்த் துலங்காததால் கொஞ்சம் ஜெபம்பண்ணி விட்டுவிட்டேன். அதற்காக இப்போ அதிகமாய்த் துக்கப்படுகிறேன். இரண்டு வாரங்களுக்குப் பிறகு மிஷன்களைக்குறித்து நானிருக்கிற இடத்தில் பேச்சுண்டாயிற்று. ஆஸ்லிங்பீல்டில் கூடின கூட்டத்தில் அதற்குரிய ஆசையுண்டானது. என்ரி பென்னென்கிற அந்த நல்ல போதகர் சொன்ன அநேக சங்கதிகள் என் மனதில் நன்றாய்த் தைத்தது. தகுந்த ஆட்கள் கிடையாமல் வருத்தப்படுகிறார். ஒரு தடையுமில்லையே, பின்னை நான் என்

போகக்கூடாதென்று என் மனதில் பட்டது. போன திங்களுக்கு முந்தின திங்களிலே கூடின மிஷன் கூட்டம் கலைந்தபிறகு, என் மனோபாவத்தை என் பிரிய சகோதரிக்குத் தெரியப்படுத்தினேன். நான் விட்டுப் பிரிகிறது அவர்களுக்கு அதிகத் துக்கமாயிருந்தாலும், தட்டிச்சொல்லாமல், அதில் பிரவேசிக்கும்படியான மனசுண்டானதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினார்கள். என் மைத்துனருக்கும் இதைப்பற்றி சாடையாய் எழுதியிருக்கிறேன். என் உடன்பிறந்தாளுக்கு துக்கமிருக்குமென்று, அவளுக்குத் தெரிவிக்கவில்லை. நேற்றுச் சாயுங்காலம் என் மைத்துனனுடைய கடிதம் வந்தது. அதில் இந்த விஷயத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. போன திங்கட்கிழமை இங் கேவந்த ஆல்நட்டையருக்குமாத்திரம் நான் இதை வாய் விட்டேன். இதைப்பற்றி நாங்கள் இருபேரும் செய்த சம்பாஷணை வெகு மதுரமாயிருந்தது. பெரி ஐயரிடத்திலும் பேச யோசித்திருக்கிறேன். இவர் எனக்குத் தைரியம் சொல்வாரானால், நாளை ஸ்கோல்பீல்ட் சாஸ்திரியாரிடத்தில் பேசுவேன். என் பிரிய சகோதரனே! எனக்காக அதிகமாய் ஜெபம்பண்ணும். ஒருவேளை இந்த எண்ணம் வீண் தோற்றமாயிருக்கலாம். சொந்த ஊரில் அதிக அநுகூலம் காணுததினால் மனம் இப்படி நினைக்கிறதோவென்று பயப்படுகிறேன். பக்திமான்கள் என்னைப் புகழ வேண்டுமென்ற நோக்கமாய் நான் இப்படி நினைத்தாலும் நினைக்கலாம். அப்பா! இருதயம் எவ்வளவு கெட்டது, நானிருக்கும் இடத்தில் என் வேலையில் எவ்வளவோ அசதி, எவ்வளவோ குற்றம் குறைகள், இரட்சகர்பேரில் எவ்வளவு கொஞ்ச அன்பு, ஆத்துமாக்கள்பேரில் ஆவல் எவ்வளவு சொற்பம். இவ்வளவு உண்மைத்தாழ்ச்சியிருக்க, அதிகப் பொறுப்பான வேலைக்கு நான் எம்மாத்திரம். நான் சரியாய் நடக்கவும், மரணபரியந்தம் உண்மையாயிருக்கவும் தேவ

கடாட்சம் வேண்டுமென்று நீர் பிரார்த்தியும் என் பிரிய சகோதரனே! இவ்விடத்திலேயே பிரயோசனப்படுகிற அநேக அலுவல்களுண்டு. இது எனக்குத் தெரியும். என் சேகரத்தில் எத்தனை திரளான சனங்கள் அஞ்ஞானம்போலொத்த இருளில் கிடக்கிறார்கள். அவர்களுக்காக எவ்வளவு கொஞ்சமாய் உழைத்திருக்கிறேன். அஞ்ஞானிகளுடைய நிலைமையோ கார் இருள். வெளிச்சமே இல்லை. இலக்ஷாதிலக்ஷம் சனங்களுக்கு இரண்டுமூன்று பேர்தானே யிருக்கிறார்கள். நான் போய்விட்டால் இங்கே என் வேலைக்கு அநேகர் கிடைப்பார்களே. போகிறதினால் நான் காட்டுமுன்மாதிரியைப் பார்த்து, கேம்பிரிட்ஜிலுள்ள அநேக வாலிபர் இதுவிஷயத்தில் அதிக வைராக்கியங்கொள்வார்களென்பது எனக்குத் திண்ணமாயிருக்கிறது. இதற்கு உன்னத ஞானம் எனக்கு வேண்டும், சொந்தப்புத்தியில்மாத்திரம் சாயக்கூடாது. இதிலும் மற்றெதிலும் பரிசுத்த ஆவியினால் சரியான யோசனை எனக்கு வேண்டும். உங்களிருவருடைய உபசரணைக்காக மெத்தவும் வந்தனஞ்செய்கிறேன். உங்களைக் காணச் சமையங்கிடைத்தால் எனக்கு எவ்வளவோ சந்தோஷம். கர்த்தர் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக. அவரை எல்லாவற்றிலும் அதிகமாய் நேசிக்கவும், ஒருவரிலொருவர் அதிகமாய் அன்புகூரவும் உங்களுக்குக் கிருபை உண்டாவதாக என்பதே.

இதற்குக் கொஞ்சநாளைக்குப் பிறகு மேலேசொன்ன பேர்களுடைய ஆலோசனையைக்கேட்டு வென்னையருக்குக் கடிதமெழுதினார். அதாவது,

ஐயாவே! பதினைந்துநாளுக்குமுன் நாம் கூடினது தங்களுக்குத் தெரியுமே. அதுமுதல் மிஷனரி அலுவலைக்குறித்து யோசித்துச் செபம்பண்ணினதுமல்லாமல், மற்றவர்களையும் கேட்டேன். தங்களையும் கேட்கிறேன். நான் அந்த வேலை

யிற்பிரவேசிப்பது கர்த்தருடைய சித்தமென்றால், எனக்குப் போக மனந்தான். என் மனசு அறிந்தமட்டும் சொல்லுகி றேன். இதை நினைக்க நினைக்க, ஆசை அதிகமாகிறது. தகா தமுகாந்தரங்களையிட்டு இப்படி நினைக்கவும் ஏதுவுண்டு. நல்லபேர் பெறலாமென்பது இதுகளில் ஒன்றாயிருக்கலாம். இவைகளையெல்லாம் அகற்றின பிறகும், கர்த்தருக்குச் சித் தமானால் புறப்பட்டுப்போக விரும்புகிறேன். அஞ்ஞானிக ள்பேரில் அதிக வாஞ்சையாயிருக்கிறதென்று சொல்லமாட் டேன். இப்பொழுது விசாரித்துவருகிற சபையாருடைய இரட்சிப்பைக்குறித்து அவ்வளவு ஆவல் எனக்குள் இல்லை யே என்று துக்கிக்கிறேன். மிஷனெரி அலுவலைக்குறித்து நான் அதிகமாய் நினைக்கவும், அதிலே நான் சேர்ந்துகொள்வ து அவசியமாவென்று விசாரிக்கவும் என்னை ஏவிவிட்ட மு காந்தரம் ஆள்கிடையாமல் அவதிப்படுகிறார்கள் என்பதுதா ன். இங்கேயும் போதுமானவேலைஇருக்கிறது. இதையிட்டுப் போகாமலிருக்கவும்படாது. காரிய சீர் நிருவாகங்களைப் பார்க்கும்போது, நான் தூரதேசங்களுக்குப்போவதே தேவ சித்தமென்று எண்ணுகிறேன். இதுவிஷயத்தில் தாங்கள் யோசனைசொல்லவேண்டுமென்று என் காரியங்களையெல் லாம் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். எனக்குத் தாயுமில்லை, தகப்பனுமில்லை. ஒருவருடைய மனசுப்படி நடக்கவேண் டுமென்கிற கட்டாயமுமில்லை. அன்பினால்மாத்திரம் நான் இரண்டுபேருக்கு அதிகமாய்ப் பாத்திபப்பட்டவன். ஒருத் தி எனக்கு உடன்பிறந்தாள். ஒரு பத்தியுள்ள போதகரைக் கலியாணம்பண்ணியிருக்கிறாள். ஒன்றைவிட்ட சகோதரி ஒருத்தியுண்டு. அவர்கள் எனக்குத் தாய்க்குத்தாயும் சகோத ரிக்குச் சகோதரியுமானவர்கள். ஆதிதொடுத்து இதுகாரியத் தைக் குறித்து யோசித்தேன். பெரி, ஸ்கோல்பீல்ட் என்ப வர்களையும் யோசனைகேட்டேன். அவர்கள் என்னை இதற்கு உற்சாகப்படுத்திவிட்டதுமல்லாமல், தாராளமாய் உங்களி

டத்திலும் சொல்லச்சொன்னார்கள். அதிகமாய் உங்களை அல ட்டமாட்டேன். என் வயசைமாத்திரம் சொல்லுகிறேன். போனமாசத்தோடே எனக்கு முப்பதாச்சுது. கூடியமட்டும் எனக்குநல்ல தேகசவுக்கியமுண்டு, இதற்காகவும் கர்த்தரு க்குஸ்தோத்திரம். பிரியமுள்ள ஐயாவே! தாங்களும் எனக் காகச் செபம்பண்ணுங்கள்.

## இவர் ஆல்நட்டையருக்கு எழுதினது,

'நாம் சம்பாஷித்துக்கொண்டகாரியம்' எப்படி முடிந்த தென்று சுருக்கத்திற்சொல்லுகிறேன். நீர் போனபிறகு என் விருப்பத்தைப் பெரி ஐயருக்குத் தெரியப்படுத்தினேன். இதைக் கேட்டவுடனே ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, இத ற்கு எவ்வளவு அருமையான சிநேகிதனையும் போகவேண் டாமென்று சொல்லமாட்டேனென்றார். இந்தத் தைரியம் வைத்துக்கொண்டு மறுநாள் சாஸ்திரியாரிடம் பேசினேன். அவரும் வெகு பட்சமாய் அப்படியேசெய்யும், இந்த விரு ப்பம் இன்னும் உமக்கிருக்குமாகில் இரண்டொருநாள் பொ றுத்து வென்னையருக்கு எழுதும் என்றார். படபடப்பாய் செய்வது சரியல்லவென்றெண்ணி, ஞாயிற்றுக்கிழமைக் குப்பிறகு வென்னையருக்கு எழுதினேன். அதற்கவர் ஒரு சிறு கடிதமெழுதி, பின்னால் விவரமாய் எழுதுகிறேனென் று தெரிவித்தார். சனிக்கிழமை அது வந்து சேர்ந்தது. மிஷ னெரி வேலைக்குத் தேவன் என்னை அழைத்திருக்கிறது நிச் சயமென்று எண்ணுகிறார். எனக்கு அருமையானவர்கள் என்னைவிட்டுப் பிரிந்திருக்க மனமாயிருக்கிறதினாலும், வே று பாசங்களில்லாததினாலும், கேம்பிரிட்ஜில் நான் மிஷ னெரிபோல் அலுவல் பார்த்திருப்பதினாலும், இந்த ஆசை இதுவரையில் நிலைத்திருப்பதாலும் அப்படி நினைக்கிறேன் என்கிறார். இந்த விருப்பம் இப்படியேயிருக்குமானால் சங்க த்தின் சில முகாமைக்காரரைக் கண்டு பேசும்படி தம்மிடம்

வரச்சொல்லுகிறார். வியாழக்கிழமை வருகிறேனென்று அவருக்கு இப்போதுதான் எழுதினேன்.

வரவர என் காரியம் அனுகூலப்படுகிறபடியால் தேவனைத் துதிக்கிறேன். உமக்கும் அப்படியே ஆகவேண்டும். செபத்தில் உறுதியாய்த் தரித்திருப்போம். எனக்கு இந்த விருப்பம் உண்டாகிக் கொஞ்சநாளானபோதிலும், இத்தனை சீக்கிரம் சுவாமி அதை வாய்க்கச்செய்தது எவ்வளவு ஆச்சரியம். நீர் பதிலெழுதுவீரானால் அதிகச் சந்தோஷம். என் நோக்கத்தை பிரியமுள்ள டெக் என்பவருக்கு வெளியிட்டபோது அவரும் வெகு பட்சமாய் பதிலெழுதினார்.'

இந்தக் கடிதங்களை வாசிக்கிறவர்களுக்கு இவருக்கிருந்த உத்தம தாழ்மையும், அமர்ந்த புத்தியும் மனதில் படாமல் போகாது. சிலர் நூதனமான ஒரு காரியத்தைத் திடீரென்று ஒருவித உற்சாகத்தோடே ஆரம்பித்தாலும், விடாமுயற்சியாய் சகல வருத்தங்களையும்சகித்து, முற்றுமுடிய அதை சாதிக்கிறதில்லை. இப்படிப்பட்ட ஆத்திரப்புத்தி இவருக்கில்லை. திடீரென்று பற்றி, பின்பு சட்டென்று அடங்கிப்போகிற வைராக்கியமாகிய தீயைப் போலல்ல, கிறிஸ்துவின்பேரிலும், ஆத்துமாக்கள் பேரிலும் இருக்கிற அன்பு வரவர அதிகமதிகமாய் எரிகிற சுவாலைபோல இவரிடத்திற் காணப்பட்டது.

இவர் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதே தனது அலுவலென்று உணர்ந்தார். உலகமெங்கும்போய் சிருட்டிக்கப்பட்ட யாவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்தார். இவருடைய பார்வைக்கு இங்கிலாந்துதேசமாத்திரமல்ல, உலகமுழுவதும், விளைநிலமாகக்கண்ட

து. அறுப்புக்கு வேலையாளாகக் கர்த்தரால் நியமிக்கப்பட்டபடியால், அவருடைய நாமத்தை முன்னிட்டு எந்த இடத்திற்கும் போக அவருக்குத் தம்மைக் கையளித்தார். விளைநிலம் முக்காலேமூணுவீசம் இன்னும் தரிசாய்க்கிடந்தபடியால்தான் இவருக்கு இவ்வளவு ஆத்திரமிருந்தது. போதகனும், போதக அந்தஸ்துக்குரிய எவனும் நான் ஏன் போகவேணுமென்றல்ல, ஏன் போகக்கூடாதென்றே தன்னை ஆராய்ந்துபார்க்கவேண்டுமென்பதுபோல நினைத்தார்.

இவர் இந்தியாவுக்குவந்து சில மாசங்களுக்குப் பிறகு, தம்மை யோசனைகேட்ட ஒருவருக்கு எழுதின கடிதத்தில் இந்த எண்ணமே விளங்குகிறதைக் காணலாம்.

'நீர் எழுதின இன்பமான கடிதமும், உள்ளடக்கமும் வெள்ளிக்கிழமை வந்துசேர்ந்தது. நாம் கலந்துபேசி, கேட்கிறவர்களுக்கு வாக்களித்திருக்கிற ஞானத்தைப் பெறும்படி பிரார்த்திப்போமானால் எவ்வளவோ சந்தோஷம். பதிலென்ன எழுதலாமென்று எனக்கே தெரியவில்லை. உம்மைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசை எனக்கதிகம். கர்த்தருடைய ஊழியத்தின்மேல் உமக்கிருக்கும் பத்திவைராக்கியத்தை நான் அறிந்தவனானபடியால் இப்படி விரும்புகிறேன். இந்த அலுவல் விசேஷித்ததானபடியால் நன்றாய் யோசித்துத்தான் உமக்கு எழுதவேண்டும். என் யோசனையும் உமக்கு அவ்வளவு பிரயோசனப்படாது. ஏனெனில் என்னுடைய கடிதம் உம்முடைய கையேறுமுன் மூன்றுமாதமாகிப் போகுமே. அதற்குள் நீரே தீர்மானஞ்செய்துபோடுவீர். நீர் சமுசாரவாளியாயும் சபையை விசாரிக்கிறவரா

யுமிருப்பதினால் சற்று தாமதிப்பீரென்றெண்ணி, இரண்டொரு காரியங்களைமாத்திரம் இதிலே சொல்லுகிறேன். சமுசாரவாளிக்கு இந்தியாவிலிருக்கிற பெரிய வருத்தம் சமுசார சுகத்தைவேண்டி அடிக்கடி பிரிந்திருக்கவேண்டியது தான். பிள்ளைகளுடைய படிப்புக்காகவும் அவர்களை தூர தொலைக்கு அனுப்பவும் வரும். இது வெகு வருத்தம். கர்த்தர் நிமித்தம்வரும் இவ்வித துன்பங்களைச் சகித்தால் திவ்ய ஆறுதல் அதிகமாயுண்டாகும். ஆகிலும் அவைகளை முந்தி விசாரிப்பது உத்தமம். நான் கவனித்தமட்டும் அங்கே ஒரு குருவுக்கிருக்கும் வருத்தத்தைவிட இங்கே ஒரு மிஷனெரிக்கு அதிக வருத்தமில்லை. சங்கத்தார் கொடுக்கிற சம்பளம் செலவுக்குப் போதுமானதே. அநேகம் ஐயன்மார் வீடுகளுக்கும்போய்த் தங்கியிருக்கிறேன். யாதொரு குறைவுமில்லை. மற்றவர்கள் சொல்லுகிறபடி தேசம் அவ்வளவு காங்கையானதுமல்ல. சிலவேளைகளில் சற்று அதிகம்.

'இரக்ஷண்ய வேலை சித்திபெறாமல் நம்பிக்கை வியர்த்தமாய்ப்போகிறதுதான் மனசுக்குண்டாகிற பெரிய சங்கடம். சேகரங்கள் அதிக விஸ்தாரமாயிருப்பதினாலும், உதவிக்கு ஐரோப்பிய குருக்களில்லாததினாலும் சீமையிலுள்ளவர்களைவிட இங்குள்ள ஐயன்மார்கள் உலகக்காரியங்களில் தலையிட்டுக்கொள்ளவேண்டியதாய் நேரிடுகிறது. கட்டிடங்களிலும், மராமத்துகளிலும், உபதேசிமாரை விசாரிக்கிறதிலும் அதிகமாய்க் காலத்தைப் பின்னிடுகிறார்கள். தேச நிருவாகத்தை நன்றாயறியாதவர்கள் அஞ்ஞானிகளிடத்தில் தாராளமாய்ப்புழங்கலாமென்று எண்ணுவார்கள். காரியமோ அப்படியல்ல. நூதனமாய்க் கிறிஸ்தவர்களானவர்களுக்குப் பிரசங்கிப்பது அத்தனை சந்தோஷமுமல்ல. பழைய மனிதச் சேட்டை இங்குமங்கும் ஒரு மாதிரிதான். நான் இந்தியாவில் இறங்கும்போது அன்பென்னும் அனல் எவ்வளவோ தீக்ஷண்மாய் எரிந்துகொண்டிருந்தாலும், எங்கே அது வரவரக்

குளிர்ந்துபோகிறதோ, எங்கே நான் இங்கிலாந்திலிருந்தது போல உலக சிந்தையுள்ளவனுய்ப் போகிறேனே என்கி றதுதான் மிஷனெரி அலுவலில் பிரவேசிக்கிறதற்குமுன் னே எனக்கிருந்த விசேஷித்த பயம். இதற்குக் காரணம் அவிசுவாசமே. உமக்கும் இதைச் சொல்லியிருப்பேன். கர்த்தர் எனக்குக் காட்டின தயவு மிகுதி. இதையிட்டு இர ண்டுவிசை அழவேண்டியும் வந்தது.

என் பிரிய சகோதரனே! நான் எழுதினதில் ஏதும் உம் மை அதைரியப்படுத்தமாட்டாது. இன்னும் இரண்டொரு விசேஷங்களை நான் அகத்தியம் சொல்லவேண்டும். இங்கி ருக்கும் மிஷனெரிகளுக்குக் கர்த்தரை மகிமைப்படுத்தத்தக் க வழிவகைகள் அநேகமுண்டு. அவர்கள் உபதேசிமாரைக் கொண்டு தேவ ஊழியம் பார்த்துவருகிறபடியால் கண்கா ணிமார்கள்போலிருந்து விசாரணைசெய்து வருகிருர்கள்.

கர்த்தருடைய பார்வைக்கு நலமாகக்கண்டால், எனக்கு அருமையான சர்வகலாசாலையிலிருந்தும், கண்ணுக்குக்கண் ணன கல்விச்சாலையிலிருந்தும், எல்லாவற்றையும்விட அரு மையான சிநேகிதர் இனத்தாருக்குள்ளிருந்தும் அறுப்புக்கு எசமான் இத்தேசத்திற்கு வேலையாட்களை அனுப்பவேண் டுமென்று அடிக்கடி ஜெபம்பண்ணிவருகிறேன். என் பிரார்த்தனைக்கு எப்போது உத்தரவு கிடைக்குமோ! சீக்கிர த்தில் கிடைக்குமென்று நினைக்கிறேன்.'

இந்த விஷயத்தைக்குறித்து இன்னும் இரண்டொ ரு காகிதங்களிலிருந்து எடுத்துச் சொல்லுகிருேம்.

மிஷனெரி அலுவலைத் தெரிந்துகொண்டதற்காக நான் மெத்தவும் சந்தோஷப்படுகிறேன். கேம்பிரிட்ஜ் சந்தோ ஷம் இதற்கு நிகரல்ல. எங்கும் மகம்மதுமார்க்கத்தாரையும், அஞ்ஞானிகளையும் காண்கிறேன். இவர்கள் நெற்றிகளில் விக்கிரகாராதனைக்குரிய குறிப்புகளிருக்கிறது. இதுவும் இந்தப் பெரிய பட்டணத்திற்கு மிஷனெரிகள் எவ்வளவு

கொஞ்சப்பேராயிருக்கிறார்களென்பதும் எனக்கு அதிக மனநோவாயிருக்கிறது. அதிகப்பேர் வேணுமென்று கேட்கிறது தேவசித்தத்திற்கு ஏற்றதுதான். சீமைத் தபால் வரும் போதெல்லாம் இதற்கேற்ற செய்தி உண்டாவென்று ஆசையோடு பார்க்கிறேன். நான் வந்து ஆறுமாதமாகியும், ஆல்நட்டையர் ஒருவரைத் தவிர எவரையும் காணோம். இதற்காக நாம் ஜெபம்பண்ணிவருவோமானல் எவ்வளவு தாமதம் நேரிட்டாலும், காரியம் கைகூடுமென்பதற்குச் சந்தேகமில்லை. பீஸ் கல்விச்சாலையில் மிஷனெரி சிந்தையிருக்கிறதாகக் கேட்டுச் சந்தோஷப்படுகிறேன். அது பிரபலமாகும்படி உம்மால் கூடிய உதவிசெய்யும்' என்று உடௌஸ் ஐயருக்கு எழுதினார்.

கேம்பிரிட்ஜிலுள்ள உதவிச்சங்கத்து செக்ரற்றேரியாகிய நிக்கல்சன் ஐயருக்கு,

சென்னபட்டணம்.

1847 ஆ பெப்ருவரி மீ 12 உ.

மிஷனெரிகளுக்கிருக்கவேண்டிய குணங்களைக்குறித்து நான் எழுதவேண்டுமென்று நீர் கேட்டுக்கொண்டீரே. இதை நான் அடிக்கடி நினைத்ததுண்டு. நானாய் யோசித்து ஒன்றொன்றாய்ச் சேர்த்து எழுதினதைப் பார்த்தாலோ தேவதூத லக்ஷணங்களைத் தொடுத்தாற்போலிருக்கிறது. விசேஷித்துச்சொல்லவேண்டிய குணங்களில்லை. தென் இந்தியாவைப்பார்த்தாலும், வேறெந்த நாட்டைப் பார்த்தாலும் நாம் செய்ய நினைக்கும் தேவபணிவிடையில் பலவிதங்களுண்டு. அததற்கு வெவ்வேறான சற்குணங்களும் வேண்டும். மிஷன்கள் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமானல், அஞ்ஞானிகளுக்குத் தைரியமாய்ப் பிரசங்கித்துப் போர் செய்ய மனமுடையவர்கள் வேண்டும். கிறிஸ்துமார்க்கத்திற் சேர்ந்தவர்களை ஒழுங்குப்படுத்தி, ஸ்திரப்படுத்தத்தக்க சமர்த்தரும் வேண்டும். இன்னும் கர்த்தருடைய ஒத்தாசை

யைக்கொண்டு பின்வரும் சந்ததியாருக்குள் தேவ பணிவி டையை நிறைவேற்றத்தக்க சுதேசக் குருக்களை, தார்ப்பியத் செய்யத்தக்க படிப்பரும் வேண்டும். சர்ச்சுமிஷன்வகை வேலையில் எத்திறமையுடையவர்களுக்கும் அலுவலிருக்கி றது. இயேசுக்கிறிஸ்துவில் அன்பும், சொஸ்தப்புத்தியும், பாஷை கற்கும் திறமையும், தேகசவுக்கியமுமுள்ள யா ரும் மனசும் தெய்வச்செயலும் கூடிவருமானால் தாராள மாய்ப் பிரவேசிக்கலாம். உம்மோடு சேர்ந்து மிஷன்வகைக் காகப் பணஞ்சேர்க்கிறவர்களுடைய பேர்களை எனக்குத் தயவுசெய்து எழுதவும்.'

பெரோன் ஐயரவர்களுக்கு,

'கர்த்தருடைய ஊழியத்தில் மற்றவர்கள் சேரும்படி பிர யத்தனம்பண்ணாததற்காக நான் ரெம்பவும் துக்கப்படுகி றேன். அநேக ஆட்கள் வேண்டியிருக்கிறது. இது சபை யைப் பொறுத்தவேலை. காலமோ கொடிய காலம். ஆகிலும் கிறிஸ்த பக்தி அதிகம் துலங்குகிறது. இங்கிலாந்திலிருக் கிற போதகர்களுக்கு தேவன் தமது கிருபையைப் பரிபூர ணமாய் அளிப்பாராக. மிஷனெரிகளெல்லாரும் கோதுமை மணியைப்போல பூமியில் விழுந்து அழுகிப்போக மனமு ள்ளவர்களாயிருப்பார்களானால் எவ்வளவோ மனத்திருப்தி யாயிருப்பேன். ஒருவரும் மிஷனெரியாக வராவிட்டாலும் இது ஒன்றிருந்தாலே போதும்.'

கிளார்க்கையருக்கு,

'நீர் மிஷனெரியாக ஏற்பட்டசெய்தியை, டிக்கையரிட த்திலிருந்தும், உம்மிடத்திலிருந்தும் வந்த கடிதத்தின்மூல மாய் அறிந்து மிகவும் சந்தோஷப்பட்டேன். ஏன் முந்தி இதைச் சொல்லவில்லையென்று கேட்பீர். உமக்கு யோச னைசொல்ல நான் தகுந்தவனல்ல என்பதே முக்கிய கார ணம். மேலும்மேலும் இதைப்பற்றி யோசித்ததில் இரண் டொருகாரியம் என் மனதில் தட்டுப்பட்டது. இப்பொழு

து சாவகாசமிருப்பதினால் சொல்லுகிறேன். ஆகிலும் கொஞ்சம் லாஞ்சனையாயிருக்கிறது. எனக்கு உதவியாக சென்னபட்டணம் வருகிறதானால் வெகு சந்தோஷந்தான். நான் உம்மோடு பழகினமட்டும் என்மனம் உம்மை நாடுகிறது. என் பிரயத்தனமேயில்லாமல் தெய்வச்செயலாய் நீர் வருகிறதானால் எவ்வளவோ நன்றியறிதலுக்கிடமாகும். காரியமோ முந்திப்போச்சுது. குருப்பட்டம்பெற்ற ஒருவர் எனக்கு அகத்தியம் வேண்டியதுமில்லை.

மிஷனெரி அலுவலைப்பற்றி இப்பொழுது சொல்லுகிறேன். அதற்குப் புஸ்தகங்களை வாசிக்கவும், பாஷைகளைக் கற்கவும் வேண்டியதில்லை. வேத அறிவும், தன்னறிவும், பிறர் அறிவும் அவசியம் படிக்கவேண்டும். பிரசங்க பீட உபந்நியாசத்தைக்குறித்தல்ல, வீட்டுக்குவீடுபோய் சனங்களைக் கண்டுபேசும் அறிவைக்குறித்துத்தான் சொல்லுகிறேன். மிஷனரியாக வருகிறவர்களில் அநேகர் இங்கிலாந்தில் தேவ ஊழியம் பார்த்தவர்களல்ல. அந்த அனுபவமிருந்தால் இதற்கு லாயக்காயிருப்பார்கள். திருநெல்வேலி மிஷனெரிகளோ அவ்விடத்துச் சனங்களுக்கு அதிகமாய் வித்தியர்சப்படுகிறார்களாகையால், விழிப்பாயிராவிட்டால் இவர்கள் ஆத்தும சத்துருவோடு நெருங்கிப் போர்செய்யவதுவிராது. இதினால் அவர்கள் பிரயோசனப்படுகிறதுமில்லை. வேலை பலிக்கிறதுமில்லை.

இந்து வேதசாஸ்திரங்களை நான் வாசியாதவனானபடியால், அபிப்பிராயம் சொல்வது யுக்தமாயிராவிட்டாலும், தமிழரோடு அதிகமாய்ப் புழங்குகிறதினால் அதுகளைப் பற்றிக் கற்றுக்கொள்வதே போதுமென்றெண்ணுகிறேன். பட்லர்செய்த ஒற்றுமை நூலை நன்றாயறிந்துகொண்ட யாரும் அஞ்சுக்குக்கிரண்டு பழுதில்லாமல் மிஷன் அலுவலைப் பார்க்கத் தகுதியுள்ளவர்களாயிருக்கலாம். திருநெல்வேலி மிஷனெரிகள் முக்கியமாய்ப் போராடவேண்டியது அறி

வோடல்ல, ஆசாபாசங்களோடுதான். நல்ல மிஷனெரிகள் சிலருண்டு. அறிவாளிகள், புருஷோத்தமர், தேவதாபக்தர் இப்பேர்ப்பட்டவர்களும் சமஸ்கிருத பாஷையைக் கற்பது நலமென்று யோசனை சொல்வார்கள். என் எண்ணமோ வருஷாவருஷம் வேறுபடுகிறது. இப்படிப்பட்ட பாஷைகளைத் தெளியக் கற்பதினால் கிரந்த கர்த்தாக்களாகி, நியாயவல்லோராகலாமென்றும், பாஷாந்த கரணிகளாகலாமென்றும், பெந்தேகோஸ்துநாளின் அற்புத வரம் தற்காலத்தில் அருமையானபடியால், சம்பிரதாயப் பிரசங்கிகளாகலாமென்றும் சிலர் ஆக்ஷேபிப்பதுண்டு. எனக்கோ இது சரியாய்க் காணவில்லை. சரியான வயசும், தகுந்த குணமும், வேத அறிவும், தன்னறிவுமுள்ள ஒருவன் பிரசங்கிக்கிற ஆசையுடையவனாயிருப்பானாகில் பாஷையைக் கொஞ்சகஞ்சம் படித்தவுடனே, ஒரு நிமிஷமாவது தாமதித்திருக்கக்கூடாதென்பதே என் அபிப்பிராயம். இருக்கவிருக்கப் பாஷை தானாய் வந்துவிடும். முன்ஷிகளை வைத்துக்கொண்டு வீண்காலம்போக்காமல், நல்ல பாலியத்திலேயே வேலை தொடங்குவானாகில் பக்தி வைராக்கிய அனல் குளிர்ந்துபோகாது. இந்துக்களுடைய மனசை அறிந்துகொள்வான். சனங்களைக்குறித்துச் சமுசயிக்குமுன்னே, மிஷனெரிக்குரிய ஆசை அணைந்துபோகுமுன்னே, ஐரோப்பியருடைய சங்காத்தம்தேடி தன்னூருக்குத் திரும்பப்பார்க்கிறதற்குமுன்னே சனங்களோடு ஐக்கியப்பட்டுப்போவான். சரியானபடி மிஷனெரிகளை ஆயத்தப்படுத்துகிற அதிகாரம் பரிசுத்த ஆவியானவருக்கே யுரியது. அதை அவருக்கே ஒப்புக்கொடுப்போமானால் அநேகர் தகுதியுள்ள பிரசங்கிகளாகிறதைக் காண்போம். அப்பேர்ப்பட்டவர்கள் இப்போது வெகு அருமை. கல்விச்சாலைப் பிரசங்கங்களில் சவுலைஎடுத்து, அவன் எபிரேயு சாஸ்திரிகளில் தேறினவனென்றும், கிரேக்கு வித்துவான்களுடைய காவியங்களைத் தீரக் கற்ற

வனென்றும் அதிகமாய்ப் பேசுவதுண்டு. அவன் தருசப்பட்டணத்துப் பள்ளிக்கூடத்திற் படித்தபோதும், கமாலியேலிடத்தில் சாஸ்திரங்களைக் கற்றபோதும், கிறிஸ்துமார்க்கச் சத்துருவாயிருந்தானென்பது கவனியாமல்விடத்தக்கதல்ல. குணப்பட்ட பிறகு மாமிசத்தோடும் இரத்தத்தோடும் இவன் ஆலோசித்திருப்பானாகில், அப்போஸ்தலர் இவனை இரண்டு மூன்றுவருஷம் படிக்கச்சொல்ல இவனும் படித்து, அதற்குமேல் இவன் கர்த்தரால் அழைக்கப்பட்டிருப்பானேயாகில், இவனை இக்காலத்துக்கு முன்மாதிரியாய்க் கொண்டு வருவது நியாயந்தான். காரியமோ அப்படியல்ல. கடைசியாக நான் கற்றுக்கொண்ட மூன்று படிப்பினைகளை இங்கே சொல்லாமல்விடக்கூடாது. இவைகளை நான் அறிந்திருந்தபோதிலும், இந்தியாவுக்கு வந்து நாலைந்து வருஷ அநுபவத்திற்குப் பின்தான் இவைகளுடைய மேன்மை எனக்குத் தெரியவந்தது.

மிஷன் அலுவலுக்காவது வேறெதற்காவது வேண்டிய சுகுணங்களில் விசேஷித்தது அன்பு.

நம்முடைய இருதயத்தை வீண்டம்பம், உலக சிந்தை, தற்சிநேகம் இவைகளறச் சுத்திகரித்துக்கொள்வது இதற்கு இரண்டாவது. 2 தீமோ. 2: 21.

கோதுமை மணியைப்போல பூமியில்விழுந்து அழுகிப் போவதுதான் மூன்றாவது. யோவான் 12: 24. காரியசித்தி அடைவதற்கான பிரயத்தனம் இவைகள்தான்.

தி. ஜி. இராக்லாந்து.

இப்படிப்பட்ட அபிப்பிராயங்களோடு மிஷனெரியானவர் தன் இனசனத்தை விட்டுப் பிரியவந்த போதும், மிஷனெரிக்குரிய ஆபத்துகள் நேரிட்ட போதும் தன் தீர்மானத்தில் மாறத்தக்கவரல்லவென்று சொல்ல அவசியமில்லை. காலம் செல்லச்

செல்ல அது அதிக ஸ்திரமடைந்ததேயொழிய, வேறல்ல. வென்னையருக்குக் கடிதம் எழுதின காலத்திற்கும், சங்கத்தார் அவரை ஏற்றுக்கொண்ட காலத்திற்கும் மத்தியில் காரியம் எப்படிமுடியுமோ வென்றிருந்தபோது அவர் எழுதியது,

'என் விருப்பத்தை சகோதரி மரியாளுக்கு தெரியப்பத்தினபோது என் மனம் குழம்பவேயில்லை. அது தேவனால் ஆனதென்பதற்கு இது ஒரு நல்ல அடையாளம். எனக்கு மிகவும் அருமையான சிநேகிதர்களே! உங்களை விட்டுத் துக்கத்தோடே பிரிகிற நேரம் சீக்கிரம்வந்து சீக்கிரம் போகும்' என்பதே.

புறப்படுமுன் ஒரு துரைசானிக்கு,

'கிறிஸ்த சிநேகிதர்கள் எனக்காகப் பிரார்த்தனைபண்ணி வருகிறார்கள். இதற்காக நான் அதிகமாய் தேவனை வாழ்த்தவேண்டும். அவர்கள் செபத்தின்மூலமாய்த்தான் இந்த காலைந்து வருஷங்களாய் நான் அனுபவித்துவந்த சமாதான சந்தோஷங்கள் எனக்குக் கிடைத்தது. நான் போன இடமெல்லாம் சகலரும் எனக்கு வெகுவாய் அன்புபாராட்டினார்கள்' என்றெழுதினார்.

சிநேகிதரைவிட்டுப் பிரியச் சமயம் வந்தபோது, இவர் மனம் அமைதலாயிருந்தது. இவர் புறப்பட்டு வரும்போது, இவருக்குச் சிறுபிராயத்தில் பட்சத்தைக் காண்பித்த ஒரு துரைசானியைப் பார்க்கவும், தன் தாய் தந்தைகளுடைய கல்லறையைப் பார்க்கவும் ஜிபரால்ற்றரில் இறங்கினார். பிரயாணத்தை இங்கே விவரிக்கவேண்டியதில்லை. அவர் எழுதியிருக்கும் ஒரு விசேஷத்தைமாத்திரம் சொல்லுவோம்.

'மால்ற்றாவுக்கு வந்தபோது, அரபி பாஷைப் புதிய ஏற்

பாடொன்றை மஸ்காத்தென்ற பிரபுவோடு வந்த ஒருவருக்குக் கொடுக்கவேண்டுமென்று வாங்கினேன். எப்படிக் கொடுக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. துபாசியுமில்லை. அந்தப் பாஷை தெரிந்த ஒரு பிள்ளையாண்டான்மாத்திரமிருந்தான். அவன் பட்டிக்காட்டான்போலிருந்தபடியால், எண்ணினது செய்ய ஏதுவில்லை. நானே ஒரு எகிப்திய பாஷை புஸ்தகத்தைக் கண்டுபிடித்து, அதிலுள்ள சில வார்த்தைகளைக்கொண்டு என் கருத்தை வெளியிடப் பேச்சுப் படித்துக்கொண்டாலும், நல்லசமயம் வாய்க்கவில்லை. ஒரு ஒருநாள் சாயந்தரம் மேல்தட்டில் அவரைக் கண்டேன். வார்த்தையினாலும் கைச்சாடையினாலும் அவர் விளங்கிக் கொள்ளும்படி செய்தேன். வழக்கம்போல் தலையில் மஞ்சள் பாகை வைத்திருந்தார். அதின் தொங்கல் அவர் முகத்தை மறைத்தது. சாதுவான குணமுடையவர். நான் அவரைப் பார்த்து உம்மோடு பேசவேண்டும் என்றேன். அதற்கு அவர் 'ஙீஸ்' என்றார். நான் அவரைக் கப்பலின் பின்னணியத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் ஒதுக்குப்புறத்தைக் காண்பித்து உளுக்காரச்சொல்லிப், பேச உத்தரவாவென்று மறுபடியும் கேட்டேன். சம்மதிக்கிறதாக ஜாடைகாட்டினபடியால் நீர் கிறிஸ்தவரா என்றேன். அல்ல, நான் ஒரு அரபி யென்றபோது அது எனக்கு நன்றாய்க் காணவில்லையே என்றேன். அதற்கவர் சிரித்தார். எழுதியிருந்த ஒரு துண்டுக் காகிதத்தைக் காட்டி, இதைக்கொண்டுதான் உம்மோடு பேசுகிறேனென்றுசொல்லி, தொப்பிக்குள்ளிருந்த அரபிப் புதியவேற்பாட்டை எடுத்து, அவர் கையில் கொடுத்து இதை நீர் வாசித்துப்பாரும் என்றேன். இப்படி இரண்டொருதரம் சொல்லி, என் கருத்து அவருக்குத் தெரியுமட்டும் புஸ்தகத்தைத் தொட்டுக் காண்பித்துக்கொண்டிருந்தேன். அவர் முதற்பக்கத்தைப் பார்த்து வாய்க்குள்ளே வாசிக்கத் தொடங்கினார். பிற்பாடு மேலேகாண்பித்து, உமக்

குப் போதிக்கும்படி தேவனைநோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டுவாரும் என்றேன். அது அவருக்கு விளங்கினதும் விளங்காததும் தெரியவில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 1ம் அதிகாரம் 8ம் வசனத்தை எடுத்துக்கொடுத்து அதை வாசியுமென்று காட்டினேன். நான் எகிப்து பாஷையையும், அரபி பாஷையையும் கலந்துபேசினதையிட்டு ஆச்சரியப் பட்டு, உமக்கு இங்கிலீஷ் தெரியுமா, அரபி தெரியுமா என்கிறதுபோல ஜாடையாய்க் கேட்டார். அந்தக் காகிதத்துண்டிலுள்ள 'அனுப்பிக்கொள்ளுகிறேன்' என்று அருத்தங்கொள்ளும் கடைசி வார்த்தையைச்சொல்லி, கைகொடுத்துவிட்டுப் போனேன். திரும்பிவந்தபோது புஸ்தகத்தை அரைக்குக்கொண்டுபோகக் கண்டேன்' என்பதே.

இவர் செய்த இவ்விதமுயற்சிகள் கவனிக்கப்படத்தக்கவைகள். இயல்பிலே இவர் கூச்சமுள்ளவர். தாராளமாய்ப் பேசமாட்டார். தன் பரமஎசமானுக்காகப் பேசவேண்டிவரும்போது, வெகுபிரயாசத்தின்மேல்தான் தன் வாயைத்திறப்பார். இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கெழுதின முதற் கடிதத்தில் இவர் எப்படி எழுதியிருக்கிறாரென்றால்,

'எங்களோடு வந்த வாலிபர்மேல் அதிகப் பிரீதியுள்ளவனாயிருந்தேன். பட்டாளத்தைச்சேர்ந்த அவர்களோடு அநேகந்தரம் பேசினதற்காகச் சந்தோஷப்படுகிறேன். சென்னபட்டணத்தில் இறங்கினவுடனே ஆளுக்கு ஒரு புஸ்தகம் வாங்கி ஒரு காகிதமெழுதியனுப்பினேன். பஞ்சாப் யுத்தம் தொடங்கியாச்சுதென்கிற செய்திவந்தெட்டினதினால் அதிக ஆத்திரப்பட்டு எழுதினேன்' என்பதே.

பிரயாணத்தைக்குறித்து இவர் சுருக்கமாய் எழுதியிருக்கிறதென்னவென்றால்,

'ஆதியோடந்தமாய் சகலமும் எனக்குச் சந்தோஷகரமா

யிருந்தது. எல்லாம் நல்ல ஆறுதலாயிருந்தது' என்பதே.

1846 ம் ௵ ஜனுவரிமாசத் துவக்கத்தில் இவர் சென்னபட்டணம்வந்து சேர்ந்தார். தாம்பின்னிட்டமுதல் ஓய்வுநாளைக்குறித்து இவர் எழுதியது என்னவென்றல்,

'மிஷன்வகை ஆலயம் நானிருக்கும் வீட்டிற்கு வெகு சமீபம். காலை ஆராதனையில் எனக்கிருந்த சந்தோஷத்தைப் போல முன் ஒருபோதுமில்லை. பாடின பாட்டும், கின்னர நாதமும் வெகு இசைவாயிருந்தது. மனசுக்கு வெகு மதுரமாயிருந்தது. அப்போது எனக்கிருந்த ஆனந்தத்தை என்ன சொல்ல! நான் பிரசங்கித்தது எனக்கே உற்சாகமாயிருந்தது. சபையாரும் கவனமாய்க்கேட்டார்கள். ஆராதனைக்கு முன்னும் பின்னும் அநேகருக்கு முகப்பரீக்ஷையானேன். இவர்களெல்லாருக்கும் என்னைக்கண்டது சந்தோஷம்' என்பதே.

இன்னொரு சிநேகிதருக்கு எழுதினதாவது.

'அஞ்ஞானம் நிறைந்த இந்தப் பட்டணத்திற்கு புதிதாய் வந்த எனக்குள் உண்டான எண்ணங்கள் என்னவென்று விசாரிப்பீர். பவுலுக்கு அத்தேனேப்பட்டணத்திலுண்டான எண்ணம் எனக்கிருந்ததென்று சொல்ல ஏதுவில்லை. அஞ்ஞான முழக்கங்களையும், கொண்டாட்டங்களையும், மேற்பூச்சுகளையும் கண்ணாரப் பார்த்தும் எனக்குள் அதிகப் பரிதாபமுண்டாகவில்லையே என்பதுதான் எனக்குத் துக்கம். இந்தத் துக்கம் எனக்குள் இன்னுமிருக்கிறது. தாவீதுடைய கண்ணிலிருந்து பாய்ந்த நீரருவிகளை நினைக்கும்போது மனதுக்குக் கஸ்தியாகிறது. இதிலும் ஞானஸ்நானம்பெற்ற அஞ்ஞானிகள் இங்கிலாந்தில் எத்தனையோ ஏராளமாயிருக்கிறார்கள் என்பது அதிகப் பரிதாபம். இந்தப் பட்டணத்தில் இதுவரையில் செய்யப்பட்ட சுவிசேஷப் பிரயத்த

ணம் வெகு சொற்பம். மிஷனெரிக்கூட்டம் இங்கே பெருத்திருந்தும் காரியம் நோஞ்சலாயிருக்கிறது. மற்ற மற்ற இடத்து வேலைகளை மேற்பார்த்துவருகிறதேயொழிய, இவர்களே மிஷனெரிவேலை செய்கிறதாகக் காணேம். பெயர்க் கிறிஸ்தவர்கள் அநேகர் இருக்கிறபடியால்தான், இதுவும் மற்றக் கெடிஸ்தலங்களைப்போல வேலைக்கு அநுகூலமானதல்ல' என்பதே.

இவர் ஆறுமாசம் இருப்பாயிருந்து தமிழ்ப்படித்தார். இதோடேகூட இங்கிலிஷ் சபை விசாரணையும், அஞ்ஞானிகளோடு சம்பாஷிப்பதும் இவருக்கு முயற்சியாயிருந்தது. இந்த விவரங்களைக்குறித்து அவர் எழுதியிருக்கிறதாவது,

'ஞானேதயம் இங்கே அதிகரித்துக்கொண்டே வருகிறது. இது சுயப் பிரகாசமல்ல. வெள்ளைக்காரருடைய சங்காத்தத்தினுல் சனங்கள் விக்கிரகாராதனையைப்பற்றி வெட்கப்படுகிறார்கள். கர்த்தர் அவர்கள் இருதயங்களில் பிரகாசிக்கும் வரையில் அதோடு ஒட்டிக்கொண்டுதானிருப்பார்கள். அல்லது ஒப்பாசாரத்திற்குக் கிறிஸ்தவர்களாகி, அதிகக் கேடடைவார்கள். அஞ்ஞானத்தில் ஒன்றுமில்லையென்றறிந்தும், கிறிஸ்தவனுகாத ஒருவனை அறிவேன். அவன் எனக்கு வேலைக்காரன். பேர் சபாபதி. மார்க்கவிஷயத்தைப்பற்றி அவனேடு சம்பாஷித்ததில், தேவன் ஒருவர்தானென்று ஒத்துக்கொண்டாலும், அவன் கருத்து வேறே. இயேசுக்கிறிஸ்து, விட்டுணு, சிவன் மற்றெந்தப் பெயரும் ஒரே மகத்தான வஸ்துவைத்தான் குறிக்குமென்ருன். இதை விட்டுப் போட்டு, ஏசாயா 44ம் அதிகாரத்தை வாசித்துக் காட்டினேன். இதையும் ஒப்புக்கொண்டான். பின்னை யேன் விக்கிரகபூஜை செய்துவருகிருயென்று கேட்டதற்கு, முன்னேர்கள் வழக்கம் என்ருன். இது பாவமென்று அவனுக்குத் தெ

ரிகிறது. மனித பயமும் மாமிச இச்சையும் அவனுக்குப் பெரிய தடை என்பதாம்.

இன்னொரு காகிதத்தில் அவர் சொல்வது, 'என் வீட்டு வேலைக்காரருடைய ஆத்தும நன்மைக்காக ஏதாவது செய்யவேண்டுமென்று யோசனைபண்ணிக்கொண்டுவந்ததில், மதியத்திற்குமேல் வர மனசுள்ளவர்கள் வரலாமென்று திட்டஞ்செய்தேன். இந்த ஒழுங்கின்படி, இன்றுமுதல் செய்யத் தொடங்கினேன். வந்தவர்கள் ஆறு ஆண் பிள்ளைகள். ஒரு பெண்பிள்ளை. யோவான் சுவிசேஷத்தில் மூன்று வாக்கியங்களை வாசித்து, தமிழில் கன்னு பின்னு வென்று குளறிப் பேசினேன். கொஞ்சம் இங்கிலிஷ் தெரிந்த சபாபதி சில வார்த்தைகளைச் சொல்லித் தந்தான்.

## V. சம்பிரதி உத்தியோக காண்டம்.

இவர் இந்தியாவுக்கு வந்த வருஷத்தின் பிந்தின ஆறுமாசங்களில் திருநெல்வேலி, திருவனந்தபுரங்களிலுள்ள மிஷன் ஸ்தானங்களைப் போய்ப் பார்வையிட்டார். இதற்கென்று பிரயாணம்பண்ணிக்கொண்டு திரிந்த காலத்தில், அவர் கண்டு கேட்ட மிஷன் சங்கதிகளை சீமையிலுள்ள தமது சிநேகிதருக்கு அப்போதப்போது எழுதியிருக்கிறார். அவர்எழுதிய இரண்டு விஸ்தாரமான காகிதங்களில் அஞ்ஞானிகளுடைய விக்கிரகாராதனையையும், சபைகளின் நிலைமையையும், பிரயாணங்களில் கண்டவிசேஷங்களையும் குறித்து விவரம் கண்டிருக்கிறது. அவைகளெல்லாவற்றையும் எழுதுகிறதானால் சரி

த்திரம் நீண்டுபோம். சில முக்கிய விசேஷங்களை மாத்திரம் இங்கே சொன்னால் போதும். கொல்லத்திலிருந்து எழுதின காகிதத்தின் முடிவில் அவர் சொல்லுகிறது,

'இன்னும் எழுதச் சாவகாசமிருக்குமேயானால் சந்தோஷந்தான். எனக்காக ஜெபம்பண்ணுங்கள் என்றுமாத்திரம் உங்களைக் கேட்கிறேன். வழக்கப்படி கேட்கிற பாவனையாகக் கேட்கிறேனென்றெண்ணப்படாது. வாரந்தோறும் உங்களை என் ஜெபங்களில் நினைக்கிறேன். மிஷன்வேலை நடந்தேறவும், அறுப்புக்கு அதிக வேலையாள்வரவும் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுங்கள். அவரே உங்களையும் உங்கள் வேலையையும் ஆசீர்வதிக்கவேண்டும். கிறிஸ்துவிலுள்ள விலைமதியா ஐசுவரியங்களை நீங்கள் அதிகமதிகமாய் அறிந்துகொண்டு, அவைகளில் நீங்களே சந்தோஷப்படுகிறதுந்தவிர, மற்றவர்களுக்கும் அதை வெளிப்படுத்துகிறதில் அதிகமதிகமாய்ச் சந்தோஷப்படும்படி விரும்புகிற உங்களுடைய பிரிய சிநேகிதன்.'

இந்த முதற்பிரயாணத்தில் நடந்த ஒரு சங்கதியை இங்கே சொல்லாமல் விடப்படாது. அது தகப்பன் செத்துப்போனபின் பிறந்த குழந்தையின் தாயாருக்கு இவர் காட்டின பட்சமே. அந்தக் குருபத்தினி அதைக்குறித்து எழுதுகிறதாவது,

'இராக்லாந்தையர் நாங்களிருக்கிற கோட்டயத்தில், ஒரு சனிக்கிழமை சாயந்தரம் வந்து சேர்ந்தார். ஞாயிற்றுக்கிழமை ஆராதனை முடிந்தவுடனே முகப்பழக்கமில்லாதிருந்தும் என் தாயாரைக் கண்டு, என்னைப்பற்றியும் அப்போது பிறந்திருந்த என் குழந்தையைப்பற்றியும் அதிக அன்பாய் விசாரித்ததின்மேல் நாளைக்கு உங்கள் வீட்டிற்கு வரலாமா என்று கேட்டார். வந்தபோது அவரைப்பார்க்க எனக்

குச் சாவகாசப்படவில்லை. அவர் விரும்பினதின்பேரில் குழந்தையை அவரிடத்திற் கொண்டுபோனார்கள். அவரோ அதைக் கையில்ஏந்திக்கொண்டு கொஞ்சநேரம் மௌன மாயிருந்தார். வேலைக்காரர் அந்தப் பாலகனை வாங்கிக்கொண்ட பிறகு என் தாயாரைப்பார்த்து பெரியம்மா! நானும் இப்படித்தான் பிறந்தேன். எனக்குத் தேவன் அதிகமாய்ச் செய்திருக்கிறார். இந்தக் குழந்தைக்கும் தாய்க்கும் அப்படியே செய்வாரென்று உங்கள் மகளுக்கு நான் சொன்னதாகச் சொல்லுங்களென்று எனக்குச் சொல்லியனுப்பினார். அவர் அந்த இடத்தைவிட்டுப் போகிறதற்கு முந்தினநாள் நானும் அவரைக் கண்டேன். அவர் பண்ணின ஜெபம் எனக்கு அதிக ஆறுதலாயிருந்தது. இப்படிப்பட்டவர் என் பிள்ளைக்காக ஜெபம்பண்ணுகிறது எவ்வளவோ சலாக்கியமாயிருக்குமென்றெண்ணி, இவரையே ஞானத்தகப்பனாயிருக்கும்படி கேட்டுக்கொண்டேன். இதற்குப் பின்வாங்குகிறவராகத் தோன்றினபடியால், கண்ட முதல் தடவையிலேயே இப்படிக் கேட்டுப்போட்டோமேயென்று துக்கப்பட்டேன். மறுநாள் எனக்கு ஒரு காகிதமெழுதியனுப்பினார். கடைசியாக அவர் எங்களைப் பார்க்கவந்தபோது, அவருடைய ஞானப்பிள்ளையாகிய மத்தேயும் அவரோடுகூடக் கோவிலுக்கு நடந்துபோய், அவர் பக்கத்திலிருந்த ஒரு விசிப்பலகைமேல் உளுக்காந்திருந்தான். அப்போது ஒரு குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். இப்பொழுது அவர் ஞாபகம் அவனுக்கில்லாதிருந்தும், புதிய இருதயம் தரும்படி இயேசுவைப்பார்த்து ஜெபம்பண்ணவேண்டும், இயேசுவைப்போலிருக்க விரும்புகிறேனென்று பிரார்த்திக்கவேண்டுமென்று சொல்லித்தந்தது மத்தேயுவுக்கு நினைவிலிருக்கிறது.’

இந்த அம்மாளுக்கு இவர் எழுதிய காகிதமாவது,

‘நீங்கள் முகதாவில் கேட்டுக்கொண்டபடி உங்கள் பிள்

ளைக்கு ஞானத்தகப்பனாயிருக்க எனக்கு மனந்தான். நேற்று நான் அதற்குச் சம்மதியாததற்கு முகாந்தரமின்னதென்று நீங்களே உத்தேசித்துக்கொள்ளுவீர்கள். ஞானத்தகப்பனாயிருக்கிறது ஒரு பொறுத்த காரியமானபடியால், நீங்கள் கேட்டுக்கொண்ட சமயத்தில், அதற்கு ஆம், அல்லவென்று உடனே சொல்லாமல் நின்றேன். தயாபூர்த்தியாகிய கடவுள், அந்தப் பிள்ளையின் ஆத்தும நன்மைக்காக சரியாய் ஜெபம்பண்ணி அதற்குத் தகுந்த புத்திசொல்ல எனக்கு உதவிசெய்யவேணும். அவன் தகப்பனற்ற பிள்ளையானபடியால், அவனை ரெம்பவும் நேசிக்கவேணுமென்றிருக்கிறேன். பிறந்ததுமுதல் என்னைக் காப்பாற்றி, இந்நாள்வரையில் எனக்கு அமுதூட்டி, தீமையாவற்றிற்கும் என்னை விலக்கி, முற்றமுடிய நடத்துவாரென்று நான் நம்பியிருக்கிற தூதனானவர், எனக்குச் செய்ததிலும் அதிகமாக உங்கள் அருமைக்குமாரனுக்குச் செய்யும்படி கோருகிறேன். ஞானஸ்நானத்திற்கு முந்தி எனக்குத் தெரியப்படுத்தவும். நான் அந்தச் சமயத்திற்கு இல்லாவிட்டாலும், ஆத்தும சம்பந்தமாய் உங்களோடிருப்பேன். இன்னும் ஒரு மாசம் சுற்றித் திரிவேன். இன்னவேளையில் இங்கே யிருப்பேனென்று திட்டமாய்ச் சொல்லக்கூடாததினால் காகிதம் அனுப்பவேண்டிய இடம் எனக்குத் தெரியமாட்டாது. ஞானஸ்நானம் கொடுக்கும்பொழுது ஸ்பிராற்றையர் எனக்குப் பதிலாய் நிற்பார். நாம் நம்பியிருக்கிற தேவனானவர் விசுவாசிக்கிறதினால் வரும் சகல சந்தோஷத்தையும் சமாதானத்தையும் உங்களுக்குத் தரக்கடவர்.'

சர்ச்சுமிஷன் சங்கத்திற்கு சீமையிலிருக்கும் முகாமைக்காரர், இவரைச் சென்னபட்டணத்துக் காரியஸ்தர் சபை சம்பிரதியாக நியமித்தபோது, அங்குள்ள சுதேச சபைகளை அக்காலம் விசாரித்து வரவும், அப்போது சம்பிரதிவேலை பார்த்துவந்த

டக்கரையர் ஜெனனதேசம் போகவேண்டிவரும் காலத்தில், அவருக்குப் பதிலாக இவர் வேலைபார்க்கவும் ஏற்பாடுசெய்து அனுப்பினார்கள். இவர் திருநெல்வேலி, மலையாளம் இவ்விடங்களிலுள்ள சபைகளைப் பார்க்கப் போயிருக்குங்காலத்தில் மேற்படி டக்கரையருக்கு சவுக்கியவீனம் உண்டானதை யிட்டு, இவர் சென்னபட்டணம் போகவேண்டியதாயிற்று. சம்பிரதிவேலையோ சாமானியமானதல்ல, தக்ஷணப் பிராந்தியங்களிலுள்ள மிஷனெரிகளுக்கும் இவருக்கும் எப்போதும் பலவிஷயத்தைக்குறித்துக் காகிதப் போக்குவரத்து இருக்கிறதோடே ஒரு இங்கிலிஷ் சபை விசாரணையுமிருந்தது. இந்த அலுவலில் பிரவேசிக்கிறபோது இதைப்பற்றி இவருக்கிருந்த அபிப்பிராயத்தை லேன் ஐயருக்கு எழுதின காகிதத்தினால் அறிந்துகொள்ளலாம். இது பாளையங்கோட்டையிலிருந்து சென்னபட்டணத்துக்குப்போகும் மார்க்கத்தில் எழுதினது. எப்படியென்றால்,

'சீக்கிரம் நான் ஒரு சபையை விசாரிக்கவேண்டியதாயிருக்கும். இதைப்பற்றி எனக்குள் வெகுவெகு எண்ணங்கள் உண்டாகிறது. அது இங்கிலீஷ்சபையோ தமிழ்சபையோ வென்று திட்டமாய்த்தெரியாது. முன்போல எனக்குச் சபைவிசாரணை வருமானால், முன்னைவிட அதிக பயபக்தியோடு அதில் பிரவேசித்து, சாகும்போது தேவனுக்கு நல்ல கணக்குக்கொடுக்கத்தக்கவனாய் நடக்கவேண்டுமென்கிறது என் விருப்பம். முன் சீமையில் நான் செய்த தேவ ஊழியத்தை நினைக்க என்னைத் தாழ்த்தவேண்டியிருக்கிறது. சபை விசாரணையோடு சம்பிரதி வேலையையும் பார்க்க வேண்டும். ஆல்நட்டையர், கர்த்தர் யோசுவாவுக்குச் சொ

ன்ன புத்திமதியை வாசிக்கச் சொல்லியிருந்தார். அது எவ்வளவோ ஆறுதலாயிருக்கிறது' என்பதே.

இவர் சென்னபட்டணம் வந்து சேர்ந்தபோது உஷ்ணகாலத்திற்கு முன்னே டக்கரையர் சீமைக்குபோக வேணுமென்று வைத்தியர்கள் அபிப்பிராயம் சொல்லியிருக்கிறதாக அறிந்தார். அவரோடும் சங்கக்காரியஸ்தாளோடும் ஆலோசித்து, 1847 ம் வ்ருஷப்பிறப்பு தினத்தில் ஆல்நட்டையருக்கு இவர் எழுதினதாவது,

'நான் யாரோடு பேசினலும் அவர்களெல்லாரும் நான் இந்த வேலையில் உடன்படுவது தேவசித்தமென்று சொல்லுகிறார்கள். சுவாமி சொல்லு முன்னே நான் இதிற் பிரவேசிக்கமாட்டேன். அவர் சொல்லுகிறதை நான் திட்டமாய் அறிந்துகொண்டால் போதும். அவர் வாக்குக்கு அழிவில்லை. "உன் ஆயுசுநாள் மட்டும் உனக்குப் பெலனுமிருக்கும்" என்றாரே. ஞானத்தைக் கொடுப்போமென்கிற அவர் வாக்கு என் மனசுக்கு எவ்வளவோ ஆறுதல். 'உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், முதலிய' யாக். 1. 5. அவர் நமக்கு தேவ ஞானமானொன்பதும் இது போல நிச்சயந்தான். இவ்விடத்துச் சங்ககாரியஸ்தருடைய ஞானமுள்ள ஆலோசனை எனக்குக் கிடைத்திருக்கிறதற்காக சுவாமிக்கு ஸ்தோத்திரம். நேற்று கர்னல் பிரவுன்துரையோடு கலந்து பேசினது எனக்கு தைரியங்கொடுக்கிறது. ஒரு மணிநேரத்திற்குள்ளாக அவருடைய குணபாகமெல்லாம் அறிந்துகொண்டேன். சகோதரனே, நீர் என்னை ஜெபத்தில் மறக்கமாட்டீர் என்று அறிவேன். நானும் உம்மை மறக்கமாட்டேன். உன்னதத்திலிருக்கும் ஒரே சிநேகிதனைத்தவிர, வேறேயாரையும் நம்பப்படாது என்பதே.

சில நாட்களுக்குப்பிற்பாடு இவர் சம்பிரதி வே

லையைத்தொடங்கினார். பகலெல்லாம் அதேபார்த்து வந்தார். இவர் இதில் நன்றாய்ப்பழகும்படியாக டக்கரையர் இரண்டு மாசக்காலம் சபையை விசாரித்துவந்தார். இந்தச் சமயத்தில் இவர் டியூமர்கையருக்கு எழுதினது,

'நான் இன்னாருக்கு எழுதின காகிதத்தின் மூலமாய் நான் பார்க்கப்போகிற அலுவலுக்காகப் பண்ணியிருக்கிற ஒழுங்குகளை அறிந்துகொள்வீர். தேவாலயம் கட்டும்படி தெரிந்துகொண்ட பெத்சாலேயேல் முதலானவர்களுக்கு ஆண்டவர் தருந்த ஞானத்தையும், அறிவையும் கொடுத்தாரே, அதுபோல ஏற்றகாலத்தில் எனக்குந் தந்தருளுவாரென்று நம்புகிறேன். என் எண்ணங்களை நான் அறிந்தமட்டும், நான் செய்யவேண்டிய அலுவலைக்குறித்து அவர் என்னை நடத்தவேண்டுமென்று விருவுடையவனா யிருக்கிறேன். என் இருதயம் அடிக்கடி மலைத்துநிற்கிறது. என் குறைவை நான் எவ்வளவாய் உணர்ந்து வருந்துகிறேனென்று உமக்குத் தெரியாது. என் அலுவலைப் பார்க்கவேண்டியவனுக்கு இருக்கவேண்டிய அநேக வரங்கள் எனக்கு இல்லையே என்றுதான் தாவந்தப்படுகிறேன். யோசிக்கவும், பேசவும், எழுதவுந்தக்க வரம், எல்லாவற்றிற்குமேலாக கிறிஸ்தவனுக்கிருக்கவேண்டிய திடாரிக்கம், இதுகள்தான் என்னிடத்தில் இல்லை. இந்தக் குறைவு என்னைவிட்டு நீங்கும்படி பவுலப்போஸ்தலனைப்போல மூன்றுதரமல்ல, முப்பதுதரம் தேவனைப்பார்த்துக் கெஞ்சினேன். நான் தாழ்மையடைகிறதற்கு இது நல்லதே. அந்த முள் என்னைவிட்டு நீங்குவதினாலே கர்த்தருக்கு மகிமையுண்டாகுமேயாகில் அவர் அப்படிச் செய்வார். அல்லது தம்முடைய ஊழியமும், தம்முடைய மகிமையும் அதினால் பங்கமடையாமலிருக்கச்செய்வதுந் தவிர, அவருடைய கிருபை எனக்குப் போதுமான

தென்று நான் அறிந்துணரும்படியாகச் செய்வாரென்று நம்புகிறேன். என் பிரிய சகோதரரே! என் மனதிலிருக்கிறதை உமக்குத் தெளிவாய்த் திறந்து சொல்லுகிறேன். நான் சொல்லவேண்டியது இன்னும் அநேகமுண்டு. எனக்காக ஜெபம்பண்ணும். இந்தக் கடிதம் உம்முடைய கைக்குவந்துசேருகிறபோது, நான் போதகத்தொழிலைப் பார்க்கவும் தொடங்குவேன். கேம்பிரிட்ஜிலே சனிக்கிழமைகளில் எனக்குண்டான வருத்தங்கள் பின்னும் உண்டாகும்போலிருக்கிறது. உன் நாட்களெப்படியோ அப்படியே உன் பெலனுமிருக்கும் என்கிற வாக்குத்தத்தமும் இருக்கவேயிருக்கிறது' என்பதே.

டக்கரையர், 1847 ம் வருஷம் மார்ச்சுமீ இந்தியாவை விட்டுப் பிரயாணமானார். புகைக்கப்பல் ஞாயிற்றுக்கிழமை சாயரக்ஷை புறப்பட்டது. தேவாராதனைக்கு கோவில்மணி அடித்துக்கொண்டிருந்தது. ராக்கிலந்தையர், கோவில் உடுப்பை உடுத்திக்கொண்டார். இந்த இரண்டு சிநேகிதரும், கூடிவந்திருந்த வேறநேக சிநேகிதர்களோடு ஜெபம்பண்ணி, ஒருவரைவிட்டொருவர் பிரிந்துபோனார்கள். ஒருவர் தம்முடைய தொலைதூரமான பிரயாணத்தை ஆரம்பித்தார். மற்றவரோ, பரிசுத்தாவியானவர் தமக்கு ஒப்புவித்த தேவ பணிவிடையைத் தொடங்கினார். ஜெபத்தின் அருமையைக்காண்பிக்கும்படி இந்தச் சமயத்தில் "சகோதரரே, எங்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்" என்னும் வாக்கியத்தின்பேரில் இவர் பிரசங்கித்தார். கர்த்தரோ தம்மை இந்த அலுவலில் ஏற்படுத்திவைத்தாரென்று சொல்லி, சம்பிரதி உத்தியோகத்தையும், சபைப் போதகஊழியத்தையும்

முழுமனசோடு பார்த்துவந்தார். இவர் சொல்லிய படி சபையில் இவருக்கு உண்மையுள்ள அநேக சிநேகிதர்களிருந்தபோதிலும், அவர்களோடு சல்லாபஞ்செய்ய இவருக்கு வெகு பிரியமிருந்தபோதி லும், இவ்விதப் பிரியம் இருக்கஇருக்க அதிகமாகிக் கொண்டுவந்தபோதிலும், இவரோ தம் பெலவீனத் தை உணர்ந்தவராய் அவர்கள் நடுவில் பயத்தோடும் நடுக்கத்தோடும் தம்முடைய காலத்தைப் பின்னிட் டுவந்தார். பிரசங்கம் எழுதுவது முன்போலவே இவருக்குச் சங்கடமாயிருந்தது. முதல் ஞாயிற்றுக் கிழமையிலேயே அது அவருக்கு அப்படியாகவிருந் தது. இதைக்குறித்து ஓயன் அம்மாளுக்கு இவர் எழுதியிருக்கிறார். எப்படியென்றால்,

'டக்கரையர் பிரயாணப்பட்ட மறுவாரம் எனக்கு அதி கமான வேலையும் மனசில் அதிகக் கலவரமுமிருந்தது. சபையாரில் அநேகம்பேரும் என்னிடத்தில் பல காரியங்க ளைக்குறித்துப் பேசும்படி வந்தார்கள். அவர்கள் வராதிருப் பார்களானாலும், முந்தினவாரம் கூடிய காரியஸ்தர்கூட்டத் தினால் உண்டான வேலைகளை நான் பார்க்கவேண்டியுமி ருக்கும். வாரத்தின் துவக்கத்தில் அடுத்த ஓய்வுநாளுக்குரிய வேலை முழுவதையும் நானே பார்க்கலாமென்று எண்ணியி ருந்தபடியால் உதவிக்காக வேறொருவரையும் விரும்பவில் லை. சனிக்கிழமை காலைவரையில் பிரசங்கம் சுத்தமாய் ஆயத்தம்பண்ணவில்லை. அந்த ராத்திரி 11 மணிக்கு நான் படுக்கப்போகிறபொழுது பிரசங்கம் பாதிமாத்திரம் முடிந் திருந்தது. அதுவும் என் மனதுக்குத் திருப்தியாயில்லை. வார முழுவதும் என் உத்தியோகக் கடமைகளையே பார்த்தேன். சபைக்குரிய ஊழியத்தையோ ஒரு புது ஏற்பாடு செய்து கொண்டு ஆரம்பித்தேன். அந்த ஒழுங்கின்படி நான் நடக்

துகொண்டுவர தேவகிருபை எனக்கு வேண்டுமென்று கோருகிறேன். அதிகாலையிலும் மாலையிலும் வெகு நேரத்தை வேதவசனத்தை வாசித்து ஜெபம்பண்ணுவதில் பின்னிட வேண்டுமென்பதே என் தீர்மானம். ஓய்வுநாள் காலையில் நான் எழுந்திருக்கிறபோது, எனக்குப் படுக்கப்போனபோதிருந்த விசுவாசமுதலாயில்லை. இதைப்போல வேறெந்தச் சமயத்திலும் அவிசுவாசமாகிய அம்பு எனக்குள் தைக்கிறதில்லை. ஆகிலும் அதற்கு விரோதமாய்ப் போராடும்படியான கிருபையை தேவன் எனக்கு அளித்தார். என் கவலையை அவர்மேல் போட்டுவிட்டு, அவர் என்னை எந்தவிதமாய் நடத்தினாலும்சரி, தம்முடைய பிரியகுமாரனை மகிமைப்படுத்தவேண்டுமென்று ஜெபம்பண்ணி ஆறுதலடைந்தேன். காலையில் வேதபுஸ்தகத்தைத் திறந்து இன்றைக்கு வாசிக்கவேண்டிய தினசரி ஒழுங்குப்படி 4 மோசே 20ம் அதிகாரத்தை வாசித்தேன். "நம்மை இஸ்ரவேல்புத்திரரின் கண்களுக்கு முன்பாக பரிசுத்தம்பண்ணும்படிக்கு நீங்கள் நம்மை விசுவாசியாமற்போனபடியினாலே" என்று 12ம் வசனத்திலிருக்கிற வார்த்தைகள் என் நிலைமைக்கு மிகவும் ஏற்றதாய் மனசிற்பட்டது. இது சபையாருக்குப் பயப்படாதபடிக்கு தேவன் எனக்குக்கொடுத்த எச்சரிக்கைபோலிருந்தது. எப்படியெனில் நான் அவர்களுடைய போதகன். விசுவாசத்தின் நற்போராட்டத்திலே அவர்களுக்கு உதவிசெய்யும்படியாக வைக்கப்பட்டிருக்கிறவன். நான் என் வேலையின் துவக்கத்திலேயே அவிசுவாசத்திற்கு மாதிரியாயிருப்பேனேயாகில் தேவ மகிமைக்கு அது எவ்வளவு குறைவாயிருக்கும். பிற்பாடு மூழங்காற்படியிட்டு, சில நாட்களாய் நான் அதிகமாய் வாசித்து தியானித்த யோசுவா முதலாம் அதிகாரத்தை வாசிக்கவே 9ம் வசனத்திற்கு வந்தபோது தேவன் எனக்குக் கற்பித்தாரா? என்று என்னைத்தானே வினவிக்கொண்டேன். இந்தச் சனங்களண்

டையில் அவர் என்னை அனுப்பினுர் என்பதைக்குறித்து எனக்கு நிச்சயமுண்டு. ஆகிலும் இந்தக் காலமுழுவதிலும் நான் செய்யவேண்டுமென்றிருந்தபடி புஸ்தகமில்லாமல் பிரசங்கிக்க அவர் எனக்குக் கற்பித்தாரா? நான் நினைத்த காரியத்தின்மேல் பிரசங்கித்து, தேவன் அதை ஆசீர்வதிப் பாராஞல், அதையிட்டு உண்டாகும் நன்மையில் அரைவா சிக்காவது பயன்படத்தக்க எழுத்துப் பிரசங்கங்கள் என்னி டத்தில் இல்லையென்று எனக்குள்ளேதானே எண்ணிக் கொண்டேன். நான் எண்ணினபடியே செய்கிறது சரியெ ன்கிறதாய் எனக்குமிருந்தது. பலத்துத் திடமனதாயிரு வென்று அதில் சொல்லியது எனக்கு எழுப்புதலாக சொ ல்லியிருப்பதாய்மாத்திரமல்ல, எனக்குக் கற்பனையாகவும் தோன்றிற்று. நானும் கர்த்தரை நோக்கி உமக்குக் கீழ்ப்படி ந்து பலத்துத் திடமனதாயிருப்பேன் என்று சொன்னேன். அந்த நிமிஷமுதல் எனக்குள் பலம்வந்ததுபோலிருந்தது. இரண்டு மூன்று மணி தேச காலத்தின்பின் ஆராதனை தொ டங்கவே வழக்கப்படி பிரசங்க பீடத்திலேறி இவர் எனக் கு அன்பான என்னுடைய குமாரன், இவருக்குச் செவி கொடுங்கள் என்பதை பிரசங்க வாக்கியமாக வாசித்தேன். எனக்குத் தைரியமுண்டாகும்படி யோசுவா முதலாம் அதி காரத்தை அடிக்கடி திருப்பிப்பார்த்துக்கொண்டு, நான் எழு தின குறிப்புகளைவைத்து, வாழ்த்தப்படத்தக்க என் கர்த்த ரை சபை முன்பாக சரியான திவ்ய போதகராக உயர்த்த என்னுல் கூடியமட்டும் பிரயாசப்பட்டேன். எனக்குள் தைரியம் குறையும்போது, பலத்துத் திடமனதாயிருவென் று நான் உனக்குக் கற்பித்ததில்லையோ என்கிற அந்த வாக் கியத்தைப் பார்த்துப்பார்த்து திடன்கொள்ளுவேன். பார்த்த ஒவ்வொருவிசையும் அது எனக்கு நல்ல சஞ்சீவிபோலிருந் தது. இருந்த பயம் எங்கேயோ போய்விட்டது. சிலவேளை களில் திக்கித்திக்கி, சொல்ல அவசியமில்லாததையும் சொல்

னுவேன். குறிப்புவைத்துக்கொண்டு பிரசங்கித்ததினால் சொல்லவேண்டுமென்றிருந்த காரியங்களையும் சொல்லுவேன். என் கைகளைப் போருக்குப் பழக்குவித்து, என்மேல் கிருபைவைத்து என் வாயைத் திறந்ததினால் இனிமேலும் அப்படியேசெய்வாரென்று எனக்குள் நம்பிக்கையுண்டாகியிருக்கிற என் பெலனாகிய கர்த்தர் தோத்திரிக்கப்பட்டவர்.அவருக்கே சகல துதியும் உண்டாவதாக. என் பெருமையைத்தாழ்த்தி, என்னை அடிமையாய்க்கொண்டு தம்மைமாத்திரம் மகிமைப்படுத்தவேண்டும்' என்று எழுதினார்.

பிரசங்கம் ஆயத்தப்படுத்துகிறதைப்போல இன்னொரு காரியம் இவருக்கு அதிக வருத்தமாயிருந்தது. கிறிஸ்தவ பாந்தமும் ஒருமையும் அதிகப்படும்படி சென்னபட்டணத்திலிருக்கிற பக்தியுள்ள துரைகள் வாரத்திற்கொருவிசை ஒருவருடைய வீட்டில் கூடிவருகிறதுண்டு. நாற்பது ஐம்பதுபேர், இப்படிக் கூடிவருகிறது வழக்கம். சர்ச்சுமிஷன் தேவாலயத்தில் போதகராயிருக்கிறவர் இந்தக் கூட்டத்திற்கு ஒழுங்கு செய்கிறதுமல்லாமல, தம் முறைவரும்போது தாமே அதை நடத்துகிறதுமுண்டு. இதைச் சமாளித்து நிருவகிக்கிறதே ஒரு வருத்தம். இதைக்குறித்து அவர் சொல்வது.

'என் வேலையைப்பற்றி நினைக்கும்போது, நான் நன்றியறிந்தவனாயிருக்கவேண்டியவனாகிலும், வெட்கமடைய அவசியமில்லாத தேவ ஊழியக்காரனல்ல. பிரசங்க பீடத்தைவிட்டு இறங்கும்போதெல்லாம், என் தடுமாற்றங்களையும் தப்பிதங்களையும் நினைக்கையில் எனக்கே வெட்கம் தோனுது. அகம்பெருமை குறைந்து சடைவுண்டாகிறபடியால், கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் அருமையை அதிகமாய் உணருகிறேன். எனக்குத் தெரிந்தமட்டும் என் கட

மையைச் சரியாய்ப் பார்த்துவருகிறேன். என் எசமானுக்
காக வருத்தத்தோடு வெட்கத்தைச் சகிப்பது மிகவும் நல்ல
து. இந்த வெட்கமுண்டாகும்போது அவர் என்னை ஆற்று
கிறார். கர்னல் பிரௌன்துரைவீட்டில் வெள்ளிக்கிழமை
சாயந்தரங்களில் நடந்துவரும் ஜெபக்கூட்டங்களைக்குறித்
து நான் எப்போதாவது எழுதியிருக்கிறேனா? டக்கரையர்
செய்துவந்த வேலைகளிலெல்லாம் இதுவே எனக்கு அதிக
வருத்தமானது. இது என்னால் கூடாதென்று அதிக முறை
சொல்லியும் அவர் அழுத்திப்பேசினபடியால் அவருக்குத்
தட்டிச்சொல்ல எனக்கு நாவில்லை. அவர் போகச் சில நா
ளுக்குமுன்னமே, நான் இதைக்குறித்து ஒன்றும் சொல்லா
மலேயிருந்தேன். போன வெள்ளியில்தான் முதலாவது அந்
தக்கூட்டத்தில் வேதவசனத்தை விஸ்தரித்தேன். போகும்
போதும் வெகு கலக்கத்துடனே போனேன். வேலை மிகு
தியால் நன்றாய் ஆயத்தம்பண்ணவில்லை. இயற்கையிலே
நான் குறைகுடந்தான். ஆகிலும் செபம் தொடங்கினேன்.
ஆரம்பகீர்த்தனை சஞ்சலப்பட்ட சவுலுக்கு தாவீது வாசித்த
கின்னரச் சத்தம்போலிருந்தது. எனக்குள்ளிருந்த அவிசு
வாசமென்கிற அசுத்த ஆவி, அந்த இனிமையான பாட்
டைக் கேட்கவே கண்ணுக்குக் காணாமல் ஓடிப்போயிற்று.
தேவ ஆசீர்வாதத்தை முன்னிட்டு, வெளிப்படுத்தலில் முதற்
சில வாக்கியங்களை அமர்ந்து விஸ்தரிக்கத் தொடங்கினே
ன். நான் சொல்லியதுகளில் சிலது இருதயத்திலிருந்து வந்
திருக்கலாம். தேவ ஆவியினால் இருதயங்களில் பட்டுமி
ருக்கலாம்.

வாரத்திற்கு இவர், மூன்று பிரசங்கங்களை ஆயத்
தம்பண்ணவேண்டியதினால் அது இவருக்குத் துக்
கத்தோடேகூடிய பிரயாசமாயிருந்தது. இதை பல
காகிதங்களிலே தெரியப்படுத்தியிருக்கிறார், அவை
களை எழுதுவது அவசியமல்ல. சொன்னது போ

தும். சம்பிரதிவேலையை இவர் சாமர்த்தியமாய்ப் பார்த்துவந்தார். இதோடுகூடி தேவபக்தியும் விளங்கிற்று. இது விஷயத்தைப்பற்றி இவர் தினசரிதையில் எழுதியிருக்கிறதாவது,

'மாசத்தின் ஒவ்வொருநாளிலும் ஒரு ஐயருடைய பேரைக் குறித்துக்கொண்டு அந்த நாளில் அவருக்கு எழுதுகிறது நல்லதென்று நினைக்கிறேன். அப்படி எழுதும்பொழுது அவருக்கேற்றவிதமாய் எழுதி அவருக்கு நன்மை செய்யலாமென்பது என் கருத்து. கர்த்தாவே! நீரே எனக்குப் போதியும்' என்பதாம்.

இவ்வளவு கவலையோடும் கருத்தோடும் வேலை பார்த்துவந்த இவர் தம்முடைய குறைவை வெகுவாய் உணர்ந்து, அதிகமாய்த் தன்னைத் தாழ்த்தினார். மற்றவர்களோடு இதமாய்ப் பேசவும், சாரசமாய்ச் சம்பாஷிக்கவும் தமக்குத் திறமில்லையே என்று துக்கித்தார். இதினாலேயே இவரை அநேகர் மெச்சிக்கொண்டார்கள். இவர் சிநேகிதராகிய கர்னல் பிரௌன்துரை இவரைப்பற்றி எழுதியிருக்கிறதாவது,

'இராக்லாந்தையர் சென்னபட்டணத்திலே கால்வைத்த நாள்முதற்கொண்டு அவரோடு நெருங்கின இஷ்டமாயிருக்கிற சிலாக்கியம் எனக்குக்கிடைத்தது. தன்னைத் தாழ்த்துகிற குணமே அவரிடத்தில் விசேஷமாய் விளங்கினது. இப்படியிருந்தபோதிலும் கிறிஸ்த கடமைகளை நிறைவேற்றுவதில் வெகு உறுதியாயிருந்தார். சம்பிரதியாயிருந்த காலமெல்லாம் காரியஸ்தர் கூட்டங்களில் அவருக்கிருந்த சுய புத்தியினாலும் அமர்ந்த சிந்தையினாலும் மற்றெல்லாரையும் நடத்தத்தக்கவராயிருந்தாலும் சகலரும் தனக்குப்பெரியவர்களென்று எண்ணிக்கொண்டார். தாம் பிடித்த கொள்கைக்

குக் குறைவுநேரிடாத பட்சத்தில் தமக்குப் பிரியமானது எதுவென்று யோசியாமல் மற்றவர்களுடைய இஷ்டத்திற்கு மனசார இடங்கொடுத்தார். தனக்குக் குறைவு நேரிடுகிறதாகக்கண்டாலும், தன் எண்ணத்தையே சாதியாமல் அதிக சாந்தத்தோடு மற்றவர்களை தமது அபிப்பிராயத்துக்கு உடன்படுத்தத் தேடுவார்' என்பதே.

மிஷனெரிகளுக்கு எழுதின காகிதங்களிலும் இதைக் காணலாம். மூத்தோரைப் பிதாக்களைப் போலவும், வாலிபரைச் சகோதரரைப்போலவும் நடத்த நன்றாய் அறிந்திருந்தார். தன் காரியங்களில் அதிகக் கவனம் வையாமல், தன் எசமானுடைய ஊழியத்தில் அதிகக் கரிசனமுடையவராய் நடந்தார். இந்தச் சற்குணங்கள் அவருக்கு இயல்பாயுள்ளதல்ல. தேவகிருபையால் தன்னிலுள்ள பழைய மனிதனோடு போராடிப் பெற்ற விருதுகளாக்கும். இதற்குச் சார்பாக இவர் எழுதியிருக்கிறதாவது,

'நான் வாயைத் திறவாமல் ஊமையனாயிருந்தேன். பேச நாவு துரிதப்படும்போது அதை அடக்கும் கர்த்தாவே! சில காரியஸ்தர்கூட்டங்களில் மற்றவர்களைப் பேசாமல் தடுக்கப் பார்க்கிறேன். நானும் மௌனமாயிருக்கிறேன். பேசுகிறபோதும் யோசனையில்லாமல் பேசுகிறேன். நான் பெருமைகொள்ளுகிறதில்லையா? எனக்கிருக்கிற அறிவீனத்தையும் குறைவையும் மறந்துவிட்டு, மற்றவர்கள் சொல்லுகிற புத்தியையும் அவர்கள் சாமர்த்தியத்தையும் அசட்டை செய்கிறதில்லையா? என்னிலும் மகா புருஷராயிருக்கிறவர்களைப்பற்றி குறைவாய்ப்பேசினது எவ்வளவோ துக்கமானது. சாமி! இதை மன்னியும், மெய்த் தாழ்மையை எனக்குத் தாரும்.'

'மிஷன்அலுவலில் என உடன்வேலையாட்கள், விருந்தா

டிகளாய் என் வீட்டிற்கு வருகிறவர்கள், பிரசங்கம் கேட்கிற ஏழைச் சனங்கள் இவர்களுக்கு ஆயாசமுண்டாக்குகிறது சரியல்லவென்று நான் எண்ணுகிறதில்லை. நான் மெத்தப் படபடப்புள்ளவன், யோசனையில்லாதவன், சுயநயப் பிரியன், அருமையான நோபிளய்யருக்கும் எனக்கும் எவ்வளவோ வித்தியாசம். தீமையாய்த் தோன்றுகிறதை விட்டு விலக, உருக்கமுள்ளவனாய் நடக்க, சகலரையும் கனம் பண்ண, அயோக்கியமில்லாத அன்பைத் தரித்துக்கொள்ள எனக்குப் போதியும் கர்த்தாவே! யாசகத்திற்குவரும் தமிழரை முரட்டுத்தனமாய்ப்பேசி, கோபத்தோடு அனுப்பிவிடுகிறது பெரிய தப்பிதமல்லவா? என் தேவனே! உமக்கு முன்பாக என்னைத் தாழ்த்துகிறேன்' எனக்கிதை மன்னியும். நான் மற்றவர்களை நடத்துகிறவிதமாய் நீர் என்னை நடத்தாதேயும்.

'கர்த்தாவே! நான் கேட்கிறதற்கு முன்னே உத்தரவு சொல்லும். மதியீனனல்லவா? பேசுகிறதற்கு நான் எவ்வளவோ துரிதப்படுகிறேன். காரியம் நல்லதாயிருந்தாலும் அவ்வளவு படபடப்பாகாது. நான் ஏன் பேச ஆத்திரப்படவேண்டும். தகுதியாய்ப்பேசினாரென்று மற்றவர்கள் சொல்லவேணுமென்கிற பெருமைதான். எந்தப் பிரயத்தனமும் என்னால் உண்டாகவேண்டுமென்று விரும்புகிறேன். மற்றவர்களிடத்தில் இது இருந்தாலும் பரவாயில்லை, என்னிடத்தில் இது சுத்தமாய்த் தலைகாட்டவேபடாது. என்னிடத்திலுள்ள நல்ல நினைவுகளோ வெகு கொஞ்சம். கர்த்தாவே! எனக்கு ஞானந்தான் வேண்டும். உம்மை மகிமைப்படுத்தவே இதைக் கேட்கிறேன். என்னை அடக்கி ஆளும் வல்லமையைத் தாரும்.

'ஒரு பட்டணத்தைப் பிடிக்கிறவனைவிட, தன் ஆவியை ஆண்டுகொள்ளுகிறவனே பலவான் என்றீரே, வெளிப்படுகட்டு வேண்டுமென்கிற ஆசை உமக்கு அருவருப்பல்

லவோ, நான் அதை அருவருக்கும்படி செய்யும். புதிசுபுதிசாய் ஒன்று சொல்லவேண்டுமென்று துருதுருத்துத் திரிவது முக்கியமாய் அற்ப மனுஷ லக்ஷணம்' என்று எழுதினார்.

இவ்வித தனித்தியானங்களினாலே தேவ கிருபை இவரிடத்தில் எவ்வளவோ விளங்கினதென்று பார்க்கலாம். இவருக்கு ஒரு பலவீனமுமுண்டு. இது இவருக்கும் தெரிந்ததுதான். வேலைக்காரரைத் திடீரென்று கோபிப்பார். இது சாதாரணமாய் தெய்வபக்தியுள்ள கிறிஸ்தவர்களிடத்திலும் காணுகிற குறைவு. இதைப்பற்றி இவரெழுதியிருக்கிற இரண்டொரு தியானங்களை எடுத்துச் சொல்லுவோம்.

'வேலைக்காரரை நடத்தவேண்டிய விதத்தைப்பற்றி எனக்குப் புத்திபோதியும் கர்த்தாவே! அவர்கள் கர்வத்தையும் அசட்டையையும் காண்பிக்கிறபோதும், உண்மைப் பாதகம்பண்ணுகிறபோதும் ஒன்றும்பேசாமற், கிடந்தாற் கிடக்கட்டுமென்று விட்டுவிடுகிறது நல்லதல்லவா? இதினால் தான் என்ன நஷ்டம் வந்துவிடும்? ஒரு மாசத்துச்செலவழிவுக்கு அது எம்மாத்திரம்? ஆனாலும் ஏமாற்றியல்லோபோடுகிறார்கள் என்பதுதான் எனக்குக்கோபத்தை மூட்டுது. இந்தப் பெரும் பாவத்தைப் பொறுத்தருளும் கர்த்தாவே! கிறிஸ்தவர்களல்லாத வேலைக்காரர் என்னைப் பார்த்து, இவ்வளவு நல்ல போதகரென்று சொல்லிக்கொள்ளுகிற இவரே, வெகு அற்பக்காரியங்களைக் கவனித்து, நாலைந்து காசுக்காக எரிந்துவிழுகிறாரோ, மெத்தப் பெருமைபாராட்டுகிறாரே என்பார்களே. கிறிஸ்துவுக்கு ஊழியனாகிய என்னை இவ்விதமாய்ச்சொல்லும்போது, கிறிஸ்துவைப்பற்றி எவ்வளவு விபரீதமாய் நினைப்பார்களென்பதுதான் எனக்கு ஆறாத துக்கம்.

'குற்றம் கண்டுபிடிக்கவும், மிரட்டவும் நான் எப்போ

வென்றிருக்கிறேன். பெரும் கூச்சலிட்டு தடபடல்பண்ணுகிறேன். கோரணிகாட்டாமல் சொல்லுகிறதைத் தெளிவாய்ச்சொல்லக்கூடாதா? மெல்ல, மெதுவாய்ப்பேசி உமது தாசனுகிய பாக்ஸைப்போல நான் சாந்தமாய் நடத்தினல் எவ்வளவு பாக்கியம். பரம எசமானே! நான் வேலைக்காரரை நடத்துகிறதுபோல உமது அடியானை நீர் நடத்துவீரானல் என் மனசுக்கு எவ்வளவோ கசப்பாயிருக்கும். நான் அளந்த அளவின்படிதானே எனக்கும் நீர் அளக்கவருவீர். நான் ஒரு கிறிஸ்தவன். அதிலும் குருப்பட்டம்பெற்றவன். அதிலும் ஒரு மிஷனெரி. இப்பேர்ப்பட்டவன் பயமுறுத்துவது அடாது. நடத்தையில் மாருமல் இப்படி அங்கலாய்த்துக்கொண்டுமாத்திரம் இருக்கிறதிலே என்ன பிரயோசனமென்று எழுதியிருக்கிருர்.'

இந்த விஷயத்தைச் சார்ந்து கர்னல் பிறௌன் துரையாகிறவர் நன்ருய்ப் பதியத்தக்க ஒரு சங்கதி சொல்லியிருக்கிருர். அதாவது,

'இராக்லாந்தையர் சென்னபட்டணம் விட்டுப் போகும்பொழுது, அவருடைய பட்லரை, நான் வைத்துக்கொள்ள விரும்பியிருந்தேன். வீட்டிற்குவேண்டிய சாமக் கிரிகைகளை எப்படி வாங்கிவந்தானென்றறிய அவருடைய செலவழிவு ஜாப்தாவை என்னிடம் கொடுத்துவிட்டுப்போகும்படி கேட்டேன். அவர் அப்படிச் செய்யச் சற்று பின் வாங்கினலும், முகத்தில்விளங்கிய ஒருவகை சங்கோசத்தோடு புஸ்தகத்தைக் கொடுத்து இதை உமக்குக் கொடுக்க வெட்கப்படுகிறேன், அதிலெழுதியிருப்புதை நீர் ஒரு பொருட்டாய் எண்ணக்கூடாது. அது என் பெலவீனமென்ருர். அப்படிப்பட்ட கணக்குப் புஸ்தகத்தை நான் முன் கண்டதேயில்லை. எல்லாம் ஒழுங்காய்க் குறித்திருந்தது. தேதிப் பிரகாரம் எழுதியிருந்தது. அந்தந்த நாளில் செலவழிந்த

ஓரொரு சிறுகாரியமும் அதில் பதிவுசெய்திருந்தது. பக்கத்துக்கு ஒரு வேதவாக்கியம் எழுதியிருந்தது. "எசமான்களே! உங்களுக்குப் பரலோகத்தில் எசமானிருக்கிறாரென்றறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமாயிருக்கிறதைச் செய்யுங்கள்" "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னதாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது" என்று இப்படிப்பட்ட வாக்கியங்கள்தான். இதில்விளங்கிய தன் பெலவீனத்தை நான் அறிந்துகொள்வேனென்றல்ல, அதை நீக்கும்படி அவர் செய்திருக்கிற வகையை நான் கண்டு, எங்கே அவரைப் புகழ்ந்துகொள்ளப் போகிறேனோ என்றுதான் அவர் கொடுக்க கொஞ்சம் லாஞ்சனைப்பட்டார். அவருக்கு முற்கோபமுண்டு. இதுவும் அவர் மரித்தபின்புதான் எனக்குத் தெரியவந்தது. காரியஸ்தர் கூட்டங்களிலே மனஸ்தாபத்தை எழுப்பிவிடத்தக்க அநேககாரியங்கள் வருகிறதுண்டு. அவருக்கு ஒருவிசையாவது படபடப்பிருந்ததாக நான் கவனித்ததேயில்லை. ஒரொருவேளை அவர் முகம் சிவந்துபோகும். இதுவும் வெகு சீக்கிரம் மாறிப்போகும். தனக்குள்ளேயிருக்கிறவிசனத்தை ஒருபோதும் சயிக்கினையிலாவது, பேச்சிலாவது வெளிக்குக் காண்பித்ததேயில்லை' என்பதே.

அந்தியகாலம்வரைக்கும் இப்படியே போராடி வந்தாரென்று காண்கிறது. அவரோடுகூட அதிகம் பழகி, மிஷனெரி அலுவலைப் பார்த்துவந்த ஒருவர் அவர் குணபாகத்தைக்குறித்துப் பேசும்பொழுது, தன் குற்றங்களை மற்றவர்களைவிட அதிகமாய் அறிந்திருந்தாரென்றும், உணர்வு அதிகமாயிருந்தபடியால், தொடங்கினகாரியத்தை முடிக்கக்கூடாதபடிக்கு அவ்வளவாய் அவர் துக்கம் அதிகமாயிருந்ததென்

றும் சொல்லுகிறதுமல்லாமல், தனக்கு சோதனையான யாதாரமொரு காரியம் நேரிடுகிறதாயிருக்குமானல், அதைப்பற்றி முந்தி தமக்கு விவரமாய்எழுதவேண்டுமென்று கேட்டுக்கொண்டதாயும் எழுதியிருக்கிறார்.

கர்னல் பிரௌன்துரை இன்னொரு காகிதத்தில் எழுதியிருக்கிறதாவது,

'கிறிஸ்துவின்பேரில் அவரைப்போல சார்ந்திருந்தவர்கள் ஒருவருமில்லை. கிறிஸ்துவே அவருக்கு சமஸ்தம். ஏகாந்தியாயத் தனித்திருப்பதையே அதிகமாய் விரும்பினர். இவர் தோமாஸ் கெம்பிஸ் என்பவருக்கு வெகு பத்தியுள்ள சீஷனயிருப்பாரென்று நாங்கள் எண்ணினோம்' என்பதே.

இவரே சென்னபட்டணத்தினின்று தம்மைக் குறித்து எழுதியிருக்கிறது.

'இப்படியும் அப்படியுமாய் காலம் கடத்திவருகிறேன். மனசும் ஒரேநிலையில் நிற்கிறதில்லை. ஒருவேளையில் மேகமீது உலாவுகிறவனைப்போலும், இன்னொரு வேளையில் தரையில் புரளுகிறதுபோலுமிருக்கிறது. சொல்லவேண்டுமானல் என்னை இரட்சகர் கையில் பொத்திக்கொண்டிருக்கிறார்' என்பதே.

இவர் நல்ல உதாரி யென்பது பின்வரும் காகிதத்தினல் தெரியவருகிறது.

'வருத்தமடைகிற ஐரிஷ்க்காரருக்கு உதவியாக கொஞ்சம் சகாயம் செய்யுமுன்னே முந்தி உமக்குச் செய்வது நல்லது. கோவில் வழக்குகளால் செலவுக்கில்லாமல் கஷ்டப்படுவீரென்று சீமைச் சமாசாரங்களால் உத்தேசித்துக் கொண்டேன். எப்படியிருந்தாலும் நான் கொடுக்கச்சொல்லியிருக்கும் ரொக்கத்தை ஏற்றுக்கொண்டு உம்முடைய

மனம்போல செலவழியும். இதினால் உமக்கும் உம்முடைய சமுசாரத்திற்கும் ஆறுதலுண்டாகவேணுமென்று கோருகிறேன். நான் நினைக்கிறபடி உங்களுக்கு வருத்தமில்லாதிருக்குமேயானால், அந்தத் தொகையையாவது அதில் கொஞ்சத்தையாவது ஜரிஷ் தருமத்தோடு சேர்த்துப்போடவும்' என்று எழுதினார்.

ஒரு சகோதரிக்கு அவர் எழுதியது,

'சகோதரி மரியம்மாள் எழுதின காகிதத்தில் நீ எழுதியிருந்ததை வாசித்துப்பார்த்தேன். நான் அனுப்பின பணத்தை எப்படிச் செலவழிக்கவென்று கேட்கலாமா? நீ கேட்டபடியால் இந்த விசைமாத்திரம் என் அபிப்பிராயத்தை வெளியிடுவேன். பின்னுக்குக் கஷ்டகாலம் வருமென்று பணத்தைச் செலவழியாமல் போற்றிவைத்திருப்பது எனக்குப் பிரியமேயல்ல. அப்படி வைக்கிறதினால் நன்மை உண்டாகிறதேயில்லை. நல்ல பளபளப்பான உறைபோட்டு ஒரு குடையை மூலையிலேவைத்தால் பூச்சி தின்றுவிடுமே. நான் பிரமச்சாரியானபடியால் இப்படிப் பேசுகிறேனாக்குமென்று நினைக்கிறையோ? தாரித்திரியமாகிய மழை பொழியுங்காலத்தில், எனக்குவேண்டிய குடையைச் சம்பாதித்துக்கொடுத்திருக்கிற அந்த மகா புருஷர், உனக்கும் நம்முடைய மைத்துனருக்கும் நம்முடைய மூன்று மருமக்களுக்கும் ஆதரவாகிய பெருங் குடைகளையும், சிறு செல்லக்குடைகளையும் கொடுப்பாரென்பது நிச்சயம். ஏது அந்த மழை வராதுபோலும், என் சகோதரமே! இதையெல்லாம் பரவாபண்ணலாமா? உன்னை நான் முத்தியிட்டு ஞானாகரமாகிய கிறிஸ்துவிடஞ் சேர்த்துப்போடுகிறேன். இதைக்குறித்துச் சகலத்தையும் அவர் உனக்குச் சொல்லுவார். அவரைக் கேள். அவர் கால்மாட்டில் உளுக்காரு. அவரந்தப் பணத்தை இன்னதுக்குச் செலவிடுகிறதென்று உனக்குச் சொல்லுவார். அப்போ இதைப் பொக்கிஷத்தில்

வைத்தாலுஞ் சரி, ஆற்றிலே போட்டாலுஞ் சரி, இதைக் குறித்து எழுதுகிறது எனக்கே வெட்கம்' என்று எழுதினார்.

ஓயனம்மாளுக்கு இவர் எழுதியது,

'நான் அனுப்புவித்த நாற்பது பவுனிலிருந்து சிலருக்கு இனும்கொடுத்ததற்காக அதிகச் சந்தோஷப்படுகிறேன். கர்த்தர் கொடுக்கக்கொடுக்க, வாங்கி வாங்கி குவித்துவைக்கிறது நல்லதேயல்ல. அது கட்டுக்கிடையாய்க்கிடந்து, கசுமால நாற்றமெடுத்துப்போடுகிற குளம் குட்டைபோலாகிறது. கர்த்தர் எனக்குக்கொடுத்த பிச்சையிலிருந்து உங்களுக்குக் கொஞ்சம் அனுப்பினேன். அதிற் கொஞ்சம் நீங்கள் மற்றவர்களுக்குக் கொடுத்தீர்கள். அவர்கள் பின்னும் ஏழைகளைப்பார்த்துக் கொடுப்பார்கள். இவர்கள் தங்களிலும் ஏழையானவர்களுக்குக் கொடுப்பார்கள். இவ்விதமாய் இதினுல் இரட்சகருக்கு மகிமையும் துதியுமுண்டாகும். பணமானது சலம்போல மெல்லெனப்பாய்ந்து, தாகத்தைத்தீர்த்து செழிப்பையுண்டாக்கும்' என்பதே.

இவர் சர்ச்சுமிஷன் சங்கத்திற்கு வெகு உதாரமாய்க் கொடுத்துவந்தார். அதைச்சேர்ந்து மிஷனெரியாய் இங்கிலாந்தைவிட்டுப் புறப்படவிருந்தபோது இவர் வென்னையருக்கு எழுதினதாவது,

'தாம் பட்சமுள்ளவரானதால் நான் எழுதும் இந்தக் காகிதம் உமக்குச் சங்கடமாயிராதென்று நினைக்கிறேன். பயணத்திற்குவேண்டிய சாமான்களை வாங்க இந்த வாரம் மெனக்கிட்டேன். நாலு சவளிக்கடைகளுக்குப்போய் தாராளமாய் உடுப்புவாங்கிக்கொள்ளச்சொல்லியும், போதுமான துஸ்துகளிருந்ததினுல் இரண்டுக்குமாத்திரம் போனேன். இதுவும் மற்ற ஐயன்மார்களையிட்டே செய்தேன். காரியஸ்தர் கூட்டங்களுக்கு வந்தது எனக்கு மெத்தப் பிரியம்கொடுத்தது. அவர்கள் மிஷனெரிகள்பேரில் கொண்டிருக்கிற கரி

சனத்தைப் பார்த்தது எனக்குச் சந்தோஷம்' என்பதே.

இவர் சம்பிரதியாயிருந்தபோது, தமது செலவுக்கு சர்வகலாசாலை வருமானம் தன்னைக் கட்டுகிறதினாலே தன் சம்பளத்தை நிறுத்திப்போடவேண்டுமென்று பலதடவையும் எழுதிக் கேட்டுக்கொண்டார். காரியஸ்தர்களோ, சம்பளம் வாங்கிக்கொண்டு அந்த வருமானத்தை மிஷன் விஷயத்தில் செலவிடலாமென்று சொன்னார்கள். அசௌக்கியத்தையிட்டு இவர் ஜெனனதேசம் போகவேண்டியதாயிருந்தபோது, காரியஸ்தருடன் ஒழுங்குசெய்துகொண்டு கப்பல் செலவையும் தாமே கொடுத்துப்போனார். இங்கிலாந்திலும் மற்ற மிஷனெரிகளைப்போல இவர் உபகாரம் வாங்கவில்லை. திரும்புகாலிலும் இவருடைய செலவுதான். 1853ம் வருஷம் அக்றோபர் மாசமுதல், இவர் மரித்த 1858ம் வருஷம் அக்றோபர் மாசம் வரையிலும் இவர் செலவழித்தது கல்விச்சாலை வருமானமே. தேசாந்தர மிஷனெரிகள் செலவுக்கென்று பொதுக்கட்டிவைத்த தொகைக்கு இவரும் காலத்தை ஒட்டி மூன்று மாசத்து ரொக்கம் ஏற்கனவே கொடுத்துவைத்திருந்தார். 1848ம் வருஷமாகிய சங்கத்து ஜுபிலி வருஷத்தில் மிஷன்வகைக்குத் தாம் கொடுத்த உபயங்களினால் தம்முடைய உதாரத்துவத்தைக் காண்பித்தார். இவர் தகப்பனார் இறக்கும்போது, ஐந்நூறு பவுன் தான் இவருக்குப் பிதிரார்ஜிதம். இதைப் பேர் விளங்கும்படியான கோவில் சொத்தாக்க மனமில்லாமல், கிட்டின பந்துக்களை எடுத்துக்கொள்ளச்

சொல்லியும் அவர்கள் வேண்டாம் என்றதினால், அனுமகக் காணிக்கையாக கையளித்தார். இதைச் சங்கத்தார் வட்டிக்குவிடுவது இவருக்கு மனமில்லை. இந்தத் தாராளமும் காணுதென்று சென்னபட்டண மிஷன் வகைக்கும் ஐந்நூறு ரூபாய் கொடுத்தார்.

வித்தியார்த்தியாயிருந்தபோது, விளையாட்டிலே காரியங்கொண்டுபோகிற திறமையை சம்பிரதி வேலையிலும் காண்பித்தார். பிள்ளையைத் தண்டியாமல் விடுவது புத்தியீனமென்று காட்டும்படி ஒரு தகப்பனுக்கு இவர் எழுதினதாவது,

'உம்முடைய ஏன்ரியைப்பற்றி நீர் எழுதியது என் மனதிற் அதிகமாய்ப்பட்டது. அது எனக்குச் சந்தோஷகரமாயில்லாவிட்டாலும் நீர் எழுதினது நல்லது. இரட்சகரண்டைக்கு திமிர்வாதக்காரனை நாலுபேர் சுமந்துகொண்டுவந்தார்களல்லவா? அதுபோல நாம் இரட்சகரண்டைக்கு இவனைக் கொண்டுபோகவேண்டும். நான் பிள்ளையாயிருந்தபோது என்னைத் தண்டித்திருப்பார்களேயானால் எவ்வளவோ நலம். பிள்ளை மனம் பேதலிக்குமென்று நீர் தண்டியாமலிருப்பீராகையால், இதைப்பற்றி எழுதும்படி ஒரு சிநேகிதனைக் கேட்டுக்கொண்டேன். அந்தக் காகிதத்தை இதனுள் அடக்கம் செய்திருக்கிறேன்' என்பதே.

அதில் எழுதியிருந்த தென்னவென்றால்,—சங்கத்துச் சம்பிரதிக்கு,

'இதற்குக் கையொப்பம் வைத்திருப்பதைப் பார்த்து, இதை ஆலசியம்பண்ணுவீரென்று நான் எண்ணுகிறதில்லை. நான் இப்போது சொல்லப்போகிறதைக் கடமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், உம்முடைய சங்கம் தழைக்கு

மென்கிற நோக்கமாயாவது இதை ஏற்றுக் கொள்வீரென்று நம்புகிறேன். பிள்ளைகளைத் தண்டிக்கிறதைக்குறித்து வாக்கிய புஸ்தகத்தில் எத்தனையோ சுலோபங்களிருக்கிறது. குருடன் ஒத்தவாக்கியநூலில் பிரம்பு, அழுகை, திருத்துதல், அடிமுதலிய வார்த்தைகளைப் பார்த்தால் அவைகளைக் காண்பீர். சம்பிரதியாயிருக்கிற நீர் மாசம் ஒரு வாக்கியம் வாசித்துத் தியானித்து, அதின்படி நடந்திருக்கிறேனென்று சொல்வீரானால், உம்முடைய சங்கத்துக்கு மாசம் ஒரு ஷில்லிங்காக பன்னிரண்டு மாசம் கொடுத்துவருவேன். வேணுமானால் மாசாமாசம் அதை வாங்கிக்கொள்ளலாம். பின்னும் ஒழுங்காய் நடந்தால், இன்னும் இரண்டு பவுனிருக்கிறது, அதுகளைப் பிரம்புவாங்குகிறதற்காவது, அது அவசியமில்லாவிட்டால், அந்தச் சிறுவனுக்கு அவசியமான புஸ்தகங்களையும், விளையாட்டுப் பண்டங்களையும் வாங்குகிறதற்காவது கொடுப்பேன்'.

இப்படிக்கு

அன்புள்ள துன்பன் அல்லது, துன்புள்ள அன்பனாகிய
பிரம்புக்கு மித்துரு அல்லது, பிரம்புக்குச் சத்துரு.

கல்குத்தா அத்தியக்ஷர், சென்னபட்டணம் வந்திருக்கும்போது, இவரெழுதியது,

'என் வீட்டிலிப்போது விருந்தாடியாய் வந்திருக்கிறது யாரென்று தெரியுமா? தானியேல் உல்சன் அத்தியக்ஷர். பட்டணத்திலே பத்துநாளிருந்தார். இரண்டுநாளாக என் வீட்டிலிருக்கிறார். சாப்பிடுமுன் அவர் பண்ணின பிரார்த்தனை மனசை உருக்கத்தக்கது. எழுந்துநின்று இந்த வீட்டிற்குச் சமாதானமுண்டாவதாக. சமாதானத்தின் புத்திரன் இங்கே தங்குவானாக என்றார். காரியஸ்தருக்காகவும், மிஷனெரிகளுக்காகவும் செபம்பண்ணினார். நேற்று குருபட்டாபிஷேக ஆராதனை நடந்தது. நான் பிரசங்கம்பண்ணி

னேன். அவர்கள் இவர்கள் வந்திருப்பார்களென்கிற அச்சம் இன்னும் என்னைவிட்டுத் தூலையவில்லை. மறுநாள் காலையில் அத்தியக்ஷர் கர்த்தர் பார்த்துக்கொள்வாரென்றதின் மேல் பிரசங்கம்பண்ணினர். புதன்கிழமை பட்டணம் விட்டுப் புறப்பட்டார். காலைப் போசனத்துக்கு முந்தி செபமுடியுந்தருணத்தில் பூர்வீக ஆசாரப்படி எங்களை ஆசீர்வதித்தார். முழங்காலிலிருந்து எழுந்திருந்து அவரவர் சிரசின்மேல் கைவைத்து, அவரவருக்குச் சருவவல்லமையுள்ள தேவனுடைய ஆசீர்வாதமென்று சொல்லி, பிறகு இருந்த இடத்திற்குவந்து சொச்சத்தையும்சொல்லி முடித்தார். எனக்கு ஒரு புஸ்தகமும் இனாம்பண்ணி, என்னிடத்திலிருந்த ஒரு புஸ்தகத்தைத் தமக்கு இனாம் கொடுக்கும்படி விரும்பிக்கொண்டபடி நானும் கொடுத்தேன்' என்பதே.

## VI. தேசாந்தரப் பிரசங்க ஆயத்த காண்டம்.

இவருக்குச் சம்பிரதிவேலை பிரியமில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்பதே இவர் கருத்து. இவர் மனோதத்துவங்களில் சிறந்திருந்தபடியால் ஒரு நூதன வகையை சுதாவாய்க் கண்டுகொண்டார். அப்போஸ்தலரைப்போல எங்கும் திரிந்து பிரசங்கிப்பதே அது. இதற்கு வடதிருநெல்வேலியையே தகுந்த இடமாகக் குறித்துக்கொண்டார். இவருக்கு ஆத்துமாவின்பேரிலுள்ள கரிசனை இவ்

வகையென்று இவரெழுதிய ஒரு காகிதத்தினுல் அறியலாம்.

'நீர் முன்னொருவிசை, வைதீக ஜோதிசாஸ்திரப் பிரசங்கம் செய்தீரல்லவா? இக்காலம அப்படிப்பட்ட ஒரு கருத்து என் மனசுக்குத் தோணுகிறது. இதை விவரமாய் உமக்கு எழுத எனக்கு இஷ்டம். டெக்கையர், ஒரு பட்டிக்காட்டுப் பையனைக்குறித்து கதை சொல்லுவாரே. நல்ல நிலா எரிக்கிற இராத்திரியில் அவனைக் கண்டார். அவன் அவர் சகோதரன் பண்ணை ஆள். இவன் அதோ அந்தச் சந்திரன் கண்ணுக்குத் தெரிகிறதிலும் அதிகப் பெரிதல்லவா என்று கேட்டான். அப்படிச் சொல்லுகிறார்களப்பா! உனக்கு எப்படித் தோணுது என்க, அதற்கு அவன் இவ்வளவு பெரிதென்று திட்டமாய்த் தெரியாது. நம்முடைய புல்லாமொச்சிவெளியை சட்டமாய் மறைக்க அவ்வளவு பெரிசிருக்கும் என்றான். இந்தப் பையனுக்குத் தெரிந்தது இவ்வளவே. இதினின்று கற்றுக்கொள்வது என்னவென்றால், அறிவாளிகளும் மெய்க்கிறிஸ்தவர்களுங்கூட ஆத்துமாவைக்குறித்து வெகு அற்பமான அபிப்பிராயமுடையவர்களாயிருக்கிறார்கள் என்பதுதான். ஆத்துமாவை நன்கு மதிக்கிறார்கள். வெகுசாய்ப் பாராட்டிப்பேசுகிறார்கள். பிறருடைய ஆத்தும இரட்சிப்புக்காக ஏதேனும் செய்தால் வெகுசாய்ச் சாதித்துப்போட்டதாக நினைத்துக்கொள்ளுகிறார்கள். உள்ளபடிபார்த்தால் அந்தப் பட்டிக்காட்டானுக்கு நிலாவைக் குறித்திருந்த அவ்வளவு அறிவுமுதலாய் ஆத்துமாவைக்குறித்து நமக்கில்லை. இதைத் தித்துப்பாடு செய்யக்கூடாதா? சோதிசாஸ்திரியானவன் கண்காட்சியைக் கொண்டுண்டான அறிவை எப்படித திருத்திக் கொள்ளுகிறான். நிலாவானது வட்டிலைவிடப் பெரிதென்றும், ஆகாசத்து கிரகங்களாகிய பிரகாசமான பொட்டுகள் ஆணியின் குடையைப்பார்க்கப் பெரிதென்றும் அவன் நிச்சயித்துக்கொள்

வதெப்படி? ஒருவகையான கணக்கைக்கொண்டு இந்தச் சிறு புள்ளி வெகு தூலயிலிருக்கிறதென்று வாஸ்தவமாக வே அறியலாம். பிறகு தூரதிஷ்டிக் குழலினல் அதற்கும் கண்ணுக்குமுள்ள கோணத்தைக் கணக்கிட்டு அளந்து, இந்தப் பூமியைவிட அது பெரிதென்று அறிந்து கொள்ளுகிறான். ஆத்துமாவும் நாம் விளையாட்டாக எண்ணத்தக்க பொருளல்ல. அதின் மாட்சிமையையும் இந்தப்பிரகாரமாகவே யுத்தித்துக்கொள்ளவேண்டும். இந்தியாவில் நீசனென்று சொல்லப்படுகிறவனுடைய ஆத்துமாவை ஒரு சிறு கோணமென்று அல்லது விருத்தாகாரமென்று பாவித்துக்கொள்ளுவோம். அது ஒரு ரேகையின் அந்தத்திலிருக்கிறதாக நினைத்துக்கொண்டு, அந்த ரேகை நீண்டுகொண்டேபோகிறதாக வைப்போமானல் கோளம் பின்னப்படுகிறதேயில்லை. நீசனுடைய ஆத்துமாவும் வேற்றுமையடைகிறதில்லை. தத்துவங்கள் எப்போதும் போலவேயிருக்கிறது. அந்த ஆத்துமாவினின்று நம்முடைய மனசின் கண்ணுக்கு வந்தெட்டும் வரியானது எவ்வளவோ பெரிய கோணத்தை உண்டாக்கவேண்டும். ஆகவே அதினுடைய இரட்சிப்பைக் குறித்து நமக்கு எவ்வளவு ஆத்திரமுண்டாக வேண்டும். வானசாஸ்திரியாகிறவன் சோதிகளின் பருமனை கருராயறியாவிட்டாலும், அவைகளின் முக்கியத்தை அறிந்துகொள்ளுகிறான். சாமானியனொருவன் தேகக்கண்ணில்படும் கோணத்தைக்கொண்டு, மேற்படி வானசோதியின் பருப்பத்தை நிச்சயித்ததுபோலவே ஞானக்கண்ணில்படும் கோணத்தைக்கொண்டு ஆத்தும குணத்தையும் கிரகித்துக்கொள்ளவேண்டும். அவனுக்கு ஒருவன் எதிர்ப்பட்டு, சந்திரனும் மற்றக் கிரகமும் நீ சொல்லுகிறபடி பெரிதாயிருக்கட்டும். அவைகள் போலி உண்டைகளாய், காற்றுப் பொருமினுரையாய், புகையாட்டமாயிருந்தாலோ என்னஎன்று சொல்லும்போது, வானசாஸ்திரி, பொறு அப்பா, கேள், அது

களின் பருப்பமாத்திரமல்ல, நிறையும் அறிந்திருக்கிறேன் என்பான். அந்த மோடன் இதுகேட்டு முழிப்பான். சாஸ்திரியோ சொன்னபேச்சிலேயே நிற்பான். ஏனென்றால், வெகுநாள் கவனிப்பினாலே ஒன்றின்பக்கத்திலிருக்கிற இன்னொரு கிரகம் மார்க்கம் விலகியிருக்கிறதை அறிந்து, இது எப்படியானதென்று சொல்ல முட்டுப்பட்டாலும், நியாயதோரணைகளைக்கொண்டு காரணத்தைக் குறிப்பாய் அறிந்து, அதற்குமேல் பலநாள் ஆராய்ச்சியினால் திருஷ்டாந்தங்களைத் தீரத்தெளிந்து, மார்க்கம் விலகும்படியான அந்த வஸ்து போலியல்ல, கெட்டியென்று நிச்சயித்துக் கொள்ளுகிறான். இதையிட்டு இவன் அவ்வளவாய்ப்பிடித்தாடினான். அதுபோல அந்த நீசனுடைய ஆத்துமாவுக்கும் சக்தியிருக்கிறது. அது மேலோகத்திலிருந்து அந்த ஜெக ஜோதியை தன்னைநோக்க இழுத்தது. ஒரேயொரு ஆத்துமத்தின் மகத்துவத்தை இதினால் கற்றுக்கொள்வது எவ்வளவோ உத்தமம்' என்பதே.

இப்படிப்பட்ட அனுதாபமுள்ளவர், அந்தப் பரஞ்சோதியை அஞ்ஞானிகளுக்குத் தெரிவிக்க பரிதாபங்கொள்ளாமலிருப்பாரா? இதே சிந்தனையாயிருந்து பல இஷ்டர்களுக்கும் இதைப்பற்றியே காகிதம் எழுதிக்கொண்டுவந்தார். மிஷனெரிகள் போகாத இடங்களில், அங்கிலேய துரைத்தனம் நடவாத இராட்சியங்களில், துன்பங்கள் நேரிடக்கூடிய நாடுகளில் சுவிசேஷப் பிரசங்கஞ்செய்ய நாட்டங்கொண்டு, ஒரு சமயத்தில் இதற்காக யாப்பான் தீவுக்குப் போகவேண்டுமென்று பிரயெத்தனப்பட்டார். இது முடியாவிட்டாலும், பிற்காலம் அவர் தொடங்கின முயற்சிக்கு இந்த ஆசை விதைமுதலாயிருந்தது. இதினாலுண்டான மனமகிழ்ச்சியினா

ல் இவர் சம்பிரதி வேலையை விட்டுவிட்டு அவ்விடத்துத் தமிழ்ச் சபையை சம்பளமில்லாமல் விசாரித்துவரவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்.

சிலநாள் சென்றதின்மேல் இவர் தம்முடைய விருப்பத்தை சென்னபட்டணத்துக் காரியஸ்தாளுக்குத் தெரியப்படுத்த, லண்டன் காரியஸ்தரைப்போல இவர்களும் அதற்குடன்படாமல் ஆக்ஷேபித்தார்கள். அக்காலத்திற்கிவரும் ஆகட்டுமென்றிருந்தாலும், இவருடைய அபிலாசை மாறாமலிருந்தது. இந்த மனோபாவகத்தில் அத்தியக்ஷரோடு திருநெல்வேலி, திருவாங்கோடு நாடுகளில் உள்ள மிஷன் ஸ்தானங்களைப் போய்ப் பார்வையிட்டார். இப்படிப் பார்வையிட்டு வருகிறபோதுதான், வடதிருநெல்வேலியில் சுவிசேஷ பிரசங்கத்திற்கு நூதனமான ஒரு பிரயெத்தனம் அவசியமென்று அபிப்பிராயப்பட்டார். இதை அமெரிக்கன் மிஷனெரிகளல்ல, சர்ச்சுமிஷனே செய்வது கிரமமென்று பல நியாயங்களால் காட்டி, தேசாந்தரப் பிரசங்கத்திற்கு அடிபோட்டார். அதின் விவரம் பின்வரும் காகிதத்தில் கண்டிருக்கிறது.

ஆர், கிளார்க்கு மிஷனெரிக்கு,

வடதிருநெல்வேலி தேசாந்தரப் பிரசங்கிகள், மாசத்திற்கு மூன்றுவாரம் குறையாமல், கிராமாந்திரம் சுற்றித் திரிய மனசுள்ளவர்களா யிருக்கவேண்டும். சபை விசாரணை கட்டோடே அவர்களுக்காகாது. ஒவ்வொரு மிஷனெரியோடும் முதல்தரத்து உபதேசியாரொருவர் கூடப்போக வேண்டும். பிறதேசியும் சுதேசியும் இவ்விதமாய்ச் சேர்ந்துபோவதினால் பலவிதத்திலும் பிரயோசனமுண்டு. யாரா

வது கிறிஸ்தவர்களாகும்போது தங்கள் ஊரிலிருக்க மன மில்லாவிட்டால், தெக்ஷணத்திற்கு அனுப்பிப்போடலாம். பலர்சேர்ந்தால் ஒரு சபையாக்கி, சமீபத்திலிருக்கும் மிஷனெரி விசாரணைக்கு விட்டுவிடலாம். இந்தப் பிரசங்கிகளுக்குக் கரவமிடமில்லாத பக்தியும், நல்ல விவேகமும், தேக சவுக்கியமும், உரைத்துநிற்கிற தைரியமும், வருத்தங்களைப் பரவாய்பண்ணுதை குணத்தோடு எடுத்ததை முற்றமுடிய சாதிக்கிற நிர்ணயமும், மிகுந்த மனத்தாழ்மையும் சிறந்து விளங்கவேண்டும். இவர்கள் குறைந்தது நாலைந்துவருஷங்களுக்காவது பிரமசாரிகளாயிருப்பார்களானால், வேலைக்கு மிகுந்த அநுகூலமாயிருக்குமென்று சொல்லவாவேணும்? விவாக நிலைமையால் மிஷன் அலுவலுக்குண்டாகும் பிரதிகூலம் அநுபவசாக்ஷியால் அறிந்தவர்களுக்கே தெரியும். சபைப் போதகர் கிரகஸ்தராயிருப்பதற்கு பல முகாந்தரங்களுண்டு. மேலும் தேசாந்தரப் பிரசங்கிகள் தங்களை வெறுத்தவர்களாய்க் காண்பிக்கிறதினால், பெருமைகொள்ளும்படி இடமுண்டாகாமல், மற்ற மிஷனெரிகளைப்பார்க்கத் தாழ்ந்த சிந்தையும் விழிப்புமுள்ளவர்களாயிருக்கவேண்டும்' என்று எழுதினார்.

தக்ஷணத்து மிஷனெரிகளோடு ஏக ஐக்கியமாய் நடக்கவேணுமென்கிற மனசு இவருக்கிருந்தது. தம்முடைய முயற்சி அவர்களுடைய வேலைக்குப் போட்டியாகக் காணக்கூடாதென்றிருந்தார். இதைப்பற்றி ஒரு சமயத்தில்,

'இப்படிப்பட்ட தகாத எண்ணம் உண்டாகிறதைவிட நான் என்னை எவ்வளவாய்த் தாழ்த்தவேண்டுமோ அவ்வளவாகத் தாழ்த்துவேன். வேணுமானால் அவர்களுடைய பாத தூசியாகவும் பணிந்துகொடுப்பேனென்று எழுதினார்.

தெக்கத்தி மிஷனெரிகளிடத்திலிருந்து உபதேசி

கள் வரவும், அவர்களே அந்தந்த இடத்துச் சபைகளை ஆதரிக்கவும், இவ்விதம் அவர்கள் தமக்கு உதவிசெய்யவும் யூகித்திருந்தார். இதன்னியில் தேசாந்தரப் பிரசங்கத்தின் இடத்தைக்குறித்து அவர் எழுதியது,

'இதற்கு விஸ்தாரமான வட்டகை தேவையில்லை. துவக்கத்தில் அது சிறிதாயிருந்தால் நலம். யாராவது கிறிஸ்தவர் வளர்கும்படி நோக்கம் காண்பிக்கும்போது அது அடிக்கடி போய் வரத்தக்கதாயிருக்கவேண்டும். ஆறுமாசத்திற்கு ஒருக்கால் போகிறதினால் அதிக நன்மையுண்டாகாது'.

ஆரம்பத்தில் இவர்கொண்டிருந்த அபிப்பிராயம் இதுகள்தான். இந்தப் பிரயெத்தனம் மற்றவர்களுக்கு எப்படியாகக்கண்டாலுஞ்சரி, இவர் எவ்வளவோ பிறர் நன்மையைக்கோறி, தன்னை வெறுத்துப் பாடுபடுகிற சிந்தையைக் காண்பித்திருக்கிறார்.

திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களுடைய நயத்தைத் தேடி, அவர் அபிப்பிராயப்பட்டது இன்னொன்றுண்டு.

சீமையிலே ஸ்திதிவந்தனாயிருக்கப்பட்ட ஒருவர் இவ்விடம்வந்து தமது பொருளைச் செலவழித்து, காலக்ஷேபம் செய்வாரேயானால், பாரிக் குடித்தனக்காரராலும், பாளையகாரராலும் ஏழைக் கிறிஸ்தவர்களுக்குண்டாகும் இம்சைகளும், கச்சேரித் தொல்லைகளும் நிவிர்த்தியாகவும், வர்த்தகம் விர்த்தியடையவும், கைத்தொழில் வித்தியாசாலை ஆரம்பமாகவும், கிராம சீர்திருத்தங்கள் நடந்தேறவும் இடமுண்டாகும் என்பதே.

இவர் தேசாந்தர மிஷனை தாமே ஸ்தாபிக்கவேண்டுமென்றிருந்தார். சில விஷயங்களில் இவர் அதற்கு அசக்தராயிருந்தும், வேறு விஷயங்களில் அதிகப் பக்குவசாலி. தேசம் அவருக்குப் பிடித்துக்கண்டது. தமிழும் கூடியமட்டும் தாவிலை. இந்த மிஷனுக்கு விவரம் சொன்னவரே இதை விவஸ்தையா

ய் நடத்தத்தக்கவர். தான் நடந்துபோகாத வழியில் மற்றவர்களை நடக்கச்செய்கிறவருமல்ல. இப்படித் தகுதிமானுயிருந்தும் இவருக்கு இரண்டு சங்கடங் களிருந்தது. ஒன்று சம்பிரதிவேலையைக் கைவிடுவது; மற்றது வாய்தாவுக்குள்ளே இங்கிலாந்துக்குப் போய், பி. டி. பட்டம் வாங்கிக்கொள்ளாவிட்டால், பெல்லோவருமானம் கைவிட்டுப்போவது. அந்த வருமானம் போனுலும் போகட்டும். காலதாமசமி ல்லாமல் தேசாந்தர மிஷனை ஆரம்பிப்பதே உத்தமமென்று எண்ணினர். இப்படியிருக்குங்காலத்தில் தம்முடைய அபிப்பிராயத்தை நீலகிரிமலையி லிருந்த டால்ற்றிரி அத்தியக்ஷருக்குத் தெரியப்படுத்திக்கொள்ளவே, அவரும் இவர் நோக்கிய கருமம் நல்லதென்றும், அது நடந்தேறுவது தமக்குப் பிரியமென்றும், அன்பான ஒரு கடிதத்தின்மூலமாய் பிரதிஉத்தாரம் செய்தார். மற்றும் கௌரவமுள்ள பக்திசாலிகளும் இப்படியே இவரை உற்சாகப்படுத்தினர்கள். இந்தப் பருவத்தில் இவர் சீமைக்குப் போகும்படியாய்க் காரியம் நேரிட்டது. பின்வரும் காகிதத்தினுல் இதின் விவரம் அறியலாம்.

ஓயனம்மாளுக்கு,

இதை வாசிக்கவும் உங்களுக்குச் சஞ்சலமுண்டாகும். எனக்கிப்போது சுகமில்லை. ஒன்றரைவருஷத்திற்குமுன்னே, ஸ்காட்டுவைத்தியர் எனக்கு வலதுபக்கத்து நுரையீரல் பலட்சயப்பட்டிருக்கிறதென்று சொன்னது தெரியுமே. அது முற்றி வருகிறது. சிலநாளாக இருமலும் கண்டது. அதோடு இரத்தமும் விழுந்தது. அக்கினிப்பிளாஸ்திரி

போட நினைக்கிறார்கள். இரத்தம் கண்டபின் சுகப்படுவது நிச்சயமில்லை. என் ஆயிசு சீக்கிரம் முடியும்போலிருக்கிறது. மூன்றுமாசம்வரையில் பிரசங்கம்பண்ணுமலிருக்கவேண்டும் என்கிறார்கள் என்பதே.

கர்னல் பிரௌன்துரை, இவருக்கு அபாயமான ஒரு வியாதியிருக்கிறதாக வைத்தியர் சொன்னபோது இவர் முகத்தில்விளங்கின சந்தோஷத்தை என்னசொல்லவென்று எழுதியிருக்கிறார். வியாதி மேலிட்டதினுல் இவர் கேப்பின்வழியாய் யாத்திரை செய்து, சீமைக்குப்போகிறது சுகத்திற்கு அநுகூலமென்றுகண்டு, 1852ம் வருஷம் பெப்ருவரிமீ 24௳ கப்பலேறி, ஏழுவருஷம் விட்டிருந்த இங்கிலாந்தை ஜூன்மீ போய்ச் சேர்ந்தார். அப்போது அவர் தேகஸ்திதி திரும்பிவருவாரென்று நினைக்கத் தக்கதாயில்லை. ஆகிலும் எடுத்த கருமமே எண்ணமாயிருந்தார். பி. டி. சோதனைகொடுத்தபிறகு, மாரிகாலத்தில் ஹாம்ஷயர் நாட்டில் தமது சகோதரியோடும், பெரியதகப்பனர் மகளோடுங்கூடவிருந்தார். அப்போதுதான் சுகத்தை அதிகமாய்ப் பேணினர். இதோடே தமிழ் வேதவாசிப்பே இவர் வேலையாயிருந்தது. கோடைகாலத்தில் சற்றே சுகமிருந்ததினுல் சம்பளமில்லாமல் திரும்பப்போய் வேலைபார்க்க காரியஸ்தரை அதிகமாய் வருந்திக் கேட்டுக்கொண்டார். இவரில்லாத காலத்தில் வேறே ஒரு சம்பிரதியை நியமித்திருந்ததே தாம் நினைத்த வேலையைத் தொடங்க ஒருவிதத்தில் அநுகூலமாயிருந்தது.

இங்கிலாந்துக்கு வருமுன்னமே, பென், மேடோ

ஸ் என்னப்பட்ட இரண்டுபேர் மிஷனெரிகளாக வடதிருநெல்வேலி தேசாந்தர மிஷனுக்கென்று நே மகமாயிருந்தார்கள். இவர்கள் இந்தியாவுக்குப் புற ப்பட்டுவருகிற சந்தியாயிருந்தபடியால், இவருக் குத் தாராளமாய்ப்பேச சமையம் வாய்க்கவில்லை. இவர்கள் இவருக்கு ஒருவருஷம் முந்திவந்து, தமி ழ்ப்படித்துக்கொண்டிருந்தார்கள். 1853ம் வருஷம் செப்ற்றெம்பர்மீ 14உ இவர் புறப்பட்டார். அத ற்குச் சிலநாளைக்குமுன் இவர் தம்முடைய பழைய சபைக்கு இரண்டொரு பிரசங்கம்பண்ணினார். இவைகளில், கிறிஸ்துமார்க்கத்துக்குரிய தாபந்தம் அதிமாய்விளங்கினபடியால், அவைகளின் சாரத் தைத் திரட்டி இவ்விடத்திற் காட்டாமல் விடக்கூ டாது. கோதுமை மணியானது நிலத்தில்விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்' என்பது பிரசங்க வாக்கியம். யோவான் 7. 24. புறச்சாதியார் இரட் சிக்கப்படுவதினால் கிறிஸ்துவுக்குண்டாகும் மகிமை யைவிஸ்தரித்த பிறகு, அதற்காக நாம் படவேண் டிய பாடுகளைக்குறித்துச் சொன்னதாவது,

'எம்மாவூருக்குப்போன இரண்டு சீஷர்களிடத்தில் கிறி ஸ்து துன்பமடையவேண்டாமாவென்று அவர் சொல்லவில் லையா? துன்பமில்லாமல் மகிமை வருமா? இரட்சண்ய ஏற்பாட்டிலும் இது நன்றாய் விளங்கியிருக்கிறதல்லவா? கோதுமை மணியானது அழுகாவிட்டால் முளைத்துப் பல னகாதே. தேவகுமாரன் மரிக்கிறது திருச்சித்தமல்லவென் று வைத்துக்கொள்வோம். ஏனெனக்கு, எலியாவைப்போல சாகாமல், கூட்டோடே போனாரென்று வைத்துக்கொ ள்வோம். அப்போது ஒருவரும் அவரால் இரட்சிக்கப்பட

இடமிராதே. அநேகரை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கிறதற்கு அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களின்வழியாய்ப் பூரணப்படுத்துகிறதே தேவ சித்தம். ஆடுகளுக்காக தமது ஜீவனைக்கொடுக்கிறது கிறிஸ்துவுக்கும் தமது சித்தமாயிருந்தது. கெத்சமனே, கல்வாரிமுதலான இடங்களில் வெகுவாய்த் துன்பங்களைச் சகித்தார். ஆனதால் பலனையும் பெற்றார். ஆத்துமாக்களைக் கரையேற்றுகிற கிரியையில் மற்றவர்களும் தம்மோடு கூடிக்கொள்ளவும், இப்படி உடன்வேலையாட்களென்னும் கனம்வேணுமென்கிறவர்கள் தம்முடைய துன்பங்களிலே பங்குகூடவேணுமென்றும் சித்தமாயிருக்கிறார். அவருடைய பிராயச்சித்தபலியில் அவர்கள் பங்கு பெறுவது கூடாதகாரியம். அவருடைய இரட்சண்யத்தைப் பிரசித்தஞ்செய்யும் வேலையிலோ அவர்கள் பங்கு பெறவேணும். இந்த வேலையில் காரியசித்தியாகவேண்டுமானால், அவர்கள் துன்பங்களைச் சகிக்க முன்னுக்கு நிற்கவேணும், பின்னிடையக்கூடாதென்பதாய்ச் சொல்லி, இதற்குத் திருஷ்டாந்தங்களாகப் பூர்வீக திருச்சபையிலும், கேம்பிரிட்ஜ் சருவகலாசாலையிலும் தோன்றின சில மானபாவர்கள் பட்ட பாடுகளைக் குறிப்பாய் எடுத்துக்காட்டி, முடிவுரையாகச் சில புத்திமதிகளைச் சொன்னார். எப்படியென்றால், இந்த மகாத்துமாக்கள்போல நாமும் கிறிஸ்துவைப் பின்சென்றாலல்லவோ சரி. மற்றவர்கள் துன்பத்தைச் சகித்ததால்தான் நமக்கு சுவிசேஷ அறிவுவந்தெட்டினது. துன்பப்பட்டால்தான் பிறர் இரட்சிப்படைய ஏதுவுண்டு. கோதுமை மணியைப்போல் அழுகாவிட்டால், அதாவது சுவிசேஷத்தினிமித்தம் சுகத்தையும், செல்வத்தையும், கௌரவத்தையும், கழிசடையாய் எண்ணி, இனபந்துகளையும் விட்டுவிடாவிட்டால் மற்றவர்களைக் கரையேற்றமாட்டோம். அப்போ மறுமையில் நம்மை வாழ்த்துவாருமிருக்கமாட்டார்கள். நீதியின் மார்க்

கத்துக்கு அநேகரைத் திருப்பினவர்களைப்போல ஜொலித்துப் பிரகாசியாமல், மரித்த சின்னஞ்சிறுவருக்குள்ள அவ்வளவு மகிமைகூட இல்லாமலிருப்போம். ஏனென்றால், கிறிஸ்துவுக்கு நல்ல வேலைசெய்யச் சாவகாசமிருந்தும் சுயநயாபேக்ஷையினால் சும்மாவிருந்துவிட்டோமென்று முடித்தார்.

---

# VII. தேசாந்தரப் பிரசங்க காண்டம்.

முன் சொல்லியபடி இவர் ஜூபிலி காணிக்கையாக, பெருந்தொகையான பணம் கொடுத்தபோது, ஏதோ ஒரு விசேஷித்த காரியத்துக்கு தம்மை ஆயத்தம் செய்துகொள்ளுகிறவராக வென்னேயர் உத்தேசித்தது உள்ளபடியிருந்தது. இவர் சென்னபட்டணத் துறைவந்து சேர்ந்தவுடனே மேற்சொன்ன இரண்டு தேசாந்தர மிஷனெரிகளும் இவரை எதிர்கொண்டுபோய் அழைத்துவந்தார்கள். இவர் தேசாந்திரிகளாய்ப் புறப்படுவதற்குமுன்னே கூடாரப் பிரதிஷ்டை, கர்னல் பிரௌன்துரை கிரகத்தில் நடந்தது. இதற்குப்பின் ஆறுமயிலுக்கப்பாலுள்ள ஒரு கிராமத்தில் முதல் கூடாரப் பிரசங்கம் செய்தார்கள். இதன்பின் தெற்கே பயணம்போகிறமார்க்கத்தில் வழிமாறுட்டத்தினால் நேரிட்ட ஒரு சங்கதியை, இவர் சீமையிலுள்ள தம் சகோதரிக்குத் தெரிவித்திருக்கிறார். அதாவது,

'நாங்கள் திசைகெட்டு இவ்விடம் வந்தவுடனே, எங்கள்

இந்து சிநேகிதராகிய யோசேப்பு ஆற்றிற்கு குளிக்கப்போ னார். தினசரி குளிக்கிறது அவருக்கு வழக்கம். ஆற்றிலி ருந்து திரும்பிவருகிறபொழுது 'ஐம்பது வயதுள்ள ஒரு பெரிய மனுஷியைக் கண்டார். இவள் ஒரு வலங்கமத்தா ள். இவள் அவரை 'நில்லுங்கய்யா, நீங்களெல்லாரும் வழிதப்பிவந்திருக்கிறீர்களாம். சாப்பாட்டுக்கில்லாமல் மெ த்த வருத்தப்படுகிறீர்களாம், அப்படித்தானா?' என்று கே ட்க, அவர் ஆமென்றார். அவள் இரண்டுதுட்டை எடுத்து இந்தாங்கையா! ஒரு துட்டுக்கு அவலும், ஒரு துட்டுக்குப் பாலும் வாங்கிச் சாப்பிட்டுப் போங்களென்று வருந்திக் கொடுக்க, இவர் வேண்டியதில்லையென்று எவ்வளவோசொ ல்லியும், கேளாமல் துட்டைக் கொடுத்துவிட்டுப் போய்வி ட்டாள். இதை அவர் வந்து சொன்னபோது, தேவன் அவ ளை ஆசீர்வதிக்க ஜெபம்பண்ணினோம். பால்வாங்கியிருந்த படியால் அந்தத் துட்டுக்கு அவல்வாங்கிச் சாப்பிட்டோம். சாப்பாடாகிறவரையில் இது பசிதாங்கிற்று' என்பதே. இராத்திரி 11 மணிக்குக் கூடாரம்போய்ச் சேர்ந்தார்கள்.

இவரும் இவர் கூட்டாளிகளும் ஆற்காடு, வேலூர் மார்க்கமாய்ப் பிரயாணம்பண்ணி, அங்கங்கே கண் ட சனங்களுக்கெல்லாம் பிரசங்கம்செயது, புஸ்த கங்கள் கொடுத்து, இரவும்பகலுமாய் தங்கள் வே லையைக் கவனமாய்ப் பார்த்து, பெப்ருவரிமீ 10உ சேலம்வந்துசேர, மேடோஸய்யர் குருப்பட்டம்பெ ற நீலகிரிமலைக்குப் போய்விட்டார். மற்றவர்களோ தெற்கே பிரயாணஞ்செய்து, கடைசியாய் பெப்ரு வரிமீ 28உ விருதுபட்டிக்குவந்தார்கள். பிற்பாடு வெள்ளூர்வழியாய் ஸ்ரீவில்லிபுத்தூர் போய்ச்சேர்ந் து, வேலை ஆரம்பித்து, ஒரு வாரத்துக்குள்ளாக வெ ன்னையருக்கு சுரம் கண்டது. சிலநாள் ஔஷதம்

கொடுத்தும் சுகம் வராததால், இராக்லாந்தையர் இவரை மதுரைக்குக்கொண்டுபோனூர். கொஞ்சம் சுகப்பட்டபோது அவரை அங்கே விட்டுவிட்டு இவர் வேலை ஸ்தலம்போக, அந்த சந்தற்பத்தில் மதுரை வைத்தியர், பென்னையர் சுகவிருத்திக்காக, அவர் சகோதரரிருக்கும் லங்கைத்தீவுக்குப்போவது நலமென்று அபிப்பிராயப்பட, இது சங்கதியைக் கேட்டு, வந்ததெல்லாம் வரட்டுமென்று சொல்லி, எல்லாப் பாரத்தையும் சுவாமிமேல் போட்டார். கொஞ்சநாளுக்குள்ளாக மேடோஸய்யர் வந்துகூடினூர். வென்னையர் வந்து சேரவோ பதினைந்துமாசம் சென்றது. இந்த மூத்திறத்தாரும் தேசாந்தரப் பிரசங்கம் நடப்பித்துவந்த விவரம் சீமையிலிருந்து மேடோஸய்யர், பிற்பாடு எழுதின காகிதத்தினூல் நன்ருய்த் தெரியவருகிறது. எப்படியென்ருல்,

'வடதிருநெல்வேலியென்று சொல்லுவது திருநெல்வேலி ஜில்லாவில் ஐந்திலொருபங்குகொண்டது. அது 1400 சதுர மயில். ஜனத்தொகை. 2,70,000. இதற்குள்ளிட்ட கிராமங்கள், 1385. பாரிக் கிராமங்களில் 500 வீடும், சொற்பக் கிராமத்தில் 5 வீடுமாயிருக்கும். எல்லாத்திலும் பெரிது ஸ்ரீவில்லிபுத்தூர். அதின் குடிசனம் 2,2000. சிவகாசியில் குடிசனம் 10,000. சில கிராமங்களில் 2000, 3000, பேர் வரையிலுண்டு. ரேனியூஸ் ஐயர் காலமுதல், திக்குக்கொருவராய் அஞ்ஞானிகளுக்குள் சிதறியிருக்கிற சில கிறிஸ்தவர்களுண்டு. இவர்களுக்கும், அஞ்ஞானிகளுக்கும் அதிக வித்தியாசம் தோன்றவில்லை' என்பதே.

ஆரம்பத்தில் ஒரு சிறு வட்டகையில்மாத்திரம் பிரசங்கித்தார்கள். தெற்கேயிருந்து சில உபதேசி

களை மிஷனெரிகளனுப்ப, வட்டகை பெரிதாயிற்று. இவர்களெல்லாரும் இரண்டு ஆறுமாசத்துக்கு ஒருக்கால் வட திருநெல்வேலி கிரமாந்தரமெங்கும் கூடார வாசஞ்செய்து, காலையிலும் மாலையிலும் பிரசங்கித்துவருவார்கள். உச்சி உருமங்களில் சனங்கள் கூடாரத்துக்குவந்து கேட்பார்கள். வாரத்திற்கொருமுறை கூடாரத்தைப் பேர்த்து அடிப்பார்கள். இவர் இவ்வளவாய் மற்றவர்களுக்கென்று பிரயாசப்பட்டுவந்தபோதிலும், தம்முடைய ஆத்துமநிலைமைக்குறித்துக் கவலையற்றவரா யிருக்கவில்லை. அதிக சிரத்தையுடையவராகவேயிருந்தார். இதைப்பற்றி மேடோலைய்யரும், பென்னையரும் சொல்லுகிறது.

'தள்ளுபடி ஆகமவாசிப்பை முற்றிலும் நீக்கி, அதற்குப் பதிலாக வேறு வேதாகம அதிகாரங்களைச் சேர்த்து, ஜெபபுஸ்தக ஒழுங்கைக் கையாடிவந்தார். காலைதோறும் ஒருமணிநேரம் ஜெப தியானத்திலிருப்பார். இருதயத்தில் உதயமாகும் சுய உணர்ச்சியைத் தூண்டிக் காகிதங்களில் குறித்துக்கொண்டு, அவைகளைக்கொண்டு மற்றநேரங்களில் தற்பரிசோதனை செய்வார். முழங்காற்படியிட்டு அதிகநேரம் ஜெபம்பண்ணுகிறாரென்று, மற்றவர்கள் எண்ணிக்கொள்ளாதபடி இவர் உளுக்காந்துகொண்டு, ஜெபங்களை எழுதிக்கொண்டே ஜெபம்பண்ணுவார்' என்பதே.

அவர் வைத்த குறிப்புகளில் இரண்டொன்றை இவ்விடத்தில் காட்டுவது அவசியம்.

'தாழ்மையாயிருக்கக் கற்றுக்கொள். என்னைப்பார்க்கிலும் மற்றவர்கள் நன்றாய்த் தமிழ்ப் பேசுகிறார்களே என்கிற பொறாமைமனசே உனக்கு வேண்டாம். உன் கெட்டித்

தனத்தை மற்றவர்கள் அறியவேண்டுமென்று விரும்புகிருயா? உன் பட்டத்தைக்குறித்தும் நீ முன்பார்த்த சம்பிரதி அந்தஸ்தைக்குறித்தும் மேன்மைபாராட்டுகிருயா? நீ எல்லாருக்கும் தலைமையாயிருக்கவும், அதிகப் பத்திவிசுவாசமுள்ளவனென்று பேர்பெறவும் விரும்புகிருயோ? உன் குற்றத்தை ஆரும் எடுத்துக் காட்டும்போது உக்கிரம் கொள்வாயோ? உன்னை மிஷனெரியென்று மற்றவர்கள் அசட்டைபண்ணுகிறதினுலே நீ துக்கப்படுவாயோ? நான் கோபப்படுவது நல்லதோ, சுவாமி! எனக்கிதை மன்னியும். நான் இன்னதைச் செய்யவேணுமென்று போதியும். புத்தி கற்பியும். தீன் இஷ்டம் பேணி, பிறரை மனம்நோவாதபடி செய்யும். இரண்டுகாரியத்திற்காக உமது காலைப் பிடிக்கிறேன். உம்முடைய மகிமையை நாடி, உமக்கு ஊழியம் செய்ய உமது ஆவியைத்தாரும். உம்மைவிட்டு என்னைப் பிரிவினைப்படுத்தும் பாவங்களை நீக்கிப்போடும். கடமை கழிக்கிறதற்கென்று ஒப்புக்குப் பிரசங்கியாமல், ஆத்தும கவலையோடு பிரசங்கிக்க அருள் செய்யும்' என்று எழுதினுர்.

இவர் பஹிரங்கமாய்ச்செய்த பணிவிடையில் பின்னும் சில காரியங்களுண்டு. இவருடைய பிரயாசையைக்குறித்து மேடோஸய்யரும், பென்னையரும் எழுதுகிறது,

'தேசாந்திரி மிஷனெரியாக இவர் வெகுவாய் உழைத்தார். வருத்தங்களுக்கு அஞ்சாத கண்டன். தூர கிராமங்களுக்குத் தாமே போவார். தண்ணீர், சேறு, சகதி இதுகளிருந்தாலும், மனம் சடையாமல், சப்பாத்தையும் மேல்ஜோட்டையும்கழற்றி கையிற்பிடித்துக்கொண்டு, சரசரவென்று நடந்துபோய், தண்ணீர்கண்டவிடத்தில் கழுவிக்கொண்டு ஊருக்குள்ளேபோவார். ஒருநாளையில் மூன்று நாலு கிரா

மங்களுக்குப் போவார். புதிதாய்க் கிறிஸ்தவர்களானவர்க ளைப் போய்ப் பார்க்க, வெகுதூல பயணம்பண்ணினதை யும், மரத்தடியிலும் அருநிழலிலும் குச்சுகளிலுந் தங்கின தையும் பார்க்க எனக்கே கண்ராவியாயிருந்தது' என்பதே.

'நான் ரெட்டியபட்டியிலிருக்கிறபோது என் சுயம்பாகி குடித்து, வெறித்து எனக்கு மனநோவுண்டாக்கினான். இதற்கென்ன செய்கிறதென்று கலக்கமாயிருந்தது. இதை இராக்கிலந்தையருக்குத் தெரியப்படுத்தினதின்மேல் அவர் உடனேவந்து, காரியத்தைவிசாரித்து, அவனைத்தள்ளிப்போடும்படி உதவிசெய்தார். அத்தருணத்தில் அவருடைய குதிரைக்கு ஏதோ ஒரு வியாதி கண்டது. அது பிழைக்கமாட்டாதென்று நாங்கள் நினைத்தோம். அவரோ இதைப் பரவாய் பண்ணமல் வேலைமேலேயே கப்தியாயிருந்து, கால்நடையாய் மூன்று மைலுக்கப்பாலிருந்த கூடாரத்திற்கு நடந்து போனார். களைப்பும் தவிப்பும் இவருக்கு ஒரு பொருட்டல்ல. இவர் வெகு தூலயாய் நடந்து பிரயாணம்பண்ணினதே இவருடைய சடுதி மரணத்திற்குக் காரணமென்றெழுதினார்கள்.

தேசாந்தர மிஷனெரியாய் இவரிடத்தில் விளங்கிய இன்னொரு காரியமுண்டு. அது சகலரிடத்திலும் இவர் அதிகமாய் வைத்த நேசந்தான். இந்து உடன்வேலையாட்களிடத்திலும் அங்கிலேயரிடத்திலும் அன்புபாராட்டிவந்தார், இதைப்பற்றி ஒருவர் எழுதுகிறது,

'இவர் இரண்டாவதாய் சென்னபட்டணம்வந்து சேர்ந்தவுடனே, ஞானமுத்து என்னப்பட்ட தன் வேலைக்காரனைக் கண்டு, கையைப்பிடித்துக்கொண்டு பட்சமாய்ப் பேசினார். அன்பு ஜொலித்துக்கொண்டிருக்கிற அவருடைய முகத்

தைப் பார்க்கிறதே மனசுக்கு இன்பத்தைக் கொடுக்கும். அந்தியகாலத்திற்குமுன்னே இவருடைய அன்பிலே அதிக உருக்கம் விளங்கிற்று. அஞ்ஞானிகளைக் கட்டித் தழுவிக் கொண்டு கனிவாய்ப் புத்திசொல்லுவார்.

உதவிசெய்யவந்திருக்கிற ஒரு உபதேசி வியாதிப்பட்டால், கட்டிலையுங்கூடக் கொடுத்துவிடுவார். இந்துக் கிறிஸ்தவர்கள் அவரைப் பார்க்கவந்தால் அவர்களுக்குக் கூடாரமும் காலிசெய்துவிட்டு, அவர்களைத் தம்மோடுகூடவே வைத்துச் சாப்பாடு கொடுப்பார்.

இப்படி அன்புபாராட்டுகிறவர் பேரில் யாருக்கு வெறுப்புண்டாகும், யார்தான் இவரை நேசியார்கள்? இதினால்தான் இவரும் இவரோடே சேர்ந்தவர்களும் ஒருமைப்பாடாயிருந்தார்கள். இதை மகா விழிப்பினாலும், உண்மையான செபத்தினாலும் தற்காத்துக்கொண்டார்கள். மேலும் இவரிடத்திலிருந்த ஜெபமுயற்சியே இவரைச் சேர்ந்தவர்களுக்குள்ளும் சுகந்தம்போல வியாபித்தது. இதை வந்துபார்த்த சர்ச்சுமிஷன் சம்பிரதியாகிய நைற்றையர் சொல்லுகிறதாவது,

தேசாந்தர மிஷனைச் செம்மையாய் ஆட்டுவிக்கிற சூட்சம ஜெபந்தான். இதுவே அவர்களெல்லாரையும் சுழற்றிவிழுக்கிறது. புறப்படுமுன்னும் திரும்பிவந்த பின்னும் காலையிலும் மாலையிலும் ஜெபத்திலேயே நிற்கிறார்கள். மதியம் வேலைக்காரருக்கு ஜெபம்வைக்கிறார்கள். சாப்பிட்ட பின்னும் கூடி ஜெபம்பண்ணுவார்கள். இவ்விதமாய் நாளை ஜெபத்தோடு தொடங்கி ஜெபத்தோடு முடிக்கிறார்கள். ஜெபத்தை முயற்சியுங்களென்று சொன்னவர், இப்பேர்ப்பட்டவர்களுடைய பிரயாசத்தை ஆசீர்வதியாமல் போவாரா? தப்பாமல் ஆசீர்வதிப்பார்.

இன்னொரு சமையத்தில் ஷெ யார் எழுதியது,

தேசாந்தர மிஷனெரியாக இராக்லாந்தையர் கிடைத்தது எவ்வளவு பாக்கிம்! பாலியமிஷனெரிகளால் சில அநுகூலங்களிருந்தாலும், கிறிஸ்தவ அநுபவத்தில் அவர்கள் விளைந்தவர்களல்ல. இவரைப்போலொத்தவர்களோ, பேச்சினாலும் சாடையினாலுங்கூட மனசில்படத்தக்கதாய் பிரசங்கிக்கத்தக்கவர்கள். ஓரிடத்திலே காலைச்சாப்பாடு வேளைதப்பிச், சாப்பிட மதியம் சென்றுபோச்சுது. அப்போது அவர் பண்ணின ஜெபம் மறக்கத்தக்கதல்ல. 'கர்த்தாவே! பாவிகளாகிய எங்களுக்கு நீர் தயவாய் அளித்திருக்கிற இதுகளுக்காகவும், மற்றதுகளுக்காகவும் கிறிஸ்துவின்மூலமாய் உமக்கு ஸ்தோத்திரம்' என்பதே. பிரார்த்தனைத்தொனியே பிரசங்கம் பண்ணினதுபோலிருந்தது. இருதயத்தினின் றெழும்பி, இருதயத்திற்குள் பாய்ந்தது. மிஷனெரிகள் இவரைப்போலிருந்தால் பிரிவினையேது. பேதகமேது? அதுகள் தலைநீட்டவே மாட்டாது. உங்களுக்கு முதன்மையாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனும், எல்லாருக்கும் சிறியவனும், எல்லாருக்கும் பணிவிடையாளுமாயிருக்கக்கடவன் என்பதை செவ்வையாய்க் கற்றுக்கொண்டார். தம்முடைய உடன்வேலையாளுக்கிருக்கிற சாமர்த்தியத்தைக் கண்டு அதிகச் சந்துஷ்டியடைவார்' என்பதே.

இவ்விதமாய் அவர் தாம் கையேற்றுக்கொண்ட வேலையை, அதிகப் பத்திவைராக்கியத்தோடு நடப்பித்துவந்தார் என்பதற்கு இன்னும் அநேக சாட்சிகளுண்டு.

# VIII. அந்திய காண்டம்.

பரிசுத்தவான்களின் மரணம் கர்த்தருடைய பார்வையில் அருமையானதென்று வேதம் வசனித்திருக்கிறது. இவருடைய கடைசி முடிவும் அப்படித்தானிருந்தது. இவர் இந்த நாட்களில், ஓய்வுநாள் பிரசங்கங்களிலெல்லாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பாய் எடுத்துச் சொல்லுவார். தீர்க்கதரிசன ஆகமங்களின் தாற்பரியங்களேயும் அதிகமாய் ஆராய்ந்து வருவார். இவர் மரிக்க எப்பொழுதும் ஆயத்தப்படுகிறவராயிருந்தார். இதுவே இவருக்கு இன்பமாயிருந்தது.

இவர் மரிக்க இரண்டு வருஷத்துக்குமுன், எழுதிவைத்த சாசனத்தின் முதல்பிரகரணத்தை இவ்விடத்திற் காண்பிப்பது மேற்படி விஷயத்திற்கு அநுகூலமாயிருக்கும். இதைச் செய்யும்படி ஏவிவிட்ட காரணம், இவர் ஒரு ஞாயிற்றுக்கிழமை 'ஒருவரும் கிரியை செய்யக்கூடாத ராத்திரி வருகிறது' என்கிற வாக்கியத்தின்மேல் பிரசங்கம்பண்ணினபின், இவருக்குள் தாம் இச்சமையத்தில் இறந்துபோகிறதானால் செய்யாமல்விட்ட காரியம் எது என்கிற எண்ணம் உண்டானது. இதையிட்டே இந்த மரண சாசனத்தை எழுதினார். எப்படியென்றால்,

'கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை உள்ளிட்ட கார்ப்பஸ் கிறிஸ்ற்றைசாலையில் பெல்லோவரிசையும், பி. டி. பட்டமும் வாங்கி, சர்ச்சுமிஷன் சங்கத்து அனுசரணையில், வடதிருநெல்வேலிக்கு மிஷனெரியாயிருக்கிற தோமாஸ் காஜெற்

றன் இராக்லாந்து, குருப்பட்டம்பெற்றவனுகிய நான் தேவகிருபையால் நல்ல சுகத்தோடிருந்தாலும், காயம் அநித்தியம் என்று யோசித்து, மரணத்திற்கு ஆயத்தப்பட விரும்பி, எல்லாவற்றிற்கும் முதலாய் என் ஆத்துமாவை தேவ குமாரனும் என் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்து வசம் பக்தியோடு ஒப்புவித்து, மரணவேளையில் பிரக்ஞையிருந்தாலும், பிரக்ஞை தப்பினுலும் அதை அவர் தம்முடைய அருமையான இரத்தத்தால் கழுவி, தம்முடைய ஆவியால் சோகரீயப்படுத்தி தம்மிடம் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்கிறதுமல்லாமல், என் ஆயுசுகாலமுழுவதும் எனக்கருளிய அளவிலடங்காத இகபர நன்மைகளுக்காக மனப்பூர்வமாய் அவருக்குத் தோத்திரம் செலுத்துகிறேன்' என்பதே.

அக்காலம் முன்னும் பின்னும் ஏழு மாசத்துக்குள்ளாக எவரி, பேரன்புருக்கென்ற இரண்டு மிஷனெரிகள் பேதியினுல் மரிக்கும்போது, இவர் கூடவிருந்து மரணவஸ்தையைக் கண்ணுலே காணும்படி நேரிட்டதே இவரும் மரணத்தை வாஞ்சிக்கும்படி ஏதுகரமாயிற்று.

சில மாசங்களாய் இவர் தேக அசௌக்கியத்தால் வருத்தப்பட்டார். அந்த வருஷத்து அடைமழையினுலும், கொடும் பனியினுலும் இருமல் கண்டு வருத்தப்பட்டார். கொஞ்சநாளைக்குப் பிரசங்கம் பண்ணுமலிருந்தால் இருமல் போய்விடுமென்று இவர் நினைத்தும், அப்படியாகவில்லை. 1858 ம் வருஷம் ஜுபிலீ சங்கக்கூட்டங்களுக்காக பாளையங்கோட்டைக்குப்போயிருந்த காலத்தில், வைத்தியரிடத்தில் யோசனை கேட்க, இவர் கிராமாந்தரம் போகாமல் சிவகாசியில் ஸ்தானியாயிருப்பது உத்

தமமென்று அவர் சொல்ல, அப்படியே போயிருந்து, அங்கே பேச்சுக்கான வேலைகளைப் பாராவிட்டாலும், கணக்குவழக்குகள் பார்த்துக்கொண்டு, உடன் வேலையாட்களுக்கு உபயோகமான யோசனைகளைச் சொல்லிக்கொண்டு, உபதேசிமார்களை விசாரித்துவரலாமென்று நினைத்தார். ஆகிலும் அவருக்கு மரணகாலம் சமீபித்தது. இரண்டு மாசம் அந்தப்பிரகாரம் தம்முடைய கடமைகளைச் செய்துவந்தார். ஒருநாள் திடீரென இரத்தாசயம் வெடித்து, இரத்தம் அபரிமிதமாய்க்கண்டு, தேகவியோகமானார். இதின்விவரம் ராய்ஸ்ற்றன் சம்பிரதியாருக்கு பென்னையர் எழுதின காகிதத்தினால் தெரியவருகிறது.

'எங்கள் வடதிருநெல்வேலி மிஷனுக்கு வந்த நஷ்டத்தை என்ன சொல்ல! மலைவு கொஞ்சமல்ல. அது கர்த்தருடைய செயலே. இப்போ பறிகொடுத்ததைக்குறித்து ஒருவன் சாமீ! எதை எடுத்தாலும் இதைமாத்திரம் தொடாதிரும் என்று அபயமிடுவானானாலும், அதுவும் இப்போ அத்தாயமாய்ப்போனபடியால், அறைவாங்கின பிள்ளையைப்போல், அப்பா உமது சித்தமே ஆகட்டும், என்றுமல் இவன் என்ன சொல்லுவான்? இந்தப் பேச்சைக்கொண்டு, சகோதரனாகிய இராக்லாந்தையருடைய ஆத்துமாவை திடீரென கர்த்தர் தம்மிடத்தில் சேர்த்துக்கொண்டார் என்று அறிந்துகொள்வீர். நிலா காலுகிறதை அவர் பொழுது விடிந்ததென்றெண்ணி, எழுந்திருக்கும் வழக்கத்திற்கு முந்தித்தானே எழுந்து, சீமைக் காகிதங்களையும், உமக்குப் பதிலெழுதின காகிதத்தையும் ஒரு ஆள்வசம் அனுப்பிப்போட்டு, வேதம்வாசித்து, அந்தரங்க தியானஞ்செய்து, விடிந்துவரும் சமையத்தில் கொஞ்சதூரம் உலாவி திரும்பிவந்து, சாப்பிட்டுப், பாளையங்கோட்டையிலிருந்து வந்த காகிதங்களுக்

குப் பதிலெழுதிக்கொண்டிருந்து, சற்றே ஆயாசமடைந்த வர்போல கட்டில்மேல் படுத்திருந்து, வேலைக்காரருடைய ஜெபவேளைவந்தபோது நானும் அவருமாய் ஜெபம்பண்ணு கிற அறைக்குப் போனோம். ஜெபமுடிந்தவுடனே அவர் குளிக்கிற அறைக்குப்போய் என்னைக் கூப்பிட்டு பயப் படாதேயும், இது நான் வாயாலெடுத்த இரத்தம் பாரும் என்றார். அவரைக் கைத்தாங்கலாய்க் கட்டிலுக்குக் கூட் டிக்கொண்டுவந்தேன். இரத்தம் குபீரென்று வாயிலே வந் தது. நான் கர்த்தருடைய கையிலிருக்கிறேன் என்பதுபோ ல சொல்லி, இன்னும் இரத்தம் வந்ததினால் மேற்சட்டை யைக் கழற்றி, புன்னகையோடு "இயேசுவே!" என்று கட் டிலில் சாய்ந்தார். க்ஷணநேரத்தில் ஆத்துமா பிரிந்துபோயி ற்று. எவ்வளவோ அருமை பெருமையானவர். அவரைப் பார்க்க முகம் எவ்வளவு களைபொருந்தியிருக்கிறது. அழு துகொண்டிருந்த வேலைக்காரர் அலுத்துத் தூங்குகிறார்கள். நான்மாத்திரம் பிரேதத்தோடிருக்கிறேன். வெளியே பெட்டி செய்கிற தச்சனுடைய கொட்டாப்புளிச் சத்தம் கேட்கிற து. சீக்கிரம் யோசேப்பு கொருநேலியுஸ் வருவார். உதய த்தில் சத்தியநாதன் வருவார். கல்போதுமுதலான கிராமங் களிலிருந்து சனங்கள் அழுதுகொண்டு வருவார்கள். எண் ணிறந்த பாடகரோடுகூடி துதிபாட இவரும் பரலோகம் சேர்ந்தார். மீட்கப்பட்ட இன்னொரு பாவி சங்கீத சபை யில் இன்றுபோய்க் கூடினார். இந்த நாலுநாளும் அவரோ டுகூடி நான் அனுபவித்த ஆனந்தத்தை என்ன சொல்ல! அவருக்கு வயது 43. அவர் மரித்தது, அக்றோபர் மீ 22உ. சீவன் பிரிந்த இடம் சிவகாசி. இவரைப்போல பாவத்தைக் குறித்துப் பச்சாதாபப்படுகிறவர்கள் அருமை. இப்படிப் பட்டவர்களுக்கு தேவன் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தங் கள் எவ்வளவு அருமையானவைகள்!

தேவபுத்திரா உன்னுட
சிலாக்கிய மா பெரிது

சருவவல்லவர் கரம்
  என்றும் உன்னைத் தாங்குது
உன் விண்ணப்பம் அவருட
  செவியிலே ஏறுது
சிறந்து வாழ்ந்து அமைதலாய்
  மரித்து மோட்சம் சேர்ந்திட்டாய்.

'நாம் சாக எத்தனை மாசமோ, எத்தனை நாளோ, எத்தனை நாழிகையோ நாமறியோம். 'நான் பிரியுங்காலம் வந்தது, நல்ல போராட்டம்பண்ணியிருக்கிறேன், என் ஓட்டத்தை முடித்திருக்கிறேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன், இதுமுதல் நீதியென்னும் கிரீடம் எனக்காக வைத்திருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். ஆதலால் சகலத்திலும் விழிப்பாயிரு, துன்பத்தைச் சகித்துக்கொள், சுவிசேஷகனுடைய ஊழியத்தைச் செய்யென்று நமக்கு அவர் சொல்லுகிறதைப்போலிருக்கிறது'

இன்னொரு காகிதத்தில் இவர் சொல்லுவது,

கர்த்தர் அவரை மோட்சத்துக்குக் கொண்டுபோக அக்கினி இரதம் அனுப்பினதுபோலிருந்தது. அவரை இரட்சகர் சடுதியாய் தம்மண்டை அழைத்துக்கொள்ளச் சித்தமானார். அவரை கிடைவியாதியில் கிடக்கவிடுவாரேயானால், ஆளும் பேரும் இல்லாததினால் அதிக அவஸ்தை உண்டாகுமென்றெண்ணி, கர்த்தர் இவ்விதமாய் அழைத்துக்கொண்டாரோ, ஆர் அறிவார்? செபத்திலிருக்கும்போதே இயேசு கைகொடுத்து சிறந்த பரதீசுக்கு இழுத்துக்கொண்டார். அஞ்சாதேயும் என்றுமாத்திரம் அவருக்குச் சொன்னேன். அவருக்குக் கேட்டதோ தெரியாது. இயேசுவென்கிற நாமம் அவருக்கு எவ்வளவோ மதுரமாயிருந்தது' என்பதே.

அவர் கடைசியாய்உழைத்தது சிவகாசியில். அவர் அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையும் அங்கேதான். பிரதான தூதனிடும் எக்காள முழக்கங் கேட்கும்வ

ரையில் ஜடம் அங்கே பத்திரமாயிருக்கிறது. ஆத்துமாவோ எசமானுடைய சந்தோஷத்தைப் பெற்றுப், பேரின்பவீட்டில் பாக்கியமாய் வாழ்ந்திருக்கிறது.

---

## அநுபந்தம்.

இவரது சிறந்த இலக்ஷணங்களையும், இவர் பிரயாசத்தால் விளைந்த பலன்களையும் குறித்து மற்றவர்கள் சொல்லியிருக்கிறதைக் கடைசியாய் எடுத்துக் காட்டுகிறோம்.

சென்னபட்டணத்து அத்தியக்ஷர், இவர் மரணத்தின்பேரில்செய்த உபந்நியாசத்திற்கு ஆதார வசனம், வெளிப்படுத்தல் 15. 3. அவர் சொன்னது,

'மரித்துப்போன இந்த உத்தம ஊழியக்காரனுடைய சிறந்த லக்ஷணங்களை இலேசாய்க் காணலாம். இவர் தம்மை உலகத்தோடு சுத்தமாய் சம்பந்தப்பட்டவரல்லவென்று காண்பித்தார். அஷ்ட சம்பத்தும், அதன் இன்பமும், இவர் பார்வைக்கு ககசாகூளம்போலிருந்தது. சுமார் பத்து வருஷம் நான் இவரோடு பழகிவந்ததில், பத்தியில் முற்றி வருகிறவராய் கண்டேன். பிறத்தியார் பார்க்கவும் மெய்க்கவும் ஒன்றையும் செய்கிறவரல்ல. பரம எசமானின் பார்வையே இவருக்கு முக்கிய திருஷ்டி. இவர் உலகத்திற்கு ஒரு பரதேசிபோல நடந்தார். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானுல் ஆவியின் கனிகள் இவரிடத்தில் பழுத்துக் குலுங்கின. ஒன்றிலும் ஓட்டுப்பற்று வையாமல் கிறிஸ்துவே சமஸ்தமுமென்று பத்திமுத்தியாய் நடந்தார். எவ்வளவோ உணர்வோடு பிரசங்கம் செய்வார். சீவன், சுகம், செல்வம், மேன்மை, சகலத்தையும் சுவிசேஷபிரபலத்திற்கே மனுேற்சாகமாய் தத்தம்பண்ணினுர். பரோபகாரசிந்தையில் இவருக்குச் சரிக்கட்டினவர்கள் அருமை. உயிரையும் ஒரு

பொருட்டாய் எண்ணுகிறவரல்ல. இவ்விதம் அதிகமாய்க் கஷ்டப்பட்டதினாலே சடிதியாய் மரிக்கவுமானார். இப்படிப்பட்ட தேவதா பக்தனை இழக்கக்கொடுத்தோமே' என்று பிரலாபித்தார்.

காரியஸ்தர் சபையார் சொன்னது.

'இவரை நாங்கள் பதின்மூன்றுவருஷம்அறிந்திருக்கிறோம். சம்பிரதிவேலையிலும், தேசாந்தர மிஷனெரி அலுவலிலும், இவர் ஆழ்ந்த யோசனையையும், ஜாக்கிரதையையும், வெகு திராணியையும், கனிவான அன்பையுங்காட்டி நடந்தார். இப்படிப்பட்ட மானபாவர் மரித்தது துக்கமானதாயிருந்தாலும், இவ்வளவு காலமாவது எங்களுக்கு உதவியாயிருந்ததற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இவர் பரகதியடைந்தாரென்று சந்தோஷப்பட்டாலும், இவர் வேலைக்கு இவரைப்போலொத்த மனமுடையவர்களை கர்த்தர் எழுப்ப வேண்டுமென்று பிரார்த்தித்து நிற்கிறோம்' என்பதே.

பென்னையர் சொல்வது,

"இவர் தெய்வ பயமுடையவர். நான் உமக்குவிரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உம்மைப்பற்றிய பயத்தை என் இருதயத்தில் கட்டளையிடுமென்று அடிக்கடி ஜெபம் பண்ணுகிறவர், ஜெபதபமுடையவர், தன் பாவத்தைப் பற்றி அதிகமாய்க் கண்ணீர்விடுகிறவர், எதற்கும் முந்திக் கர்த்தரிடத்தில் உதவிகேட்கிறவர். கர்த்தர் இவருடைய மனுவுக்கு அநேகவிஷயங்களில் உத்தரவருளியும், தமிழ்ப் பாஷைவிஷயத்தில் சங்கடப்படும்படி விட்டது கவனிக்கத்தக்கது. பிரசங்கம் தமிழில் பிழையற எழுதக்கூடியவராயிருந்தாலும், நாடோடிய பேச்சிலோ அவ்வளவு தாராளமில்லை. ஆனபோதிலும் தேசாந்தரப் பிரசங்கத்தில் தமிழை வெகுவாய் முயற்சித்தார். வியாக்கியானம் செய்வதில் கூடியமட்டும் சமர்த்தர். சிக்குப்பிக்கான காரியங்களை வெ

கு சுளுவாக சேரிடுவார். யாருக்கும் இவர் கண்யஸ்தராக. விளங்கினார். இதையிட்டே இவரை தேசாந்தர மிஷனை ஆரம்பிக்க லாயக்குள்ளவராக எண்ணிக்கொண்டார்கள்'' என்பதே.

மூன்றுவருஷம் இதேமுயற்சியாயிருந்த இவர் பிரயாசையினால் அதிகப் பலன் தோன்றவில்லையே, ஏதுகாரணம் என்றிவர் உத்தேசித்து எழுதியிருக்கிறதை இவ்விடத்திற் சொல்லாமல் விடப்படாது.

I. அஞ்ஞானிகளால் உண்டாகும் தடை.

உலககாரியங்களில் அதிகப் பற்றுவைத்து மறுமையை மறந்தவர்களாய்த் திரிந்து, சிற்றின்பத்திற்கும் விக்கிரகாராதனைக்கும் சிறைப்பட்டு, கிறிஸ்தவர்களாகிறதால் ஜாதிகெட்டுப்போம், ஜனமிழந்துபோம், கொள்ளக்கொடுக்க வருத்தப்படுவோம், ஆஸ்திபாஸ்தி அற்றுப்போவோம் என்று பயப்பட்டு, கிராம அதிகாரிகளால் கெடிகலங்கி, இருக்கிறபடியிருப்போமென்றெண்ணிக்கொண்டு, கொடுக்கிற புஸ்தகங்களையும் அநேகர் வாசிக்கத் தெரியாததினால் காலதாமசம்செய்து மோசம்போகிறார்கள். துரைத்தனத்தார் விக்கிரகாராதனைக்குத் துணைநிற்கிறதைத் தொக்காய்வைத்துக் கெட்டுப்போகிறார்கள்.

II. தற்காலத்திற்கு தேவசித்தம் இப்படியிருக்கிறதாக்கும்.

III. நம்முடைய செய்பாகங்களில் பல குறைவுகளிருக்கலாம்.

இலவுகீக சம்பந்தமான எந்த உதவியையும் நாம் ஒருபோதும் செய்யப்படாதென்றிருக்கிற வைராக்கியமோ, நாமே பள்ளிக்கூடங்கட்டி உபதேசிமார் உபாத்திமார்களை ஏற்படுத்தாமலிருப்பதோ, பேச்சிலே சாமர்த்தியமில்லாததோ, ஜனங்களோடு அதிகமாய் ஊடாடிப் புழங்காததோ, மனசில்தைக்கத்தக்க புஸ்தகங்களில்லாத குறைவோ, பிரசங்கிக்

திற விதம் தெரியாத குறைவோ, எதுவோ தெரியவில்லை.

IV. நம்முடைய குணபாகங்களில் காணும் தோஷங்கள், உலகநினைவுகள், அற்பத்தனம், கோபம், படபடப்பு, தற்பொழிவு இவைகளால் காரியசித்தி லபிக்காதிருக்கலாம்.

V. நம்மோடு சம்பந்தப்பட்டிருக்கிறவர்களுடைய குற்றங்கள். நாம் வைத்திருக்கிற வேலைக்காரருடைய துர்நடத்தையினாலும், கிறிஸ்தவர்களென்று பேருக்குமாத்திரமிருக்கிறவர்களாலும், நமக்காக ஜெபம்செய்துவருகிறோமென்று சொல்லுகிற சிநேகிதர்கள் எதார்த்தமானபடி செபம்செய்யாததினாலும் காரிய ஸ்திதி இப்படியிருந்தாலும் இருக்கும். தேவகிருபையால் கொஞ்சப் பலன் கிடைத்திருக்கிறது. அநேகர் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். பல கிராமங்களில் புதிதாய் கிறிஸ்தவர்களாயுமிருக்கிறார்கள். கிறிஸ்துமார்க்க அறிவு இத்திசையில் நிரந்தரமாய் வியாபித்திருக்கிறது.''

இராக்லாந்தையர் உயிரோடிருந்தபொழுது அமேரிக்காவில் நடந்த ஆவியின் கிரியையைப்போல இந்தியாவிலும் நடக்கும் என்பதாய் உத்தேசித்திருந்தபடியே அவர் இறந்து இரண்டு வருஷத்திற்குப் பிறகு, வடதிருநெல்வேலியில் ஆவியின் அதிசய கிரியை ஆரம்பித்தது. இருநூறுபேருக்கு அதிகமானபேர் குணப்பட்டதுமல்லாமல், மற்றவர்களுடைய இரட்சிப்புக்காகவும் பிரயெத்தனப்பட்டார்கள். அஞ்ஞானிகளிடத்திலும், ஒருவகையான குலுக்கம் கண்டது. அவர் செய்த ஜெபத்திற்கு இக்காலத்திலும் பலனுண்டாகிவருகிறது. மெய்க்கிறிஸ்தவர்களுடைய தொகையும் அதிகரித்து வருகிறது. உத்தம உபதேசிமார்களும் அநேகராகிறார்கள். கோயில்களும், பள்ளிக்கூடங்களும் பெருக்கம். சபை

களும் இரள். அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் காண்கிறது. மேலும் சுற்றுப்புறங்களிலுள்ள மிஷன்வகை உத்தியோகஸ்தரும் சபைகளும் இவரால் பத்திவிருத்தியடைய ஏதுவாயிற்று. இதைப்பற்றிப் பலரும் சாக்ஷிகொடுப்பார்கள். இதற்குப் பிற்காலமும், இன்னும் எத்தனையோ நன்மை வெளிப்படும். கடைசிநாளே இவரால் விளைந்த பலன் சமூலமும் துலக்கும்.

இந்தப் புருஷோத்தமருடைய சரித்திரத்தை இவ்வளவு சொல்லிவந்தோம். தொகுத்துச்சொன்னால் இந்த மகானுபாவர் வேதத்தையே கைவல்யமாய்ப் பிடித்து, ஜெபத்தையே சஞ்சீவியாய்க்கொண்டு இரட்சண்ய போராட்டம் செய்துவந்தபடியால், ஜெயசாலியாய்ப் பரமபதமடைந்தார். இந்தக் காலமெல்லாம் இவருக்குப்பேச்சும் எண்ணமும் மேலோகத்திலிருந்தது. மனுஷருக்குள்ளே ஒரு சம்மனசுபோல சஞ்சரித்தார். இவர் நம்மைப்பார்த்து, 'பிரியசகோதரரே! கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக' என்று வானத்திலிருந்து சொல்லுகிறதுபோலிருக்கிறது. ஆகையால் 'உத்தமனைநோக்கி செம்மையானவனைப் பார்த்திரு, ஏனெனில் அவன் முடிவு சமாதானம்.'

சமாப்தி.